

கல்கி
KALKI 8-2-1959
30 நயா பைசா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 | இதழ் 28

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

விளம்பி௵ தை௴ 26

யாருக்கு லாபம்?

உண்மையை எடுத்துச் சொல்லும் தைரிய புருஷர்கள் உண்டா? பதவியையும் புகழையும் கண்டு அஞ்சாதவர்கள் உண்டா? பதவியும் புகழும் படைத்தவர்கள் கோபத்துக்குப் பயப்படாமல் தாங்கள் அறிந்த உண்மையைப் பேசுபவர்கள் இருக்கிறார்களோ என்று நாம் பல சமயம் எண்ணியதுண்டு. பிரிட்டிஷாரின் பலாத்கார ஆட்சியை எதிர்த்து நின்ற இந்திய மக்கள், சுதந்திரம் அடைந்த பின் நம் அதிகார வர்க்கத்தைக் கண்டே, நம் தலைவர்களைக் கண்டே இப்படிப் பயப்பட்டு, கோழைகளாகி வருகிறார்களே என்று வருத்தப்பட்டதுமுண்டு! இத்தகைய சூழ்நிலையில், அப்படியெல்லாம் மனச் சோர்வு அடைய வேண்டியதில்லை, நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் உண்மை, உண்மையே என்று துணிந்து பேசக்கூடிய பரம்பரையைச் சேர்ந்த புருஷர்கள் நம் நாட்டில் இன்றும் இருக்கிறார்கள் என்பதைக் காண்பித்து விட்டார், திரு கே. எம். முன்ஷி.

சில நாட்களுக்கு முன் திரு கே. எம். முன்ஷி காங்கிரஸின் நிலச் சீர்திருத்தக் கொள்கையைக் கடுமையாகக் கண்டித்தார். நில உடைமைக்கு உச்சவரம்பு கட்டுவதோ, கூட்டுறவு விவசாயத்தை மேற்கொள்வதோ பயன் தராது, சர்வாதிகாரத்தில் கொண்டு விடும் என்றார்.

இந்த எச்சரிக்கையை நல்ல முறையில் எடுத்துக் கொண்டு ஆலோசிப்பதற்குப் பதில் நேருஜி திரு கே. எம். முன்ஷி அவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார்.

சாதாரணமாக நேருஜியின் கோபத்துக்கானவர் வாய்மூடி மௌனமாக இருந்துவிடுவது வழக்கம். அந்த வழக்கத்துக்கு மாறாக, கே. எம். முன்ஷி அவர்கள் மீண்டும் நேருஜிக்கு நல்ல பதில் அளித்திருக்கிறார். தமது கருத்துக்களைக் காரணங்களுடன் விளக்கி யிருக்கிறார்.

திரு கே. எம். முன்ஷி அவர்கள் உணவு-விவசாய இலாகாக்களின் மந்திரியாக இருந்தவர். அவருக்கு நமது நாட்டு விவசாயத்தைப் பற்றித் தெரியும். நமது குடியானவர்களைப் பற்றியும் தெரியும். அவர் இப்பிரச்னையில் கருத்தைக் கூறுவதற்கு எல்லாவிதத்திலும் தகுதியுடையவர். அவர் சந்தேகத்துக்கிடமின்றித் தமது கருத்தைக் கூறிவிட்டார்.

“இந்தியாவின் உணவுப் பிரச்னை இரண்டு வருஷங்களில் தீர்ந்து விடுமென்று பிரதமர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் தோல்வி மனப்பான்மையினராகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. இரண்டு வருஷங்களில் இப்பிரச்னை தீர்ந்து விடுமென்பது மனித சாத்தியமான காரியமல்ல. எந்த இடத்திலும் வெற்றி பெறாத முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் அந்த லட்சியத்தை நோக்கிக் கணிசமான முன்னேற்றம் கூடக் காணமுடியாது. அதற்கு மாறாக விவசாயத்தில் உற்பத்தியைப் பெருக்கும் விஷயத்தில் மத்திய சர்க்காரிலும் ராஜ்ய சர்க்காரிலும் பொறுப்பு சிதறிக் கிடப்பதைப் போக்க வேண்டும். இரண்டாவதாக, விவசாயக் குடும்பங்கள் விவசாயத்தில் அதிக ஊக்கம் காட்டுவதற்கு வேண்டிய வசதிகளும் தூண்டுதல்களும் அளிக்கப்பட வேண்டும்..........

“ஒரு விவசாயி தன் நிலத்தைக் கூட்டுறவு விவசாயத்துக்குக் கொடுத்துவிட்டுத் தான் பண்ணையாளாக வேலை செய்யச் சம்மதிக்காவிட்டால், காங்கிரஸும் சர்க்காரும் நிர்ப்பந்தத்தை உபயோகிப்பார்கள் என்பதுதான் முக்கிய விஷயம். அத்தகைய நிர்ப

பந்தங்கள் உபயோகிக்கப்பட்டால், அதை யார் செய்தாலும், என்ன பெயரிட்டு அழைத்தாலும், அது சர்வாதிகாரம்தான். இத்தகைய சர்வாதிகாரம் கொல்லைப் புறத்து வழியாக நமது வாழ்க்கையில் புகுந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது சுதந்திரத்தில் நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும்.''

குடியானவர்கள் நலனுக்காக நீண்ட காலமாக உழைத்து வரும் பேராசிரியர் என். ஜி. ரங்கா அவர்களும் காங்கிரஸின் நிலச் சீர்திருத்தக் கொள்கையைக் கண்டித்துப் 'பஞ்சாப் ராஜ்ய விவசாயிகள் சம்மேளனத்தில்' பேசியிருக்கிறார்.

''அடுத்த பொதுத் தேர்தலில் ஜனங்களிடமிருந்து கட்டளை பெறும் வரையில் நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான நாகபுரி காங்கிரஸ் தீர்மானத்தை ராஜ்ய சர்க்காரோ மத்திய சர்க்காரோ கொண்டுவரக் கூடாது'' என்றும், ''கூட்டுறவுப் பண்ணை மூலமாகக் குடியானவர்கள் உத்தியோக வர்க்கத்தினரின் அடிமைகளாக்கப்படுவர்!'' என்றும் கூறுகிறார்.

இவற்றைத் தவிர சில நாட்களுக்கு முன் பங்களூரில் விவசாயிகள் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதற்குத் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் வந்திருந்து, காங்கிரஸின் நிலச் சீர்திருத்தக் கொள்கையைக் கண்டித்து முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

ஒரு ஜனநாயக சர்க்கார் என்றால், ஒரு சீர்திருத்தத்துக்கு இவ்வளவு எதிர்ப்பிருப்பதைப் பார்த்துத் தனது கருத்தை மீண்டும் ஆலோசிக்கத் தொடங்கும். ஆனால் நமது சர்க்காரோ பிடிவாதமாக இருக்கிறது! இவ்வளவும் எதற்கு? ஒரு பயனும் விளைவிக்காத ஒரு காரியத்துக்காக என்பது மிக எளிதில் புரிந்து விடும்.

நிலத்துக்கு உச்சவரம்பு கட்டி, நில முதலாளிகளிடமிருந்து சர்க்கார் பெறும் நிலத்தை, நிலமில்லாத உழவர்களுக்குக் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். உச்சவரம்பு திட்டத்தினால் பாதிக்கப்படுபவர்கள் வெகு சொற்பத் தொகையினர் என்று பிரதம மந்திரியே சொல்கிறார். பறிக்கப்பட்ட நிலத்தைக் கொண்டு நாட்டிலுள்ள தரித்திரத்தைப் போக்க முடியாது என்பது வெட்ட வெளிச்சம். இந்தத் திட்டத்தினால் சோஷலிஸம் ஒரு சாணும் அடைந்தவாறு ஆகாது. வேறு என்ன லாபத்துக்காக பறிமுதல் திட்டம்? நிலம் படைத்தவர்களைக் குற்றவாளிகளாக வைத்துக்கொண்டு அவர்களைத் தண்டிப்பதற்காகவா இந்தத் திட்டம்!

'நிலமில்லாதவர்களுக்கு நில விநியோகம் செய்யப்பட மாட்டாது; கூட்டுறவுப் பண்ணைகளை ஏற்படுத்துவதுதான் சர்க்காரின் திட்டம்' என்றால் அதற்குத் திரு கே. எம். முன்ஷி, திரு ரங்கா போன்றவர்கள் சொல்வதுபோல் சர்க்கார் குடியானவர்கள்மீது பலாத்காரம் நிச்சயம் பிரயோகித்தே தீரவேண்டியிருக்கும். பலாத்காரப் படுத்தப்பட்ட உழவர்கள் எத்தனை காலம் அமைதியாக இருப்பார்கள்?

மொத்தத்தில் இச் சீர்திருத்தங்களால் உணவு உற்பத்தி குறைந்து போகும் என்பது நிச்சயம். உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான் பெரும் பிரச்னை. பணக்காரர்களை ஏழைகளாக்குவதும், ஏழைகளைப் பணக்காரர்களாக்குவதும் அல்ல.

டிமில்லியின் மறைவு

பிரசித்திபெற்ற சினிமா உலக டைரக்டர் ஸெஸில் பி. டிமில்லி காலமான செய்தி கேட்டு உலகெங்கிலுமுள்ள சினிமா ரஸிகர்கள் துணுக்குற்றனர்.


சினிமா வெறும் பொழுது போக்கென்றும், பணம் திரட்டுவதற்காகவே ஏற்பட்டதென்றும் நம் நாட்டில் பல பட முதலாளிகள் சொல்லி வரும் காலத்தில், இதற்கு நேர்மாறான கருத்துக் கொண்டு வாழ்ந்தார் ஸெஸில் பி. டிமில்லி. மகத்தான லட்சியங்கள் கொண்ட படங்களை எடுத்து உலகமக்களின் மதிப்புக்கு உரியவராகிவிட்டார் ஸெஸில் பி. டிமில்லி.

ஏசுநாதர் வாழ்க்கையை 'கிங் ஆப் கிங்ஸ்' (மன்னருள் சிறந்த மன்னன்) என்ற தலைப்பில் ஒரு அரிய படம் எடுத்தார். உலகம் முழுதும் பரவியுள்ள கிறிஸ்தவ மக்கள் அந்தப் படத்தைப் பார்த்து, தங்கள் மதத்திலும் ஏசுநாதர் மீதும் வெறுப்புக் கொள்ளவில்லை! பக்தியே வளர்ந்தது!

அதேபோல் ஏசுநாதருக்கு முன்பிருந்த யூத நாட்டினரான மோஸஸ் என்ற மகானின் வாழ்க்கை வரலாற்றை ''டென் காமண்ட்மெண்ட்ஸ்'' என்ற தலைப்பில் வெளியிட்டார். மத உணர்ச்சிகளைப் புண்படுத்தாமல் இருப்பதற்காகவும், சரித்திர வரலாற்றுக்கு ஒத்த முறையில் இருப்பதற்காகவும் எத்தனையோ மத குருக்கள்மாரையும், பேராசிரியர்களையும் கலந்தாலோசித்துத் தயாரித்தார். பணம் சம்பாதிக்கும் நோக்கமில்லை என்பதைக் காண்பிக்கும் வகையில், அந்த 'டென் கமாண்ட்மெண்ட்ஸ்' படத்தினால் தமக்கு வரும் வருமானத்தையெல்லாம் தர்ம ஸ்தாபனங்களுக்கு வழங்கி விடுமாறு ஏற்பாடு செய்துவிட்டார் டைரக்டர் ஸெஸில் பி. டிமில்லி.

இப்படிச் சினிமாத் துறையில் சீரிய கலையுணர்வும், பக்தியுணர்ச்சியும் மிக்க ஒரு பெருந் தலைவர் மறைந்து விட்டார். அவரது மறைவு சினிமா உலகத்துக்கு மட்டுமல்ல; சினிமா ரஸிகர்களுக்கும் பெரு நஷ்டம். சினிமா பட முதலாளிகளுக்கும் டைரக்டர்களுக்கும் லட்சிய புருஷராக விளங்கிய ஒருவர் மறைந்து போய் விட்டார்.

காங்கிரஸ்காரர்களின் பாதயாத்திரை



நமது பண்பாட்டைப் பேணுவோம் - 2

தனி மனிதனும் தருமமும்

பாரதப் பண்பாட்டைப் பேணும் பெருநோக்குடன், மதுரை திருஞான சம்பந்தர் மடம், அஹோபில மடம், உடுப்பி பேஜாவர் மடம், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஆகிய பீடாதிபதிகள் சேர்ந்து, 'தமிழ் மக்களுக்கு விடுத்துள்ள இரண்டாவது அறிக்கையை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம். இவர்கள் விடுத்த முதல் அறிக்கை 11-1-59 கல்கி இதழில் வெளியாயிற்று.

—ஆசிரியர்

நமது தருமம் சாசுவதமானது. அதன் வெளித் தோற்றந்தான் பாரதப் பண்பாடு எனப்படுவது. தருமத்தைப் போஷித்து வந்தால்தான் பண்பாடு சிறப்புற்று விளங்கும். தருமம் செயல்படுவது மரத்தைப் போல. மரத்துக்கும் இலைக்குமுள்ள உறவுமுறையை ஒத்தது தருமத்துக்கும் தனி மனிதனுக்கும் உள்ள சம்பந்தம். இது அடிப்படையான உண்மை. இலைக்கு ஆயுட்காலம் குறைவு. மரம் தீர்க்காயுள் கொண்டது. மரத்தைப்போல் தருமம், நிலைத்திருப்பது. இலையைப்போல் தனி மனிதன் தோன்றி மறையும் தன்மையுள்ளவன்.

ஒவ்வொரு மரத்திலும் இலைகள் எல்லாம் ஒவ்வொரு ஆண்டிலும் புதிதாகத் துளிர்க்கின்றன. முதலில் சிறு கொழுந்தாகத் தோன்றி வளர்ந்து, பசுமையேறி, விரிந்து முழு இலையாவது கண்கொள்ளாக் காட்சி. வளர்ச்சி பெற்ற இலை மரத்தின்பால் தனக்குள்ள கடமைகளை நிறைவேற்றுகிறது. அந்த வேலைகள் முடிவடைந்ததும் பழுத்து, சுருங்கி, வாடி, இளைத்து, சருகாகிக் கீழே விழுந்து விடுகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் இதே ஓய்வில்லாத, மாறுபடாத தோற்றுவாய், பணி, மறைவு என்ற ஒரேவித வாழ்வுதான் இலைக்கு உண்டு.

இலையுடன் ஒப்பிடுகையில் மரம் சாசுவதத் தன்மை படைத்தது. மரம் எப்படிச் செயலாற்றுகிறது என்பது பரிசீலனைக்குரியது. அடி மரம் எல்லாத் திசைகளிலும் கிளைக்கிறது. பெரிய கிளைகளிலிருந்து சிறு கிளைகள் விசிறிப் போக்கில் விரிந்து வியாபிக்கின்றன. கப்பும் கிளையுமாகப் பரந்து பசுந் துளிர் வைக்கின்றது. இலைகள் வளர்ச்சியடைந்த நிலையில் மரம் அரும்பு கட்டுகின்றது. காலகதியில் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்குகின்றது. பிஞ்சு விட்டுக் காய் முற்றுகையில் பூக்கள் மறைந்து விடுகின்றன.

இலைகள் தாம் மரத்தைப் போஷித்துப் பூத்துக் காய்த்துப் பலிதமாகும்படி செய்கின்றவை. இலையின் வாழ்வு முழுசாக ஒரு வருஷங்கூட இல்லை. ஆனாலும், அது புரியும் சேவை ஜீவாதாரமானது. அது மரத்திலிருந்து பிறப்பது. அந்த 'இரத்தக் கடனை'த் திருப்பிக் கொடுத்து விட்டுத்தான் அது மறைகிறது.

இலை அப்படி என்ன செய்கிறது என்று கேட்கலாம். மரம் மூச்சு விடுவதே இலைகளின் மூலமாகத்தான். தானுண்ட நீரைத் தலையாலே இனிமையான பலவகைகளில் கொடுப்பதற்கு மரத்துக்குத் துணை புரிவது இலைதான். சூரிய கிரணங்களிலிருந்து ஜீவ சக்தியை இழுத்து மரத்துக்கு அனுப்புகின்றன இலைகள். இலையின் பசுமைதான் அந்த ஆகர்ஷணத்தைச் சாத்தியமாக்குகிறது. இலையிலுள்ள சின்னஞ் சிறு அணுக்கள் அதை வாங்கி மரத்துக்குத் திருப்பி அனுப்பிப் போஷாக்குச் செய்கின்றன. அந்தக் கடமை பூர்த்தியானவுடன், மரத்துடன் உள்ள பந்த பாசத்தினின்று இலை சிறுகச் சிறுக விடுபடுகிறது. அது முதிர்ந்து பழுத்துச் சருகாவதே ஒரு அழகு. சருகாகிக் கீழே விழுந்தும் வீணாவதில்லை இலை; மண்ணோடு மண்ணாகிக் கீழேயிருந்தும் மரத்தை வளர்க்கிறது. தருமம் என்கின்ற மரத்தின் விஷயத்தில் தனி மனிதன் என்ற இலைக்கு அதே பொறுப்பும் கடமையும் இருக்க வேண்டும். இதுதான் வாழ்க்கையின் நியதியாகும்.

தருமம் என்பது அடி மரம். தெய்வ பக்தி அதன் வேர். சமூகத்தின் பல்வேறு பிரிவுகள்தாம் கிளைகளும், உப கிளைகளும். தனித் தனியான கூட்டத்தைச் சேர்ந்தது போன்ற ஒரு தோற்றத்தைக் கிளைகளும், உப கிளைகளும் இலைக் கொத்துக்களும் அளிக்கின்றன. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் நோக்கம் ஒன்றே. கிளைக் கோடியில் உள்ள இலைக் கொத்து ஒவ்வொன்றும் ஒரு குடும்பம் போன்றது. ஒவ்வொன்றிலும் பூ, காய், கனி உண்டு. அதன் அடர்த்தியும் அளவும் மட்டும் வேறுபடலாம். ஆனால் அந்த வேறுபாடு



மாறுபாட்டைக் குறிப்பது அல்ல. ஒவ்வொரு தனி மனிதனைப் போலத்தான் ஒவ்வொரு தனி இலையும்.

எந்தத் தனி நபருக்கும் சொற்களை மட்டும் கொண்டு இலக்கணம் கூறிவிட இயலாது. ஒரே மாதிரியான இரண்டு முகங்கள் கிடையா. இரட்டைக் குழந்தைகளிடையே கூடத் தனித் தோற்றங்களைக் காணலாம். இப்படி இருந்தும்கூட மொத்தமாக மனத்தில் பதியும் பிம்பத்தைக் கொண்டு; எந்தக் குடும்பம், எந்தச் சாயல், எந்த வகை என்றெல்லாம்கூடத் தீர்மானமாகச் சொல்ல முடிகின்றது. ஒவ்வொரு வகை இலையும் ஒரு பொது வடிவமுள்ளதாக இருப்பது உண்மையே. ஆனால் ஒவ்வொரு தனி இலைக்கும் தனி மனிதனைப் போலப் பிரத்தியேகமான சிறப்புகள் உண்டு. முகச் சாயலும் கை ரேகைகளும் மனிதனுக்கு மனிதன் மாறுபட்டிருப்பது போலவே ஒவ்வொரு இலையின் நரம்பு அமைப்பும், மற்றொன்றினைப் போல் இல்லாமலிருப்பதைக் காணலாம். இந்த ஒற்றுமை இருந்த போதிலும் ஒரு முக்கியமான வேற்றுமையும் உண்டு.

இலையானது தனக்கு என்று எதையும் கேட்பதில்லை. தனக்கு வாழ்வு அளித்த மரத்தைப் போஷித்துப் பயனடையச் செய்வதுடன் அது திருப்தி யடைகிறது. அம்மாதிரி போஷாக்குத் தருவது, மரம் தொடர்ந்து தனக்குரிய பணிகளை அடுத்த ஆண்டில் சரிவரச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான். ஜீவ சக்தியை அளித்து மரத்துக்கு உரமேற்றி விட்டு, சர்வ சங்க பரித்தியாகம் செய்கின்றது இலை. ஆனால் மனிதன் அப்படி யல்ல. குண கருமங்கள், பாவ பேதங்கள், ஆசாபாசங்கள் அவனை ஆட்டி வைக்கின்றன. சுயநலம் பேணுகிறான்; தகராறிடுகிறான்; அமைதியைக் குலைக்கிறான்; தான் வாழ்வது தருமத்தை வாழ வைப்பதற்குத்தான் என்ற அடிப்படை உண்மையை அடிக்கடி மறந்து விடுகிறான். அறத்தில் நின்று, அன்பினால் இயங்கி, வாழ்வை அவன் நடத்த வேண்டியவன். சுயநலங்களையும் கோஷ்டி நலன்களையும் அவன் வளர்க்கலாகாது. சமுதாயம் முழுவதுமே இன்புற்று வாழச் செய்வதற்காகத் தருமத்தை வளர்க்கக் கடமைப்பட்டவன் மனிதன். மனித யத்தனங்களுக்கெல்லாம் மூலபலமாக உள்ளது தருமம். சுயநலமும் அலட்சிய புத்தியும் மேலோங்கினால் தருமம் தழைக்காது; விரைவில் அது பட்டுப் போகும். ஆகையால் தருமம் தழைக்க வேண்டுமாயின் அறவாழ்வு நடத்துவதன் மூலம் தனி மனிதன் அதைப் போஷிக்க வேண்டியவனாகிறான்.

நமது மதம் காலத்தை வென்றது. எண்ணற்ற சோதனைகளைச் சமாளித்தது. அதற்கு வரம்பு கிடையாது. உலகம் முழுவதின் க்ஷேமலாபமே அதன் குறிக்கோள். வேறு எந்த மதமும் இவ்வளவு பரந்த கருணை படைத்தது அல்ல. இது நாம் உண்மையில் பெருமைப்படவேண்டிய விஷயம். பாரத சமுதாயம் நேற்று தோன்றி, இன்று வாழ்ந்து நாளை மறையும் கூட்டம் அல்ல. நமது நாகரிகம் மிகத் தொன்மையானது. அறமும் அன்புந்தான் நம்மைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்திருப்பவை. உயர்ந்த கோட்பாடுகளை வகுத்து, அவற்றின் வழியே நின்று உயர்ந்தவர்கள் நமது மூதாதையர். தருமமும் நியாயமுந்தான் எங்கும் எப்பொழுதுமே நம் நாட்டில் ஆட்சி செலுத்தி வந்தன. நன்னடத்தையும், கட்டுப்பாடுந்தான் வெற்றியைத் தந்த 'சாதனங்கள்'. தருமத்தைப் புறக்கணித்துப் பிரிந்து சென்றனர் பலர். அதன் விளைவாக வந்தது அடிமை வாழ்வு. மறுபடியும் தருமத்துக்கு ஏற்றம் கொடுத்து, சம்பிரதாயச் சிறப்புடன் பாடுபட்டதன் மூலமாகத்தான் விடுதலை கிட்டியது. விடுதலைக்குப் பின் ஓங்க வேண்டிய தருமம், அதற்கு நேர்மாறாக க்ஷீணித்து வருவதைக் காண்கிறோம். நன்னடத்தை, நல்லொழுக்கம், தெய்வ பக்தி ஆகியவற்றை இடைவிடாது ஒவ்வொருவரும் தன் வாழ்க்கையில் வளர்ப்பதன் மூலமாகத்தான் இப்போதைய இடர்ப்பாடுகளினின்று விடுபட்டு, நல்வாழ்வை அடைய முடியும். இந்தச் சூழ்நிலையில்தான் நாட்டுக்கு நல்லபடி பணி புரிய இயலும்.

தனி மனிதனுக்கும் 'தருமத்துக்கும் உள்ள சரியான உறவு முறையைத் தெரிந்து கொண்டு, அதன் வழி நிற்க முற்பட்டால் மற்றப் பிரச்னைகளெல்லாம் சுலபமாகி விடும். தனி இலையைப் போல ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் தருமத்தின்பாலுள்ள கடமையைச் செய்தால் போதும். சொந்த வாழ்விலும் சரி, பொது வாழ்க்கையிலும் சரி, அறவழி நின்று உழைத்தாக வேண்டும். நமக்கு முன்னிருந்தவர்கள் தமது கடமைகளைச் செய்து தருமத்தைக் காப்பாற்றி வளர்த்து விட்டுப் போனார்கள். நம் காலத்தில் அது பட்ட மரமாகிவிடக் கூடாது. நாம் வாழும் காலத்தில் கடமையைச் செய்தால் தருமம் கேடின்றி வளரும். இனி வரும் சந்ததிகள் எதிர்காலத்தைக் கவனித்துக் கொள்வார்கள். கடவுளும் தருமமும் இணை பிரியாதவை. ஒன்றில்லாது மற்றொன்று இருக்க முடியாது.

வம்புச் சாவடி

தொக்கி

பத்திரிகைகளில் இப்போதெல்லாம், மத்திய சர்க்கார் மந்திரிகளின் பதவி பற்றி வதந்திகள் வெளிவருகின்றன அல்லவா? பிரதமர் நேரு சமீபத்தில் இவ்வித வதந்திகளைக் கண்டித்திருக்கிறார்.

சில தினங்களுக்கு முன், மத்திய உணவு மந்திரி ஸ்ரீ ஜெயின் பதவியை ராஜிநாமா செய்யப் போவதாக வதந்திகள் உலவின. இந்த வதந்திகளை ஸ்ரீ ஜெயின் மறுத்து, "அவ்வாறு நான் செய்ய நினைந்ததே இல்லை" என்று கூறியுள்ளார்.

வதந்திகளின் விசேஷமே இதுதான்! எந்த மந்திரி நிச்சயமாக ராஜிநாமா செய்ய மாட்டார் என்று தெரிகிறதோ, அப்பேர்ப்பட்டவரைத்தான் வதந்திகள் ஆட்டி வைக்கும். ஸ்ரீ ஜெயின் அவர்கள் தமது பதவியை வதந்திகளால் அசைக்க முடியாது என்று இப்போது நிரூபித்துக் கொண்டு விட்டாரல்லவா?

★

பத்திரிகை வதந்திகளை விட ஊர் வதந்திகளுக்கு இன்னும் அதிக சக்தி உண்டு. ஊர் வதந்திகளிலிருந்து சேகரித்துத்தானே பத்திரிகைகளில் வதந்திகளைப் போடுகிறார்கள்!

திராவிடக் கழகத் தலைவர் ஸ்ரீ ஈ. வெ. ரா பெரியார் திடீரென்று ஒரு நாள் முடி ஆட்சியை ஆதரித்துப் பேசினாரல்லவா? இந்த ஜனநாயக யுகத்தில் முடியாட்சியை ஆதரித்து ஒருவர் இங்கு பேசுகிறார் என்றால் இதைப்பற்றி ஊர்வதந்திக்காரர்களிடையே சலசலப்பு ஏற்படாமல் போகுமா?

எனது நண்பர், வதந்தி நாயகம் அவர்களை மவுண்ட் ரோடில் ஒரு நாள் சந்தித்து இதைப்பற்றிப் பேச்சுக் கொடுத்தேன். அவருடைய சகோதரர் ஸ்ரீமான் விதண்டாவாதமும் கூடவே நின்று கொண்டிருந்தார்.

"பார்த்து ரொம்ப நாளாயிற்று, சௌக்கியமா மிஸ்டர் நாயகம்?" என்றேன்.

"அது என்ன? நாயகம் சௌக்கியமா என்று கேட்கிறீர்கள்? எந்த நாயகத்தைக் குறிப்பிடுகிறீர்கள்? ஜனநாயகமா, தனிநாயகமா, பொதுநாயகமா?" என்று இடைமறித்தது விதண்டாவாதம்.

"ஜனநாயகமா? அதுதான் ஈரோட்டு நாயகத்துக்குக் கசந்து விட்டதாமே? முடி நாயகமல்லவா வேண்டுமென்கிறார்!" என்றது திருவாளர் வதந்தி நாயகம்.

"முடி என்றால் குடுமி என்றல்லவா அர்த்தம்? குடுமிகளைக் கண்டால்தான் ஈரோட்டாருக்குக் காபராவாயிற்றே?" என்றேன் நான்.

"அது எப்படியோ போங்க. முடிஆட்சிதான் வேண்டுமாம். பெரியார் சொல்லுகிறார். அதாவது பழைய காலத்து மன்னர் ஆட்சி வேண்டுமாம்....!"

"அவருக்கு அந்தமாதிரி ஒரு எண்ணமும் இருக்கலாம். திராவிடநாடு ஏற்பட்டால் அதில் தாம் ஏன் முடிசூட்டிக் கொள்ளக் கூடாது என்று கருதலாம். இதில் என்ன தப்பு?" என்று கேட்டது விதண்டாவாதம்.

"இதெல்லாம் ஆகாத காரியம். முடி ஆட்சிக்கு அவர் ஒருவரைத் தவிர வேறு யாரும் ஆதரவு அளிக்க மாட்டார்கள், இந்த ஜனநாயக காலத்திலே" என்று சொல்லி விட்டுத் தமது சட்டைப் பையில் மடித்து வைத்திருந்த தினத்தாள் ஒன்றை வதந்திநாயகம் வெளியே எடுத்தது. அதில் வெளியாகியிருந்த செய்தித் தலைப்பைச் சுட்டிக் காட்டிற்று. அதில், "திராவிடக் கழகத்தில் கட்சிப் பிளவு, கழகத்தைக் கலக்கப் பெரியார் நடவடிக்கை!" என்று வெளியாகி யிருந்தது.

"தமிழ் நாட்டில் காங்கிரஸுடன், முன்பு உறவாடியதன் பலன்தானோ என்னவோ, அதிலிருந்த கட்சிப் பூசல், முதலிய குணங்கள் தி. க. வையும் ஒட்டிக் கொண்டு விட்டது போலும்!" என்று கூறி வதந்திநாயகம் பெருமைப்பட்டது.

கைத்தறி வாரம்

நமது நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடி சுதந்திரமாக மக்கள் வேலை செய்து பிழைக்கும் தொழில் நெசவுத் தொழில். இது சுதந்திர பாரதத்தில் காங்கிரஸ் ஆட்சியில் எவ்வித இடையூறுமின்றிச் சிறக்கும் என்று எதிர் பார்க்கப் பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவு சிறக்க வில்லை. அந்தத் தொழில் சர்க்கார் உதவியின்றி வாழ முடியாத நிலையில் இருக்கிறது. மில் துணி உபயோகிப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு கைத்தறி நெசவை இன்று சர்க்கார் ஆதரித்து வருகிறார்கள். இப்படி எத்தனை நாட்கள் நடத்துவது என்று சர்க்கார் கைத்தறித் துணிக்கு அளிக்கும் நிதி உதவியை நிறுத்தி விடலாமா என்று அவ்வப்போது யோசித்து வருகிறார்கள். இது தெரிந்து, "உதவியை நிறுத்தக் கூடாது" என்று கைத்தறி நெசவாளர்களிடமிருந்து குரல் எழுவது வழக்கமாகி விட்டது. இதற்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் தேடியே யாகவேண்டும். ராஜாஜி கூறியது தவிர வேறு வழியில்லை.

இம் மாதம் 8ம் தேதியிலிருந்து 15ம் தேதிவரை சர்க்கார் கைத்தறி வாரம் கொண்டாடுகிறார்கள். மக்கள் கைத்தறியாடைகளை ஏராளமாக வாங்கிக் கைத்தறி நெசவாளர்களை வாழ்விக்க வேண்டும்!

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

68

ஒவ்வொன்றாகப் பற்றுகளை விடப் பார். உடனுக்குடன் அதன் பயனைப் பார்ப்பாய் என்கிறார் முனிவர்.

ஒன்றை விட்டதும் அதனால் உண்டாகும் துன்பத்தினின்று விடுபடுகிறாய். விட விட உன் துன்பம் குறையும். உலகத்தில் நீ பற்று வைத்திருக்கும் ஒவ்வொன்றும் துன்பத்துக்குக் காரணம். பற்றை நீக்கியதும் அந்தத் துன்பத்தினின்று நீ விடுபடுகிறாய். சுகத்துக்கு இதுவே வழி. வைக்க வைக்கத் துன்பம். விட விடச் சுகம். முற்றிலும் ஒரே அடியாக விடப் பார்க்க வேண்டாம். அதற்கு உனக்குச் சக்தி இல்லை. எல்லாவற்றையும் விட்டுத் தொலைக்கும் வரையில் காத்திருக்க வேண்டாம். உனக்குள்ள பற்றுகளை ஒவ்வொன்றாகக் கழற்றி நீக்குவாய். ஒவ்வொரு பற்று நீங்கியதும் அதன் பயனாக அந்த அளவுக்கு விடுதலை யடைந்து சுகம் பெறுவாய். அதனால் உனக்கு உண்டாகக் கூடிய துன்பத்தினின்று விடுபட்டு அமைதியடைந்து சுகம் பெறுவாய்.

'ஒரே அடியாக எல்லாவற்றையும் விட்டால்தானே பயன்? இன்னும் பல பற்றுகள் இருக்கின்றனவே, இதை மட்டும் விட்டு நீங்கினால் என்ன பயன் என்று யோசிக்க வேண்டாம்.


பொருளை விட்டு நீங்கினால் கஷ்டம் என்று எண்ணாதே. விட்டு நீக்கின பொருள் உனக்குத் துக்கம் தரும் பொருள். அதை நீக்கியது உனக்கு லாபம்.

> யாதனின் யாதனின்
> நீங்கியான் நோதல்
> அதனின் அதனின்
> இலன்.

அதனின் அதனின் நோதல்—அந்தப் பொருளினால் ஒருவனுக்கு உண்டாகும் துக்கம்.
இலன்—துக்கம் இல்லாமல் சுகம் அடைவான்.

விட்டவன் சுகம் அடைந்தவன். விடாதவன் அதனின்று வரும் துக்கத்தை அனுபவிக்கிறான்.

யாதனின், யாதனின் என்று இரட்டித்துத் துறவின் இரகசியத்தை இந்தக் குறள் சொல்லுகிறது. நிர ஒழிக்கப் பார்த்து ஏமாற்றம் அடைவதைப் பார்க்கிலும் ஒவ்வொன்றாக விட்டு, அந்த ஒவ்வொரு விடுதலையும்



பம்பாய் ஷண்முகானந்தா பைன் ஆர்ட்ஸ் அண்ட் சங்கீத சபையின் இன்னிசை அரங்குக்கு அஸ்திவாரமிடும் விழா குடியரசு தினத்தன்று கோலாகலமாய் நடந்தது. மந்திரி எஸ். கே. பாட்டில் அஸ்திவாரக்கல் நாட்டினார். இசையரசு தண்டபாணி தேசிகர் பிரார்த்தனைக் கீதங்கள் பாடினார். ரஸிகர்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தனர். தமக்கே உரித்தான உருக்கத்துடன் மெருகிட்ட வரவேற்பும் வந்தனோபசாரமும் செய்தார் சங்கீத சபைத் தலைவர் திரு டி. வி. ராமானுஜம்.

உடனுக்குடன் பயன் தருவதைக் கண்டு ஞானமும் மன உறுதியும் பெற்று முன்செல்வது துறவில் வெற்றி பெறும் வழி.

* * *

ஒரு பொருளை விட்டொழித்து அதன் அனுபவத்திலின்று சில காலம் பிரிந்து நின்றால் அதன் மேல் மனத்தைச் செலுத்தாமல் இருப்பதற்குப் பயிற்சி அடையலாம். பொருளை விட்டு நின்றாலும் மனத்தில் அதைப் பற்றிய நினைவு இருந்து கொண்டேயிருக்கும். இதைக் கண்டு கலக்கம் அடைய வேண்டாம். பற்றுவிடற்கு அது அவகாசம் தரும். இல்லாத பொருளைப் பற்றி நினைக்காமலிருக்க வரவரப் பயிலக் கூடும். பொருளை அனுபவித்துக் கொண்டேயிருந்தால் அதன் மேலுள்ள பற்றை நீக்குவது கடினம்.

விஷயத்தை நீக்கினால் மட்டும் போதாது. உள்ளத்தில் அதைப் பற்றிய நினைவும் போக வேண்டும். இது உண்மை. ஆனாலும் முதலில் பொருளை நீக்கி அதன் பின் நினைவையும் நீக்க முயல்வாய். பொருளை நீக்காமற் போனால், அதன் மேல் உனக்குள்ள பற்றை நீக்கிக் கொள்ள அவகாசமே இராது.

இயல்பாகும் நோன்பிற்கு ஒன்று
இன்மை; உடைமை
மயலாகும் மற்றும்
பெயர்த்து.

ஒன்று—ஒவ்வொரு விஷயமும்

துறவுக்குச் சாதனம் பற்றப்படும் விஷயத்தை உடனே துறத்தல். அப்படிச் செய்வது அதன் நினைவையும் துறப்பதற்கு உதவியாகும்.

விஷயானுபவத்தினால் மனத்தில் உள்ள பற்று வலுப்படும். மயல், அதாவது மயக்கம், நீண்டு கொண்டே போகும். காரணம், மெய்யறிவின்மை. அதுவே மயல். ஒரு சிறிது போது மறைந்து நின்ற மயக்கம் பொருள் வந்து சேர்ந்ததும் மறுபடியும் வந்து சேரும். ஆகையால் முதலில் விஷயானுபவத்தை விட்டு, பிறகு அதன் நினைவையும் விட்டொழிக்கப் பார்.


இந்தக் குறளில் சொல்லப் பட்ட உண்மை ஒவ்வொரு விஷயத்துக்கும் பொருந்தும். ஒன்று இன்மை நோன்புக்கு நல்லது. ஒன்று உடைமை நோன்பைக் கெடுத்து அறியாமையை உண்டாக்கும். இரண்டையும் குறள் விளக்கிச் சொல்லுகிறது.

அவள் எவ்வளவு அழகாயிருக்கிறாள்...
அவள் உபயோகிப்பது பாண்ட்ஸ்




நீங்களும் சருமத்தை மிருதுவாகவும், வழவழப்பாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உபயோகியுங்கள்

இலேசானதும் பனிக்கட்டிபோல் மென்மையானதுமான பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் சருமத்தின் மென்மையான அழகைப் பாதுகாத்து, அதை எழிலுடனும், பொலிவுடனும் இருக்கச்செய்யும். எண்ணெய்ப் பசையில்லாத இந்த க்ரீம் தேய்த்துக்கொண்ட மறு வினாடியிலேயே மறைந்து விடுகிறது. பவுடர் போட்டுக் கொள்வதற்குமுன் இந்த க்ரீமைத் தடவிக்கொண்டால் பவுடர் மணிக்கணக்கில் படிந்திருக்கும்.




சருமத்தை சுத்திகரிக்கும் சிறந்த க்ரீம்
தினமும் இரவில் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை முகத்தில் தடவுங்கள். அது உங்கள் மிருதுவான சருமத்தை சுத்தம்செய்து முக அழகைப் பாதுகாக்கும்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பெற்றது)



"உங்கள் பெண் மிக அழகி
ல்லாமலிருக்கலாம், ஆனால் அவள்
என் பையனுக்கு ஏற்ற மனைவி
என்பதை நான் அறிவேன். அவள்
விஷயம் தெரிந்தவள். ஆம்,
அவள் புடவைகளுக்கு
உபயோகிப்பது **டினோபால்**"



டினோபால், ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து, அவர்களுடைய ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்.

தயாரிப்பாளர்கள் : ஸுஹ்ருட் கெய்கி பிரைவேட் லிமிடெட், வாடி வாடி, பரோடா

ஏக விநியோகஸ்தர்கள் : ஸுஹ்ருட் கெய்கி ட்ரேடிங் பிரைவேட் லிமிடெட், பி.ஓ. பாக்ஸ் 965, பம்பாய்

சிறிதளவு டினோபால் வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாக்குகிறது

SISTA'S-SG-43-T

அருணாசலக் கவிராயர்

க. நா. சுப்ரமண்யம்

தாயுமானவர் வேதாந்தக்கவி. அருணாசலக் கவிராயர் நாடகக் கவி; இசைக்கவி. எப்படிச் சொன்னாலும் சரிதான். புதுத் தமிழ் இலக்கியத்தின் அடிப்படையான ஒரு கொள்கையை வளராமலேயே ஏற்றுக் கொண்டு கவிதை செய்தவர் அருணாசலக் கவிராயர். சிறப்பாகப் பாரதியாரில் வந்து முடிந்த கவிதை மரபுக்கு வழி காட்டித் தந்தவர் என்று அருணாசலக் கவிராயரை நாம் பாராட்ட வேண்டும். கவிதையை அரும் பத அகராதிகள், வியவக்கியான கர்த்தாக்கள், அறிவுப்புலிகள் இவர்களிடமிருந்தெல்லாம் நமக்கு மீட்டுத் தரப் பாடுபட்டவர்களில் அருணாசலக் கவிராயரைக் காலத்தால் முதல்வராகச் சொல்லலாம்.

1712ல் பிறந்த அருணாசலக் கவிராயர் தனது அறுபதாவது வயதில் ராமநாடகக் கீர்த்தனைகளைப் பாடினார். அதற்குப் பிறகு அறுபத்தேழாவது வயது வரையில் இருந்து விட்டு 1779ல் இறந்தவர். மாயூரத்துக்கருகிலுள்ள தில்லையாடி என்னும் கிராமத்தில் பிறந்த அருணாசலக் கவிராயர் சீர்காழி அருணாசலக் கவிராயர் ஆனதற்கு அவருடைய மதியையும், கவித்துவத்தையும் உணர்ந்த ஒரு சீர்காழி நண்பரான போஷகரின் செயல்தான் காரணம் என்று கதை சொல்வார்கள். காசுக்கடை வைத்துப் பொருளீட்ட முயன்றவர் அருணாசலக் கவிராயர். கவிராயருக்குக் காசுக்கடைக் கணக்குச் சரியாக வந்திராது என்றே நாம் ஊகித்துக் கொள்ளலாம். காசுக் கடையுடன் ராமாயணப் பிரசங்கமும் பிழைப்புக்காகச் செய்து வந்தவருக்குக் கம்பராமாயணத்தில் நல்ல பரிச்சயமிருந்ததில் ஆச்சரியமில்லை. பிரசங்கி என்று ஒருவன் எடுத்துச் சொன்னாலொழிய, கம்பராமாயணத்தில் பல பகுதிகள் சாதாரண மக்களுக்குப் புரிவதில்லை. அதற்குக் காலம் மட்டும் காரணமல்ல, இலக்கியமென்பது பேச்சு பாஷையை விட்டு விலகி நின்றதுதான் காரணமென்று புரிந்து கொள்ள அவருக்குப் போதுமான சந்தர்ப்பங்கள் இருந்திருக்கத்தான் வேண்டும்.

ராமநாடகக் கீர்த்தனைகளைத் தவிர, அவர் சீர்காழிப் புராணம், சீர்காழிக் கோவை, அநுமார் பிள்ளைத் தமிழ், அசோமுகி நாடகம் முதலியவும் பாடினார். ஆனால் அவருடைய ராமநாடகம்தான் முக்கியமாக மக்களின் மனத்தைக் கவர்ந்தது. ஸ்ரீரங்கத்தில் ராமநாடகக் கீர்த்தனங்களை அரங்கேற்றி விட்டு அவர் அடுத்தபடியாகத் தஞ்சை மராட்டிய அரசனாகிய துளஜராஜனிடம் அதை அரங்கேற்ற விரும்பினாரென்றும், அது அப்போது சரிப்படாது போகவே துளஜராஜருக்கு நெருங்கிய நண்பரான புதுவை ஆனந்தரங்கம் பிள்ளை முன் அரங்கேற்ற விரும்பினாரென்றும், துளஜராஜா கேட்காதபோது தான் கேட்பது சரியல்ல என்று ஆனந்தரங்கம்பிள்ளை அவரைத் தமது நண்பர் சென்னை முத்துக்கிருஷ்ண முதலியாரிடம் அனுப்பினார் என்றும் ஒரு கதையுண்டு. அந்த நாட்களில் கவியென்றால் உலகம் அறிந்திருக்கவும் வேண்டும். உலகில் அங்குமிங்கும் ஓடியாடி உலகை ஒத்துப் பாடியாடித் திருப்தி செய்யவும் தெரிந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பத்திரிகை யுகமாகிய இந்தக் காலத்துக்கும் அந்தக் காலத்துக்கும் அப்படி வித்தியாசம் ஒன்றுமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

புராணம், கோவை முதலிய நூல்களால் கவியாக யாருடைய பெயரும் இனிப் பரவவில்லை என்பது பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியிலேயே தெளிவாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இருந்தும் ஒரு நூற்றாண்டுக்கும் அதிகமாகவே இந்தத் துறைகளில் உழைப்பவர்களுக்குப் பஞ்சம் ஏற்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையில் எழுதிக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் அருணாசலக் கவிராயரும் தம் நூலைப் போஷகர் முன் அரங்கேற்ற முற்பட்டாலும் கூட ஒரு பொதுஜனயுகம் வர இருப்பதை உணர்ந்துதான் இந்தக் கீர்த்தனங்களை இயற்றினார் என்று சொல்வது பிழையாகாது. ஆனால் பொதுஜனயுகம் வந்து விடவில்லை அப்போது. பெஷிவசனத்தில் நடத்திய காரியத்தை ஆனந்தரங்கம் பிள்ளை தமது தினசரிக் குறிப்புகளைத் தமக்காக எழுதிக் கொண்ட காரியத்தை அருணாசலக் கவிராயர் ஒரு விதத்தில் சாதித்தார். இசையும் நாடகமும் தமிழும் கலந்து செய்தார். அறுபது வருஷங்கள் அப்பெயர் தமிழ் நாட்டில் அப்படி ஒன்றும் அதிகமாகப் பரவி விடவில்லை. தில்லையாடியிலிருந்து சீர்காழி வரையில்தான் பரவியிருந்தது. ராமநாடகக் கீர்த்தனைகளுக்குப் பிறகு அவர் புகழ் தமிழ் நாடெங்கும் பரவி விட்டது. அறுபத்தேழாவது வயதில் அவர் இறக்கும் போது அவர் கீர்த்தனங்கள் எங்கும் பிரசித்தமாக இருந்தன. அவரே பல இடங்களிலும் பாடி அவற்றைப் பிரசங்கித்தார். அவர் சிஷ்யர்கள் பலரும் வெற்றிகரமாகச் செய்தார்கள். ஒரு நூற்றைம்பது வருஷங்களாகத் தமிழ் நாட்டிலே ராமநாடகக் கீர்த்தனைகள் பிரபலமாகவே இருந்திருக்கின்றன என்று சொல்வது பிசகாகாது.

கம்பராமாயணப் பிரசங்கத்தையும் தன் தொழிலாகக் கொண்ட அருணாசலக் கவிராயருக்கு ராமகதையை இசையாகத் தொகுக்க வேண்டுமென்று தோன்றியதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அவரிடம் தமிழ் கற்றுக் கொண்ட மாணவர்கள்

இருவர் இசை வல்லவர்களாகவும் இருந்ததனால் இது சுலபமாகவே சாத்தியமாயிற்று. எளிய சந்தம், எளிய பதங்கள், எளிய கதை என்று பாரதியார் பிறகு-ஒரு நூற்றைம்பது வருஷங்களுக்குப் பிறகு, சொன்னாரே—அத்துடன் இசையையும் சேர்த்துச் செய்து விட்டார் அருணாசலக் கவிராயர். அதை நாடகமாகச் செய்யலாம் என்று செய்ததை ஒரு தனிப்பெருமையாகச் சொல்லலாம்; ராமகீர்த்தனைகளாக மட்டுமில்லாமல் இவை ராம நாடகக் கீர்த்தனைகளாகவும் அமைந்தது தான் விசேஷம் என்று சொல்ல வேண்டும்.

இன்று நாம் சொல்லிக் கொள்வது போலவே, அன்றும் முத்தமிழ் என்றும், இயல், இசை நாடகம் என்றும் முழங்கிக் கொண்டு தான் இருந்திருப்பார்கள். கோயில்களில் நாட்டிய நாடகங்கள் இருந்தன என்பது நமக்குப் பலதரப்பட்ட கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது. அருணாசலக் கவிராயர் காலத்திலே நாடகம் அப்படியொன்றும் பிரமாதமான வளர்ச்சி பெற்றிருக்கவில்லை என்பதும் உண்மை தான். வடமொழிக் கதையான ராமாயணத்தைக் கம்பன் அற்புதமான காவியமாகச் செய்து விட்டான். சிலப்பதிகாரத்தைப் போலவே அந்தக் காவியத்திலும் நாடகப் பண்பு நிறைந்திருக்கிறது என்பது உண்மைதான். கம்பராமாயணப் பிரசங்கியாகிய அருணாசலக் கவிராயருக்கு, இன்றையக் கம்பராமாயணப் பிரசங்கிகளைப் போலவே கம்பராமாயணத்தின் நாடகப் பாங்கு முழுதும் நன்கு தெரிந்து தானே இருக்க வேண்டும்? இந்த நாடகப் பாங்கை அழுத்தமாக வெளிக் கொணர ஒருவர் முயன்றாலும் தவறு ஒன்றுமில்லை. கம்பராமாயணத்தை யொட்டியே தான் அருணாசலக் கவிராயர் தமது ராமநாடகக் கீர்த்தனைகளைச் செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். தெளிவான தமிழில் அரும்பத அகராதியையோ வியாக்கியான கர்த்தாக்களின் உதவியையோ நாடாத வகையிலே நாடகப் பாங்கை மட்டும் மனத்தில் கொண்டு அருணாசலக் கவிராயர் இந்தக் கீர்த்தனங்களைப் பாடி விட்டார்.

இசையாக ராமநாடகக் கீர்த்தனைகளை மதிப்பிட எனக்குத் தெரியாது—அப்படி மதிப்பிட வேண்டிய இடமும் இதுவல்ல. ஆனால் நாடகமாகவும் இலக்கியமாகவும் மதிப்பிடும்போது ராமநாடகக் கீர்த்தனைகளின் நயம் தெளிவாகவே விளங்குகிறது என்று சொல்லலாம். இந்த நாடகம் நமக்குப் பழக்கமான இன்றைய நாடகங்களைப் போல இல்லை தான். ஆனால் இதில் நாடகத் தன்மை இருக்கிறது என்பது வெளிப்படை. சிலப்பதிகாரத்தை நாடக நூல் என்று பலவகைகளில் சொல்லலாம்-பழைய டக்தாவில் நாட்டியத்தைப் பற்றிச் சொல்லியது என்பதாலும், நாடகத் தன்மை அதாவது சம்பவ மோதல்கள் சிறப்பாக உள்ளது என்பதாலும் அதை நாடக நூல் என்று சொல்லலாம். சீர்காழி அருணாசலக் கவிராயர் காலத்தில் சிலப்பதிகாரம் வழக்கத்திலிருந்ததா? அவர் அதை அறிந்திருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அந்த அளவுக்கில்லாவிட்டாலும், குறிப்பிட்ட ஒரு அளவுக்குள் ராம கதையை நாடகமாக்கி விட்டார் அவர். தமிழில் பிற்காலத்தில், அதாவது பத்தொன்பதாவது நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இறுதி வரையில் வெளிவந்து நடிக்கப்பட்ட நாடகங்களுக்கெல்லாம் ஆதர்சம் என்று ராம நாடகக் கீர்த்தனையைத் தான் சொல்ல வேண்டும். இன்றுள்ள நாடகமேடை, சினிமாவுக்கும் ராமநாடகக் கீர்த்தனை வழிகாட்டியாக முன்னோடியாக இருந்து வருகிறது என்று சொல்வது பொருந்தும் என்றே தோன்றுகிறது. தெரிந்தோ தெரியாமலோ, இந்த முதல் நூலை ஓரளவு பின்பற்றித்தான் கோபாலகிருஷ்ண பாரதியார் தம் நந்தன் சரித்திரத்தில் பிரமாதமான வெற்றி பெற்றார் என்று சொல்ல வேண்டும். வேதநாயகம் பிள்ளை தம்முடைய பெண் மதி மாலையிலும், சர்வ சமரசக் கீர்த்தனைகளிலும் கூட இந்தக் கீர்த்தனைகளின் நாடகப் பண்பையும் இசையையும் பின்பற்றி எழுதவே ஓரளவு முயன்றார் என்று கூடச் சொல்லலாம்.

இலக்கியமாக மதிப்பிடும் போது, இந்த ராமநாடகக் கீர்த்தனைகளுக்கு எந்த அளவில் இடமுண்டு என்று கேட்கத் தோன்றலாம். 'மக்கள் இலக்கியம், மக்கள் இலக்கியம்' என்று இந்தக் காலத்தில் ஒரு கொள்கை பரவிப் பிரமாதப் படுகிறதே—அதற்கு ராமகதை ஆதாரமாக அமையக்கூடாது என்று வேண்டுமானால் மக்கள் இலக்கியக்காரர்கள் சொல்லலாம். ஆனால் அருணாசலக் கவிராயர் இந்த ராமநாடகக் கீர்த்தனைகளை மக்கள் இலக்கியமாகக் கருதியே தான் செய்து வெளியிட்டார் என்று சொல்ல வேண்டும். ராவணனுக்கு விபீஷணன் புத்தி கூறும்போதும், ராமனுக்கும் சூர்ப்பனகைக்கும் சம்வாதம் நடக்கும் போதும், அநுமான் சீதையைச் சந்தித்து அசோக வனத்தில் பேசும் போதும் இசையை விலக்கி விட்டு நாடகமாக மட்டும் நாம் கவனித்தால், இது தெளிவாகவே விளங்கும். மக்கள் மாறி விடுவதில்லை. மேலெழுந்தவாரியான பல வியவகாரங்கள் மாறுகின்றன; கலோகங்கள் மாறுகின்றன. மனிதர்கள் இன்னும் ராமராஜ்யத்தை எண்ணிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தி ராமராஜ்யம் என்கிற பெயரைச் சொல்லித்தான் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார். அந்த ராம ராஜ்யத்தையும், அதற்கு ஆதாரமான ராஜ்யத்தையும் தமிழருக்கெல்லாம் தெரிவிக்க இக் கீர்த்தனைகளும் பிரயோசனப்பட்டன என்பது அவற்றின் தனிப் பெருமை.

மற்ற இந்திய மொழிகளிலே ராமாயணத்துக்குப் பலப்பல மொழிபெயர்ப்புகள் உண்டு. தமிழிலோ கம்பனுடையதும், அருணாசலக் கவிராயருடையதும்தான். இலக்கிய பூர்வமாக அவையே போதும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.



சக்கரவர்த்தித் 'திருமகன்

மகான் ராஜாஜி அவர்களுக்கு,

தாங்கள் அன்புடனும் ஆசியுடனும் அனுப்பிய ''சக்கரவர்த்தித் திருமகனை'' நானிருக்கும் 20-வது வார்டிலுள்ள மற்றவர்களின் விருப்பத்தின் பேரில் தினந்தோறும் இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரையில் பாராயணம் செய்தேன். மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அடுத்த 19-வது வார்டிலிருந்த இதர நோயாளிகளும், முகம்மதியர்கள் கிறிஸ்தவர்கள் உள்பட இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு ராம பிரபாவத்தை முழு மனத்துடன் அனுபவித்து மகிழ்ந்தார்கள்.

இருபது நாட்கள் தினந்தோறும் படித்து, சென்ற 24-1-59. அன்று எங்களுக்குள் சந்தா வசூல் செய்து ராம பட்டாபிஷேக வைபவத்தையும் விமரிசையாகக் கொண்டாடினோம். ராம காரியமாக இருந்ததால் காரியம் எவ்விதத் தடங்கலும் இன்றி நிறைவேறியது. உங்கள் அன்பினால் எங்களுக்கு இந்த மாபெரும் பாக்கியம் கிடைத்தது.

மக்கள் யாவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் மனத்தில் ஆழப் பதியும் வகையிலும் உங்களைத் தவிர வேறு யார் இவ்வளவு தெளிவாக விஷயங்களை விளக்கிக் காட்ட முடியும்?

நீங்கள் தேக திடத்துடனும் ஆரோக்கியத்துடனும் பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமாய் மங்கள ராமனையும் ஆஞ்சனேய பகவானையும் நாங்கள் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

என். திருவேங்கடம், ராமானுஜன்,
எஸ். கோலப்ப பிள்ளை, மாணிக்க நாயுடு,
ஏ. சின்னசாமி கவுண்டன், மைதீன் சாயபு,
வி. கே. உன்னி, கே. பிரகாசம்,
பி. ஆர். முனுஸ்வாமி.

ஜெனரல் ஆஸ்பத்திரி 19-வது. 20-வது வார்டு
சென்னை, 25-1-59 நோயாளிகள்

[இந்திய சர்க்கார் சக்கரவர்த்தித் திருமகனுக்குப் பரிசளித்துக் கௌரவித்திருக்கிறார்கள். இந்தப் பரிசைவிட மேற்கண்ட கடிதத்தையே பெரும் பரிசாகவும் கௌரவமாகவும் கருதுகிறார் ராஜாஜி.
—ஆசிரியர்]

'கலை ரஸனை !

ஜனவரி நான்காம் தேதி இதழில் வெளியாகியுள்ள திரு க. நா. சுப்பிரமணியம் அவர்களின் ''தாயுமானவர்'' என்ற கட்டுரை மிகவும் அருமையாக அமைந்துள்ளது.

ஒரு விஷயம் வேதாந்தத்துக்கு இல்லாவிடினும் கவிதைச் சுவைக்காகவாவது தாயுமானவரைப் படித்து வையுங்களேன் என்று முறையிடுகிறார் திரு க. நா. சு. நம் நிலை இப்படியாகி விட்டதே என்று வேதனையாகத்தான் இருக்கிறது.

பார்க்கப் போனால் நம்முடைய கலைகளாகிய இசை, ஓவியம், சிற்பம் எல்லாவற்றிலுமே தெய்வ மணம் கலந்துதான் இருக்கிறது. நமக்கு மேற்போக்கான கலைமணம் தான் தெரிகிறது. இது நம் துர்ப்பாக்கியமே.

ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் இராக ஆலாபனை செய்யும்போது நாம் பெறும் சுகானுபவம் வெறும் ஒலி இன்பமாகவா பரிகிறது? வார்த்தைகள், அவற்றின் கோவை, அவற்றிலிருந்து எழும் பாவம் என்பவை ஆலாபனையில் இல்லை. பின் நாம் உருக வேண்டிய அவசியம் என்ன? அதுதான் நம் இசையிலே கரைந்து போயிருக்கும் தெய்வீகம்.

அது சாதாரணமாக நமக்கு வெளிப்படுவதில்லை. நீருக்குச் சுபாவத்திலேயே இனிப்பு உண்டு; இதை அறிந்தே பெரியோர்கள் தண்ணீரை அமுதம் என்றார்கள். ஆனாலும் நம் நாக்கிலுள்ள பித்தம் முதலிய தோஷங்கள் காரணமாக, நீரின் இயற்கைத் தன்மையான இனிப்பு நமக்குத் தெரிவதில்லை. நெல்லிக்காயைத் தின்கிறோம். அது நாவிலுள்ள மாசுகளை விலக்குகிறது. பின்னர் நீர் அருந்தினால் அதன் இனிப்பை உணர முடிகிறது. இதே போல் மனத்திலும் எத்தனையோ மாசுகள். அவை இருக்கும் வரையில் கலைகளின் தெய்வத்தன்மை புலனாவதில்லை.

மன அழுக்கு நீங்க ஒரு நெல்லிக் கனி இருக்கிறது. நெல்லிக்கு 'ஆமலகம்' என்று பெயர். 'மாசற்றது' என்பது இதன் பொருள். மாசற்றதுதானே மாசுகளை போக்க முடியும்? மன மாசைப் போக்கும் ஆமலகம்தான் பக்தி. அந்த நெல்லிக்கனியின் சுவையில் நாம் திளைத்துப் போயிருப்பதால்தான் ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் பாடும் இசை, பொருளற்ற ஒலிச்சேர்க்கையானால் கூடத் தெய்வ மணம் கமழுகிறது.

நெல் தானியோடே செல்லும் ரசம் முதிர்ந்து அரிசியாகி இருப்பது போல், நம் கலைகளின் ரசம் இறுதித் தெய்வ உணர்ச்சி என்பதாகப் பரிணமித்திருக்கிறது. அரிசியைச் சாப்பிட வேண்டும் என்ற அறிவு போய், நாம் மாடுகள் போல் காய்ந்து போன நெல் தாளையே மேய்ந்து வருகிறோம். ''அரிசியையும் தின்று வையுங்கள்; அதிலும் இந்த வைக்கோலின் சத்து இருக்கிறது'' என்று ஒருவர் நமக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. எனவே ஆன்ம விசார புனர் வி

மேஜை

மாணத் திருப்பணி இப்போது மிக மிக அவசியமாகி விட்டது என்பது தெளிவாக விளங்குகிறது.

சென்னை
5-1-59 ரா. கணபதி

இன்ஷ்யூரன்ஸ் விஷயம்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷனின் சாதனைகளைக் குறிப்பிட்டுப் பிரமாதமாகப் பேசுகின்றனர் அதன் அதிகாரிகள். இதற்கு ஆதாரமாகப் புள்ளி விவரங்களையும் வருஷம் தவறாமல் வெளியிடுகிறார்கள். அறிக்கைகளைக் கொண்டு மாத்திரம், கார்ப்பரேஷன் திறம்பட நடப்பதாகக்கூற முடியாது. ஏனெனில், அறிக்கைகளில் காணப்படுவதெல்லாம் ஏற்கனவே வெளியிட்டுள்ள பாலிஸிகளைத்தான் குறிப்பிடுகின்றனவே தவிர, வருஷா வருஷம் 'பிரீமியம்' கட்டாமல் காலாவதியாகும் பாலிஸிகளைப் பற்றி யாதொருவிதமான தகவலும் தருவதில்லை. அதிலும், இரண்டாவது 'பிரீமியம்' கூடக் கட்டப்படாமலேயே காலாவதியாகும் பாலிஸிகளின் எண்ணிக்கையோ மிகவும் அதிகமாகும். இதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை.

இந்த நிலைக்கு உண்மையான காரணம் என்ன? ஏஜண்டுகளுக்குக் 'கோட்டா' முறை நிர்ணயிக்கப்பட்டிருப்பதுதான். வியாபார ரீதியில் பார்த்தால், இம்முறை நியாயமானதாகவும், சரியானதாகவும் இருக்கலாம். ஆனால், இதை அமுல் செய்யும் வழி முறைகளால்தான் பலவித இடையூறுகள். 'கோட்டா' அளவைப் பூர்த்தி செய்ய முடியாத ஏஜண்டுகள் "வேலைக்கு லாயக்கு இல்லை" என்ற 'பயமுறுத்'தலுக்கு ஆளாக நேரிடுகிறது. ஆகவே, ஏஜண்டுகள் எப்படியோ தங்கள் 'திறமை'யைக் காட்டி விடுகிறார்கள்.

விஷயம் இத்தோடு முடிவடைந்தால் பரவாயில்லையே! மிகவும் அதிகபட்சத் தொகைக்கு 'வியாபாரம்' நடத்தும் ஏஜண்டுகள் தான் 'பெஸ்ட் ஸேல்ஸ்மன்'னும் கார்ப்பரேஷன் அகராதிப்படி! இதற்காக, இவர்களுக்குப் பரிசுகள் வேறு வழங்கப்படுகின்றன. போட்டியின் பெயரால்! போட்டி என்றால், பொய்யும், பித்தலாட்டமும் கூடவே சேர்ந்து விடுகின்றனவே! இதற்கு என்ன செய்வது?

ஆகவே, கார்ப்பரேஷனின் நோக்கமான "யோக க்ஷேமம் வஹாம் யஹம்" என்ற வார்த்தைகள் உண்மையில் ஈடேற வேண்டுமானால், போட்டி மனப்பான்மையை அடியோடு ஒழித்து விட்டு, அதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட தேதியன்றே ஒழுங்காகப் பணம் செலுத்திக் கொண்டு வரும் பாலிஸிதாரர்களுக்கென ஒரு விசேஷ போனசும், இத்தகைய பாலிஸிதாரர்களை உடைய ஏஜண்டுகளுக்கென விசேஷ போனஸ்ூம் வழங்குவதோடு, வேலையிலும் இவர்களுக்குப் 'பிரமோஷன்' கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அதிகரிக்கச் செய்தால், இன்ஷ்யூரன்ஸ் தொழிலானது எதிர்காலத்தில் தலைசிறந்து விளங்கும்.

விழுப்புரம்
22-1-59 "வழிகாட்டி"

கடல் அரிப்பு

ஒரு காலத்தில் தமிழகம் தெற்கே வெகு தூரம் பரவியிருந்ததென்றும், அவை கடல் அரிப்புக்களால் சிறிது சிறிதாகக் கடலால் கொள்ளப்பட்டன என்றும், பழைய இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். இதுபோல் இன்றும் தமிழகத்தின் சில பகுதிகள் கடல் அரிப்பால் சிறிது சிறிதாகக் கரைந்து கொண்டு வருகின்றன.

இவ்வித இடர்ப்பாடுகளால் திருநெல்வேலி ஜில்லாவைச் சார்ந்த மணப்பாடு கிராமமும் பாதிக்கப்பட்டிருப்பதுடன், கடந்த 1954-ம் ஆண்டில் ஏற்பட்ட பயங்கரக் கடல் அரிப்பால், கடற்கரையை அடுத்திருந்த எழில் மிகும் பெரும் திடல் கடலில் மூழ்கடிக்கப்பட்டு, மேலும் அதற்கப்பாலுள்ள குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அரிப்பு மிகவும் கடுமையாகத் தாக்கியமையால், பல குடியிருப்பு வீடுகள் இடிந்து விழுந்து கடலில் மூழ்கின. மேற்கொண்டு இவ்வாபத்தான நிலைமை நீடிக்காவண்ணம் உடனடியாகச் சர்க்கார் தற்காலிகப் பாதுகாப்பளித்து உதவி புரிந்தது.

ஆனால் இதற்கான நிரந்தரப் பரிகாரமான ஏற்பாடுகளை மேற்கொள்ளாமல் தாமதித்தால், காலக்கிரமத்தில் இந்தக் கிராமம் சிறிது சிறிதாகக் கடலால் கொள்ளப்படலாம்.


மணப்பாடு
8-1-59 மத்தியாஸ் பெர்னாந்து

அருமையான படைப்பு!

சென்ற மூன்று வாரங்களாகக் கல்கியில் தொடர்ந்து வரும் "சோக்ரதர் சம்வாதங்களை"ப் படிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். இப்படிப்பட்ட இலக்கியச் சுவை நிறைந்த ஒரு அருமையான படைப்பை கனம் க. சந்தானம் செந்தமிழில் வாரி வழங்குவது இது முதல் தடவையல்ல. இருப்பினும் இதுவரை வந்த அவருடைய படைப்புகள் எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் இது இருக்கிறது.

சென்னை
30-1-59 எஸ். எஸ். சீனிவாசன்

கடன் வாங்கிக் கல்யாணம்





"அனேகமாக எல்லாக் கல்யாணங்களும் கடன் வாங்கித்தான் நடக்கின்றன. இதில் என்ன விசேஷம்?" என்று நீங்கள் கேட்கிறீர்களா?

உண்மைதான். இது விஜயாவின் கடன் வாங்கிக் கல்யாணம். படத் தயாரிப்பின் உயர்வைக் குறிக்க 'விஜயாவின்' என்ற அடைமொழி பெரிதும் உதவுகிறது. விஜயா புரொடக்ஷன்ஸ் ஒரு படம் தயாரித்தால் அதில் நல்ல காட்சி ஜோடனைகள், சிறந்த ஒலிப்பதிவு, நல்ல ஒளியமைப்பு முதலிய இன்றியமையாத சினிமாக் கலை அம்சங்களை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். 'மாயா பஜார்' படம் இதற்குத் தக்க சான்று பகரும். முன்பு ஏற்கனவே ஒருமுறை வந்த படமாயிருந்தும் அந்தப் படத்துக்கு நல்ல வரவேற்பு இருந்ததற்குக் காரணம் விஜயா புரடொக்ஷன்ஸாரின் தயாரிப்பு என்பதனால்தான். "மிஸ்ஸியம்மா" படத்தை யாருமே மறக்க முடியாது. அவ்வளவு சுவாரஸ்யமான படம். அதுவும் விஜயா தயாரிப்புத்தான்.

நல்ல பாடகருக்குச் சரியான பக்க வாத்தியங்கள் அமைந்தது போல், இந்தப் படத்தின் டைரக்டராகப் பிரசாத் அமைந்தார்.

ஆகவே, நெல்லுக்குள் அரிசி இருக்கிறது என்பது போல், படத்தின் சிறப்பு முதலிலேயே தெரிந்து விட்டது.

ஆதவனும், சந்திரனும் தோன்றி, அகில புவனமும் தோன்றி, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே, மக்களிடையே கொடுக்கல்—வாங்கல், பண்டமாற்று முதலிய விவகாரங்கள் தோன்றி விட்டன. கடன் கொடுக்கல்—வாங்கலும் உடன் தோன்றி விட்டது. ஆரம்பப் பள்ளிக்கூடத்திலேயே கடன் ஆரம்பமாகி விடுகிறது! எப்படி என்கிறீர்களா? 'கடன் வாங்கும் கழித்தல்' என்று கணக்கு சொல்லித் தருகிறார்கள் அல்லவா!

ஆனால் கடன் என்றால் யாருக்குமே சற்றுக் கசப்பான விஷயம்தான். நான் கூட இந்தப் படத்தின் பெயரைப் பார்த்து விட்டு ஒரு மாதிரி அசுவாரஸ்யமாகவே இருந்தேன். படம் பார்த்ததும் அந்த அசுவாரஸ்யம் மறைந்து விட்டது.

கடன் வாங்கி விட்டு அதைத் திருப்பித் தர வேண்டும் என்ற சிந்தனையே இல்லாமல் காலந்தள்ளும் திவான் பகதூர் தர்மலிங்கம் பிள்ளை; அவன் மகன் தியாகு; தியாகுவின் மனைவி லீலா; லீலாவின் அண்ணன் நாகராஜன்; நாகராஜனின் காதலி மஞ்சுளா; மஞ்சுளாவின் தந்தை கருணாகரம் பிள்ளை; தர்மலிங்கத்தின் காரியதரிசி நமச்சிவாயம்; நமச்சிவாயத்தின் காதலி, அவன் அக்கா மகள் உஷா. இவர்கள்தான் இதில் முக்கியமான சினிமாப் பாத்திரங்கள்.

இந்தப் பாத்திரங்களையெல்லாம் துடைத்து வைத்த எவர்சில்வர் பாத்திரங்களைப் போல், பளிச்சென்று துலங்கச் செய்திருப்பது திரைக்கதையின் திறமையான அமைப்புத்தான். திரைக்கதையைத் திறமையாகக் கையாளா விட்டால், ஓரிரு பாத்திரங்கள் தவிர, மற்றவைகளெல்லாம் பழைய அலுமினியப் பாத்திரங்கள் மாதிரி ஒளியிழந்து போய் விடும்.

சொந்த அக்காளின் மகளான உஷாவை அடைய முடியாமல் தவிக்கிறான் நமச்சிவாயம். உஷாவின் தந்தை சொக்கலிங்கம் அவர்களுக்குக் குறுக்கே நிற்கிறார்.

நாகராஜன் ஏழையானதால் பணக்காரப் பெண் மஞ்சுளாவைக் காதலிக்கத் தான் முடிகிறது.

நாகராஜனின் தங்கை லீலா, தர்மலிங்கம் பிள்ளையின் பணத்தாசை—கடன் வாங்கும் மோகம் இவை காரணமாக அவன் சின்னஞ் சிறு வயதில் மணந்த தியாகுவை நெருங்க முடியவில்லை.

எல்லாக் காதலர்களும் ஒன்று சேருவதற்கு நாகராஜன் ராஜாவேஷம், சாமியார் வேஷம் போட நேருகிறது. கதையில் விசேஷமாகக் கூற எதுவும் இல்லையென்றாலும் சுவாரஸ்யம் குன்றாமல் விறுவிறுப்பாகச் செல்லுகிறது.

ஜெமினி கணேசன் நாகராஜனாக வந்து நல்ல பெயர் தட்டிக் கொண்டு போகிறார். ராஜாவேஷம், சாமியார் வேஷம் முதலிய கட்டங்களில் அவருக்கு வேஷப் பொருத்தம் நன்றாயமைந்து விடுகிறபடியினால், அவருடைய நடிப்பைப் பற்றிய சிந்தனையே பார்ப்பவர்களுக்கு எழாது.

மஞ்சுளாவின் பாகத்தைச் சாவித்திரி ஏற்று நன்றாக நடித்திருக்கிறார்.

தங்கவேலுவைப் போல் இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணமாயிருக்கும் மற்றொரு நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன். ஏ. வி. எம். தயாரித்த "வாழ்க்கை"ப் படத்தில் நடித்து நல்ல பெயர் வாங்கிய இவர் இந்தப் படத்தில் பழையபடி பிரகாசிக்கத் தொடங்கியிருக்கிறார்.

சொக்கலிங்கமாக வரும் கே. சாரங்கபாணி தமது பாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

ஈ. வி. சரோஜாவின் கேவாகலர் நடனம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கிறது. வண்ணத் தயாரிப்பு கவர்ச்சிகரமாயிருக்கிறது. நடனம் சுருக்கமாகவும், பரதநாட்டியப் பாணியிலும் அமைந்திருப்பது பாராட்டத் தக்கது.

தர்மலிங்கத்தின் கிழத் தந்தையாக வரும் எல். நாராயணராவ் சிற்சில நிமிஷங்களே வந்தாலும், திரை உலகின் ஜாம்பவானான அவர் நடிப்பு மிக இயல்பாக அமைந்திருக்கிறது. மகனுடைய விபரீதமான போக்கைக் கண்டிக்கும் போது அவர் உள்ளம் துடிப்பது நமக்குத் தெரிகிறது.

ஜமுனா லீலாவாக நடிப்பதற்கு ஏற்றவர். பேசியும் பேசாமலும் அவர் நன்கு நடித்திருக்கிறார்.

16,661 அடிகள் கொண்ட இந்தப் படத்தில் பதினொன்று பாடல்கள் இருக்கின்றன. படங்களில் பாடல்கள் குறைந்து வரும் இந்த நாளில், இது கொஞ்சம் அலுப்பைத் தான் தருகிறது.

இந்தப் படத்தின் வசனம், பாடல்களை அமைத்தவர் தஞ்சை ராமையாதாஸ். வசனம் மிகவும் சரளமாக, கதைப் போக்கை ஒட்டி நன்றாக அமைந்திருக்கிறது.

கண்ணீர் விட்டுக் கலங்காமல், சிரித்து மகிழ வேண்டுமானால் இந்தப் படத்தைப் பார்த்து ரசிக்கலாம்.



தங்கவேலு இந்தப் படத்தில் அதிகமாகவே இடம் பெற்றிருக்கிறார். ஆனால் அருமையாக நடித்திருக்கிறார். தர்மலிங்கம் பிள்ளைக்கு ஆலோசனை சொல்லும் போதும், கடன்காரர்களை விரட்டியடிக்கும் போதும், சாமியாரான போதும் அவர் பேச்சும், பாவமும் பிரமாதம்.

டி. எஸ். பாலையாவின் நடிப்பு என்றுமே 'சோடை' போனதில்லை. எந்தப் பாத்திரத்தை ஏற்றாலும் அவர் அதைத் தம் சொந்தப் பாத்திரமாக்கிக் கொண்டு விடுகிறார். தர்மலிங்கம்பிள்ளையாக வேறு யார் வந்திருந்தாலும் டி. எஸ். பாலையாவைப் போல் அவ்வளவு அற்புதமாக நடித்திருக்க முடியாது.



ஏகம்பக் கவிமலர்கள்



2. பாழடைந்த வீடு

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டைக்கு அருகில் சாளுவ நாயக்கன் பட்டணம் என்று ஒரு ஊர் இருக்கிறது. இந்த ஊருக்குப் பெயர் ஏற்படக் காரணமான சாளுவ நாயக்கர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு சுவையான சம்பவத்தை இந்த வாரம் காண்போம்.

விசய நகரப் பேரரசின் ஆட்சி தமிழ் நாட்டிலும் பரவியிருந்த காலத்தில் அவ்வரசனின் தென்னாட்டுப் பிரதிநிதிகளாகப் பலர் அங்கிருந்து அனுப்பப்பட்டிருந்தனர். ஆட்சிப் பொறுப்பையும், பிற செயல்களையும் அங்கங்கே தங்கி நிர்வாகம் செய்ய இந்தப் பிரதிநிதிகள் பயன்பட்டனர். சாளுவ நாயக்கர் இப்படிப்பட்ட வகையில் பயன்படத் தென்னாட்டில் வந்து தங்கியிருந்த காலத்தில் தத்துவப் பிரகாசர் என்றொரு புலவர் இருந்தார். அவருக்குச் சைவ சமயத்திலே அளவற்ற பற்று உண்டு. திருஞான சம்பந்தர் என்றால் தம் உயிரினும் இனிதாகக் கருதுபவர். தன்மானப் பண்பு மிகுதியாக உள்ள புலவர் அவர்.

அருள் வலிமையால் கவி பாடும் ஆற்றலும், சமயப் பற்றும், மிகுந்த தத்துவப் பிரகாசருக்கு இலக்கணமும், மொழி மரபும் தெரியாதென்று சொல்லிப் புரளி பண்ணி அவரை வம்புக்கு இழுத்தார்கள் சிலர். அப்போதெல்லாம் சுடச்சுடப் பாட்டிலேயே பதில் சொல்லி அந்த வம்பர்களை மடக்குவார் அவர்.

தத்துவப் பிரகாசருக்குத் துணிச்சலும், துடுக்குத்தனமும் அதிகம். எப்பேர்ப் பட்ட மன்னாதி மன்னனுக்கு முன்னால் கொண்டுபோய் விட்டாலும் உண்மையைக் கூசாமல் குழையாமல் கன்னத்தில் அறைவது போல் சொல்லி விடுவார். இதனால் புலமைத் துறையில் அவருக்கு ஏற்பட்ட பகைகளும் எண்ணற்றவைதாம். சாளுவ நாயக்கரைச் சந்திக்கவேண்டுமென்று தத்துவப் பிரகாசருக்கு வெகு நாட்களாக ஒரு ஆசை இருந்தது. ஒருநாள் மாலை நேரத்தில் புறப்பட்டுப் போய்ச் சாளுவ நாயக்கருடைய மாளிகையை அடைந்தார் அவர். அரசப் பிரதிநிதி வசிக்கும் மாளிகை என்றால் சாதாரணமாகவா இருக்கும்? அங்கே ஆடம்பர ஆரவாரங்களுக்கு ஒன்றும் குறைவே இல்லை.

பழுத்த மரம் மேட்டிலிருந்தால் என்ன? பள்ளத்தில் இருந்தால் என்ன? அதை நாடிச் சென்றால் தானே பறவைக்குப் பசி தீரும். புலமை வாழ்க்கையும் அத்தகையது தானே? ஆடம்பர ஆரவாரங்களைப் பார்த்துக் கூச்சப்பட்டுக் கொண்டு சும்மா இருந்து விட்டால் வயிறு நிறையுமா?

தத்துவப் பிரகாசருக்குத்தான் கூச்சம் இருந்ததே இல்லையே. துணிவாகப் போனார். சாளுவ நாயக்கரைச் சந்தித்தார். சிரிக்கச் சிரிக்கப் பேசினார். அளவளாவினார். இலக்கியக் கருத்துக்களைக் கடல் மடை திறந்தாற்போல் அள்ளி விட்டார்.

ஆனால் தத்துவப்பிரகாசர் சிரித்துக் கலகலப்பாகப் பழகிய அளவுக்குச் சாளுவ நாயக்கர் பழகவில்லை. அளவாகச் சிரித்து அளவாகப் பேசித் தமது பதவியின் பெருமையையும், பணத்தின் பெருமையையும், நினைவு வைத்துக் கொண்டே பழகினார். தத்துவப் பிரகாசருக்கு அது வேதனை தந்தது.

"சமயம் வரட்டும்! சரியானபடி சொல்லிக் காட்டி விடுகிறேன்" என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டே வெளியில் வேறுபாடு தெரியாமல் பழகினார், தத்துவப் பிரகாசர்.

அன்றிரவு சாளுவநாயக்கர் மாளிகையிலேயே அவர் உணவு உண்டார். புலவர் தம் அருகே அமர்ந்து உண்ணத் தகுதியற்றவர் என்று காட்டிக் கொள்வது போல் நடந்து கொண்டார். தத்துவப் பிரகாசருக்குத் தன்மானக் கொதிப்பு முள்ளாகக் குத்தியது. பொறுமையைக் கடைப்பிடித்தார். புலவர் உண்டு முடிந்ததும், "உங்களுக்குப் படுத்துக் கொள்வதற்காகத் தனி வீடு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் அங்கேயே போய்ப் படுத்துக் கொள்ளலாம். நாம் மறுபடியும் நாளைக் காலையில் சந்திக்கலாம்" என்றார் சாளுவ நாயக்கர். புலவருடைய மனவேதனை முன்னினும் அதிகமாயிற்று.

சாளுவ நாயக்கர் ஒரு காவற்காரனைக் கூப்பிட்டு, "அடே! புலவரை அழைத்துக் கொண்டு போய் அவருக்காக ஏற்பாடு செய்திருக்கும் வீட்டில் படுக்கச் செய். வேண்டிய வசதிகள் செய்து கொடு" என்று உத்தரவிட்டுவிட்டார். காவற்காரன் தத்துவப் பிரகாசரை அழைத்துக் கொண்டு போனான்.

தாம் படுத்துக் கொள்ளும் விடுதியாக ஏற்பாடு செய்திருந்த வீட்டைப் பார்த்தாரோ, இல்லையோ, தத்துவப் பிரகாசருடைய கொதிப்பு நான்கு மடங்காயிற்று.

வீட்டைச் சுற்றிப் பார்த்தார். வீடா அது? ஏதோ ஒரு பாழடைந்த கட்டிடம். காலைத் தரைமேல் வைக்க வேண்டுமே என்று அசிங்கப்படுகிற அளவு புழுதி. கும்பல் கும்பலாக மூட்டைப்பூச்சி அடைந்திருந்தது. அந்த வீட்டிலிருக்கும் அவ்வளவு மூட்டைப் பூச்சியையும் ஒன்று சேர்த்தால் ஒரு கலத்துக்கு மேல் தேறும் போலிருந்தது. வீட்டின் முக்கால் பகுதி நிறைந்திருந்த பொருள் புழுதி. எஞ்சிய கால்பகுதியில் மூட்டைப்பூச்சி. இடிந்த சுவர்கள். காரை பரியும் மேல் விட்டம். புலவருக்குப் படுப்பதற்காகப் போட்டிருந்த பாய்களோ கிழிந்து அழுக்கேறியவை. தலையணைகள் வைக்கோல் திணித்துச் செய்யப்பட்ட பீற்றல் தலையணைகள். தையல் கிழிந்திருந்ததால் குச்சி குச்சியாக வைக்கோல் துருத்திக் கொண்டிருந்தது தலையணைகளில்.

புலவர் தத்துவப்பிரகாசர் உடன் வந்த காவற்காரனைப் பார்த்துக் கேட்டார்:— "ஏனப்பா! நாயக்கர் எனக்காக அரும்பாடுபட்டு இந்த அருமையான வீட்டைத் தயார் செய்தார் போலிருக்கிறது. இதோ ஒரு பாட்டு எழுதிக் கொடுக்கிறேன். அதைக் கொண்டு போய்ச் சாளுவ நாயக்கரிடம் கொடுத்துவிடு. அதோடு வீட்டையும் பூட்டிச் சாவியைக் கொண்டு போய்க் கொடுத்து விடலாம். நான் இங்கே படுக்கப் போவதில்லை. ஊருக்குப் போய்விட்டு வருகிறேன் என்று அவரிடம் சொல்."

தத்துவப் பிரகாசருடைய பேச்சிலிருந்த கோபக் குமுறலைக் கண்டு காவற்காரன் பயந்து விட்டான்.

"மூட்டை கலம்; புழுதி முக்காலும்
சுத்தப்பாழ்
வீட்டை விடுதியாய் விட்டாயே—
போட்ட
தடுக்கெல்லாம் பீறல் தலையணையோ
வைக்கோல்
படுக்கலாமோ சொல்லப் பா."


(பெருந்தொகை 1640)

உள்ளத்தில் பொங்கிய கொதிப்பின் வேதனை ஓலையில் வடிந்து உருப் பெற்றது.

"கொண்டு போய் உன் எஜமானன் முகத்தில் விட்டெறி" என்று பாட்டெழுதிய ஓலையையும், வீட்டின் சாவியையும் சேர்த்துக் காவற்காரன் முன்னால் வீசி எறிந்து விட்டு அன்றிரவே துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ஊர் திரும்பினார் தத்துவப் பிரகாசர்.

தன் பெருமை தாழும்போது எதையும் தூக்கி யெறிந்து பேசி விட்டு நிமிர்ந்து நடக்கும் இத்தகைய நிலை ஒவ்வொரு அறிவாளியின் வாழ்விலும் ஒரு கணமாவது வந்து போகும் நிகழ்ச்சிதான். — வளவன்


இங்கும்
வயிற்றை இன்னும் இறுக்கக் கட்டி வாயையும் கட்டுங்கள்!
அங்கும்
தோழர்களே! உங்களுக்கு அகோரப் பசி எடுக்கட்டும். வயிறு நிரம்ப நன்றாகச் சாப்பிடுங்கள்
குருசேவ்
அரசர்களுக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவதுதான் வேலை என்று ஆகிவிடுகிறது. அதுதான் எனக்குக் கூச்சமாக இருக்கிறது.
கூச்சப்பட வேண்டாம். இங்கே எங்கள் மந்திரிகளுக்கும் அதுவே தான் வேலை!
எடின்பரோ கோமகன்
"மாணவர்கள் சினிமாச் செலவைக் குறைத்துக் கொண்டு அதைச் சிறு சேமிப்பில் முதலீடு செய்ய வேண்டும்!
வரவேற்கிறோம்! ஆனால் சினிமா டிக்கெல்லாம் இலவசமாக அனுமதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்!"
ஸி. சுப்பிரமணியம்
சாமா



பூனாவில் ராஜாஜி விழா

தமிழ் நாட்டின் தவப்புதல்வர் ராஜாஜியின் 80-வது பிறந்ததின விழா பூனாவாசிகளால் வெகு குதூகலமாகக் கொண்டாடப்பட்டது.

ஜனவரி 18ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை ராஜாஜியின் திருவுருவப்படம் நன்கு அலங்கரிக்கப்பட்ட ரதத்தில்வைக்கப்பட்டு வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் ராஜாஜியின் புகழ் பாடி ஊர்வலத்தின் முன் சென்றனர். மாலை ஆறு மணிக்கு வித்தியாலய திறந்த அரங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். வேத பாராயணத்துடன் விழா துவங்கியது. வந்திருந்த அனைவரையும் விழாக் கமிட்டித் தலைவர் திரு என். வி. சந்திரசேகரய்யா வரவேற்றார்.

பூனா நகர மேயர் திரு ராமச்சந்திர தலாங் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

ராஜாஜியின் படத்தைப் பாரத ரத்னம் மகரிஷி கார்வேயின் புதல்வரும், சிறந்த அறிஞருமான டாக்டர் டி. டி. கார்வே திறந்து வைத்துக் கருத்துச் செறிந்த சொற்பொழிவாற்றினார். ராஜாஜியின் ஆங்கில மொழிக் கொள்கையைத் தான் மட்டுமல்ல, நாட்டின் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஆதரிப்பதாகக் கூறி, பாரத நாட்டின் ஒற்றுமை நிலைக்க வேண்டுமானால் ஆங்கிலமே அரசாங்க அலுவலக மொழியாகத் திகழ வேண்டுமென்று ஆணித்தரமாகக் கூறினார்.

பிறகு ராஜாஜியின் குணவிசேஷங்களைச் சித்திரிக்கும் திரு 'மயில'வின் பாடலைத் திரு சி. ஆர். சீனிவாசன் பாடினார்.

திருமதி ராஜலக்ஷ்மி சுப்பிரமணியத்தின் மெல்லிசை நடந்தது. சரஸ்வதி வித்தியாலயத்தின் உப தலைவர் திரு சாமி, ராஜாஜி படம் மாணவர்களிடையே நல்லொழுக்கத்தையும் பண்பாட்டையும் வளர்க்க உதவும் என்றும், பூனா மக்கள் ராஜாஜியின் பேர்தாங்கிய மணிமண்டபம் நிர்மாணம் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். திரு ராகவன் நன்றி கூறத் தேசிய கீதத்துடன் விழா இனிது முடிவடைந்தது.





1. விழாவில் திறந்து வைக்கப்பட்ட ராஜாஜியின் திருவுருவப் படம் 2. பூனா நகர மேயரின் துவக்க உரை. 3. ராஜாஜியின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகிறது. 4. விழாவில் நடைபெற்ற இசை விருந்து. 5. விழாவில் பங்குபற்றிய ரசிகர்கள்.





4. தீப்பொறி பறந்தது!

காலச் சக்கரம் சுழன்று சுழன்று ஓடியது. விநாடிகள், நாழிகையாகவும் நாழிகைகள் நாட்களாகவும், நாட்கள் மாதங்கள் வருஷங்கள் எனவும் ஓடின; ஓடிக் கொண்டிருந்தன.

கடிகாரத்தின் பல் சக்கரங்களில் பழுது ஏற்படலாம்; நின்று விடலாம். ஏனெனில் அது மனிதன் படைத்தது. ஆனால் காலதேவனின் சக்கரத்தில் பழுது ஏற்படுவதில்லை; நிற்பதும் இல்லை. 'சித்தம் போக்கு, சிவன் போக்கு' என்பார்களே, அது போல் ஆண்டவன் வகுத்த வழியே நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது. பகலவன் தோன்றி மறைந்து, பொழுதை ஏறி இறங்கச் செய்து, காலச் சக்கரம் இம்மிகூடப் பிசகாமல், விநாடிகூட நிற்காமல் சுழலுகிறது என்பதைப் புவிக்கு எடுத்துக் காட்டுகிறான். எனவே, காலச்சக்கரம் தன் இயல்பான போக்கில் போய்க் கொண்டிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை.

ஆனால் புவிவாழ் மாந்தர் சிலருக்குச் சில சமயம் அது ஓடுவதாகவே தெரி(வ)தில்லை. 'பொழுதே போகவில்லையே! பிடித்துத் தள்ள வேண்டியிருக்கிறதே!' என்று அலுத்துக் கொள்கிறார்கள்; சலித்துக் கொள்கிறார்கள். சிலரோ, 'இதென்ன இப்படிப் பொழுது ஓடி விட்டதே, குண்டு ஓட்டம், குதிரை ஓட்டம் என்று! ஏன் தான் இந்தப் பொழுதுக்கு இத்தனை அவசரமோ!' என்று தாபப்படுகிறார்கள்.

பொழுது, பொழுதாகத்தான் போய்க் கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாததல்ல. ஆனால் அவர்களது மன நிலையும் சூழ்நிலையும் அப்படியெல்லாம் எண்ணச் செய்கின்றன. இந்தக் கணக்கிலேதான், ஆறு நீண்ட ஆண்டுகள் ஓடி விட்டன. ஆனால் சதாசுகருக்கு அந்த ஆறு ஆண்டுகளும் ஆறு ஆண்டுகளாகத் தோன்றவில்லை. 'ஏன்? ஆறு நாட்களாகக் கூடத் தோன்றவில்லை. அத்தனை ஆண்டுகளும் கண் இமைக்கும் நேரத்திலே, நொடிப் பொழுதாக உருண்டோடி விட்டதாகவே தோன்றியது.

சாருமதி வைஜநாத்துக்கு வந்த நாளை நினைத்துப் பார்த்தார்; தம்மைத் தஞ்சம் புகுந்த நாளை எண்ணிப் பார்த்தார்; ராமு பிறந்து வளர்ந்ததைப் புரட்டிப் பார்த்தார். பற்றற்று வாழ



தாமரை

சுதர்சன்
தமிழாக்கம்: ரா. வீ.

வந்த தமது வாழ்விலே பற்றுக் கோடு ஒன்று ஏற்பட்டதையும் எண்ணிப் பார்க்க அவர் தவறவில்லை. சிந்தனை வேகத்தில், நாட்கள் நில்லாமல் நல்ல வேகத்தில் ஓடியிருக்கின்றன என்று அவருக்குத் தோன்றியது. அது மட்டுமா? அவர் மனக்கண் முன்னே ஓடிய காட்சிகள் எல்லாவற்றையும் நேற்று நடந்தது போலவே சித்திரித்துக் காட்டிக் கொண்டிருந்தன. அதன் பலனாக, 'சாருமதி நம் குடிசைக்கு நேற்றுத்தானே வந்தாள்? அதற்குள்ளாகவா ஆறு வருஷங்கள் ஓடி விட்டன?' என்று ஓரொரு சமயம் எண்ணலானார்.

வயதுக் காலத்தில் சதாசுகருக்குப் பெண்ணின் அன்பு மட்டும் கிடைத்ததாகத் தோன்றவில்லை. அழிந்து போய்க் கொண்டிருந்த அவருடைய இருதயப் பூங்காவிலே இன்பம் தரும் இளவேனிற் காலம் திரும்பவும் பிரவேசித்தது போலிருந்தது. ஆத்மா வென்னும் வற்றி வறண்டு விட்ட ஆற்றில் புது வெள்ளம் வந்து பாய்ந்தது போலும் இருந்தது. ஆகவே, அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாட எப்பொழுதும் ஆனந்தமாகப் பொழுதைப் போக்கலானார்.


ஒரு நாள் ராமு தனக்குத் துப்பாக்கி வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான். கடைத் தெருவுக்குப் போயிருந்த பொழுது அவன் யாருடைய கையிலோ துப்பாக்கியைப் பார்த்து விட்டான் போலும். வீட்டுக்கு வந்ததும் துப்பாக்கிக்காகச் சதாசுகரை நச்சரிக்கத் தொடங்கி விட்டான். சதாசுகர் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டார். ஆனால் அவன் கேட்டால் தானே? முதுமையின் உபதேசங்களைக் கேட்க இளமைக்குக் காது ஏது? "எனக்குத் துப்பாக்கி வாங்கிக் கொடுத்தால்தான் ஆயிற்று!" என்று அழுது புரண்டு அலறினான்; முரண்டு பிடித்தான்.

"இப்படியெல்லாம் முரண்டு பிடித்தால் தெரியுமா, சேதி?" என்று மிரட்டினார் சதாசுகர்.

அப்பொழுது அங்கே கன வேகமாகப் பறந்து வந்த காகம் ஒன்று 'லபக்' கென்று ஒரு பல்லியைக் கொத்தி விட்டது. பல்லியின் உடல் அதற்கு இரையாகி விட்டது. ஆனால் வால் மட்டும் அறுந்து கீழே விழுந்து துடித்துக் கொண்டிருந்தது. குழந்தையுள்ளம் அதை வேடிக்கை பார்க்கத் தூண்டவே, ராமு வைத்த கண் வாங்காமல், துடிக்கும் வாலையும் பல்லியைப் புசித்து விட்டு உட்கார்ந்திருந்த காகத்தையும் பார்த்தான். சதாசுகர் அவன் பிடிவாதத்தைப் போக்க ஒரு உபாயத்தைக் கையாள நினைத்தார். "பார்த்தாயா, அந்தப் பொல்லாத பல்லியைக் காக்காய் கொத்தித் தின்று விட்டது. நீ படுத்தினால் உன்னையும் காக்காய்க்குக் கொடுத்து விடுவேன்!" என்று, சிரித்தவாறே சொன்னார்.

ராமு காக்காயின் அலகைப் பார்த்தான்; தன் உடலைப் பார்த்தான்; உள்ளங் காலிலிருந்து உச்சந்தலை வரை தொட்டுப் பார்த்துக் கொண்டான். பிறகு "காக்காயின் வாய் எத்தனை சிறியது! என் தலை எத்தனை பெரியது! அதன் வாய்க்குள் என் தலை எப்படிப் போகும்? கொடுத்தால் கொடுத்துக் கொள்ளேன்!" என்று தைரியமாகச் சொல்லி விட்டான். குழந்தையின் சாதுர்யமான அந்தப் பதிலைக் கேட்டுச் சாருமதியும் சதாசுகரும் மகிழ்ந்து போனார்கள்.

குழந்தைகள் ஒரு காரியத்தை நினைத்துக் கொண்டு விட்டால், இலேசில் மறப்பதில்லையல்லவா? "தாத்தா, துப்பாக்கி!" என்று பழைய பாடத்தைப் படிக்கத் தொடங்கியவனுக்குச் சட்டென்று என்ன தோன்றியதோ, "தாத்தா! நீ ரொம்பப் பொல்லாத



தாத்தா! எனக்குத் துப்பாக்கி வாங்கித் தர மாட்டேன் என்கிறாய். உன்னையே காக்காயிடம் பிடித்துப் போட்டு விடுகிறேன், பார்!" என்றான்.

"சின்னப் பையனான உன் தலை அதன் வாயில் போகாது என்றாயே! பெரியவனான என் தலைமட்டும் அதன் வாய்க்குள் போகுமோ?" என்று கேட்டுச் சிரித்தார் சதாசுகர்.

"கிருஷ்ணன் கதையிலே அசுரன் வாய் பெரிசாகப் போயிற்றே! அது மாதிரி போய் விட்டால் என்ன செய்வாயாம்?" என்று மடக்கினான் ராமு.

"அது கதையல்லவா?"

"கதையாயிருந்தால்...? பொய்யோ? ஏன், தாத்தா! இத்தனை பெரிய நீ பொய் சொல்லலாமா? எனக்கு இப்படி ஒரு பொய்க் கதையைச் சொல்லி விட்டாயே!" என்றான்.

குழந்தையின் இந்தப் பேச்சைக் கேட்டுப் பெரியவர்கள் புளகமுற்றுச் சிரிக்காமல் என்ன செய்வார்கள்?


என்ன சொல்லியும் ராமு தனக்குத் துப்பாக்கி வேண்டும் என்ற பிடிவாதத்தை விடவில்லை! தாத்தாவை மடக்கத் தனக்குத் தெரிந்த புதுப் புது வழிகளையெல்லாம் கையாண்டான்.

"துப்பாக்கி வாங்கித் தரா விட்டால் நான் சாப்பிட மாட்டேன், போ!" என்பான் ஒரு சமயம். "நீ துப்பாக்கி வாங்கித் தரா விட்டால், நான் உன்னோடு பேச மாட்டேன். 'கா' விட்டு விடுவேன், தெரியுமா?" என்று மிரட்டுவான் இன்னொருசமயம். "நான் இன்றைக்கு இரவு உன் பக்கத்தில் படுத்துக் கொள்ள மாட்டேன். அப்புறம் நீ யாருக்குக் கதை சொல்லுவாய்?" என்று கேட்டு மடக்குவான் மற்றொரு சமயம். "நான் ஒன்றும் உன் குழந்தையாக இருக்க மாட்டேன். அப்புறம் நீ யாரை மடியிலே தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவாய்? யாருக்கு முத்தம் கொடுப்பாய்?" என்று பயமுறுத்திப் பார்ப்பான் வேறொரு சமயம். "'ராமு! நீ என் ராஜாக் கண்ணே இல்லையோ? சமர்த்தோ இல்லையோ?' என்றெல்லாம் சொல்லி என்னிடம் கொஞ்சுவாயே! நான் உன்னோடு 'கா' விட்டு விட்டால் அப்புறம் என்ன செய்வாய்? யாருடன் பேசுவாய்?" என்று கேட்பான் பிரிதொரு சமயம்.

சதாசுகரும் சாருமதியும் ராமுவின் இந்தச் சொற்களையெல்லாம் கேட்டு விழுந்து விழுந்து ஆனந்தம் கரை புரளச் சிரிப்பார்கள்.

"நம் ராஜ்யத்தையே பிடுங்கிக் கொண்டு விடுபவன் போல் இவன் எப்படியெல்லாம் பயமுறுத்துகிறான், பார்த்தாயா?" என்று சொல்லிச் சிரித்தார் சதாசுகர்.


ராமுவின் பொறுமைக்கு எல்லைமீறி விட்டது. அழாமல் கொள்ளாமல் அவன் தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள



எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டு பார்த்து விட்டான். எதுவும் பலனளிக்காமற் போகவே, அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. வயதாகியும் சதாசுகரோ அவனோடு அவனைக் காட்டிலும் சிறு குழந்தையாக விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்தார். வாய் வார்த்தையாகக் கேட்டால், தன் ஜபம் சாயாது என்பதை உணர்ந்தது ராமுவின் பூப் போன்ற குழந்தை உள்ளம். எனவே, பின்னாலேயே வந்து சதாசுகரின் முதுகில் விழுந்து விசித்து விசித்து அழலானான் அவன். இதுதான் அவனுடைய கடைசி ஆயுதம். அவன் தன்னுடைய கடைசி ஆயுதத்தைப் பிரயோகித்து விடவே சதாசுகரினால் கையைக் கட்டிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருக்க முடியவில்லை.

குழந்தை கண்ணீர் விட்டால் அவருக்கும் கண்ணீர் வந்து விடும்.

'அடாடா! அதிகமாக விளையாடி விட்டோமே! குழந்தையின் குறும்பிலே நமது மகிழ்ச்சியைப் பிரதானமாக எண்ணி அதற்கு வருத்தம் உண்டாக்கி விட



டோமே! நமது மகிழ்ச்சியைப் பெரிதாக எண்ணி விட்டோமே! என்ன இருந்தாலும் நமக்கு இத்தனை தன்னலம் ஆகாது!' என்ற ஞானோதயம் பிறந்தது அவருக்கு. 'இந்த ஞானோதயம் பிறக்க இத்தனை நாழிகையாக வேண்டுமா?' என்றும் மனம் நொந்தார். ஞானோதயம் பிறப்பது என்றால் இலேசான காரியமா? இந்தச் 'சிறு விஷயத்துக்காகக் குழந்தையின் மனத்தை இப்படிப் புண்படுத்தக் கூடாது' என்று தீர்மானித்தார் சதாசுகர்.

எனவே, அவன் ஆசைப்பட்டபொருளை அப்பொழுதே வாங்கிக் கொடுத்து விடுவது என்றும் முடிவுக்கு வந்தார். சாருமதியைக் கூப்பிட்டு, "அம்மா, சாருமதி! இவன் அழுது கண்களைக் கெடுத்துக் கொண்டு விடுவான்போலிருக்கிறது. நான் காங்கடிக்குத்தான் போய் வந்து விடட்டுமா? இப்பொழுது புறப்பட்டால் பொழுது போவதற்குள் திரும்பி வந்து விடலாம். குழந்தைதானே? இரண்டு ரூபாய்க்கு ஒரு துப்பாக்கி வாங்கிக் கொடுத்து விட்டால் சந்தோஷம் தலைகால் புரியாது. ஆனந்த நடனமே புரியத் தொடங்கிவிடுவான்" என்றார்.

சாருமதி அன்பு நிறைந்த கண்களுடன் சதாசுகரைப் பார்த்தாள். 'தெய்வத்துக்கு ஒப்பான இவர் கிடைத்திரா விட்டால் என் நிலை என்ன ஆகியிருந்திருக்கும்? குழந்தையைக் கண்ணின் மணியாகப் போற்றி இப்படி யார் பாதுகாப்பார்கள்?' என்ற எண்ணம் அவள் மனத்தில் எழுந்தது. அதைத் தொடர்ந்து அடுத்த நிமிஷமே, "இவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் என் கதி என்ன ஆகும்? நான் நிர்க்கதியாகித் தெருத் தெருவாக, ஊர் ஊராகச் சுற்றி அலைய வேண்டியதுதானே? யாரும் சரியாக முகம் கொடுத்துக் கூடப் பேச மாட்டார்களே! ஊர் சிரிக்க, உலகம் சிரிக்க...' என்ற எண்ணத் தகாத சிந்தனை பற்றிக் கொண்டது. அதற்கு மேல் அவளுக்கு யோசனை ஓடவில்லை. தன்னைச் சுற்றி நாற்புறமும் காரிருள் சூழ்ந்து விட்டதுபோன்ற பிரமை உண்டாயிற்று. அந்தக் கற்பனைப் பயத்திலே நடுநடுங்கிப் போய்விட்ட அவள் கண்களிலே நீர் பனித்துப் பளபளத்தது. தன் தலையை முழங்கால்களுக்கிடையே புதைத்துக் கொண்டு அப்பழுக்கற்ற மனத்துடன், 'சதாசுகர் நீடுழிகாலம் வாழ வேண்டும்' என்று எல்லாம் வல்ல இறைவனை அந்தரங்க சுத்தத்துடன் வேண்டிக் கொண்டாள். அந்தப் பேதைப் பெண்ணினால் செய்யக் கூடியது இது ஒன்றுதானே?

"என்ன, அம்மா! ஒன்றும் சொல்லாமல் இருக்கிறாயே!" என்று கேட்டுச் சதாசுகர் அவள் நினைவைத் திருப்பினார்.

"இல்லை, அப்பா! என்ன இருந்தாலும் குழந்தைகளை இப்படியெல்லாம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடக் கூடாது. இந்தச் சின்ன விஷயத்துக்காக இவ்வளவு தூரம் போய் வருவதென்றால் சிரமமாயிருக்காதா?" என்றாள் சாருமதி தன்னைச் சுதாரித்துக் கொண்டு.

"என்ன சிரமம்? பஸ்ஸில் போகப் போகிறேன், பஸ்ஸில் வரப் போகிறேன். இதற்காகப் பிரமாதமாகக் காசுதான் என்ன செலவழிந்து விடப் போகிறது? போய் வாங்கிக் கொண்டுதான் வந்து விடுகிறேனே!" என்றார் சதாசுகர்.

'இதெல்லாம் வாங்கிக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று என்ன?" என்று கேட்டாள் சாருமதி.

"ஊஹூம், அப்படிச் சொல்லாதே! இன்று முழுவதும் இவன் அழுகை ஓயாது. அழுது அழுது......"

"அழுதால் அழட்டுமே! வாய் வலித்துப் போனால் தானாகவே அழுகையை நிறுத்திக் கொள்ளுகிறான். அழுவானே என்பதற்காக இவன் கேட்பதையெல்லாம் நாம் வாங்கிக் கொடுத்துக் கொண்டே இருக்க முடியுமா? அப்படி வாங்கிக் கொடுக்க நமக்குக் கட்டத்தான் கட்டுமா? இன்றைக்குத் துப்பாக்கிக்காக அழுகிறான். நாளைக்கு மோட்டாருக்காக அழுவான். நாளை நீக்கிக் கப்பல் வேண்டும் என்று அழுவான். குழந்தைகள் கேட்பதற்கும் அழுவதற்கும் ஒரு கங்குகரை உண்டா, என்ன?"

"என்னமோ, சாருமதி! இவன் முகம் கோணுவதை நினைத்தாலே என் மனத்தை என்னவோ செய்கிறது. நான் என்ன செய்வது, சொல்லு!" என்றார் சதாசுகர்.

"நீங்கள் இப்படியெல்லாம் இடம் கொடுத்துக் கொடுத்துத்தான் இவன் இப்படித் தறி கெட்டுத் திரிகிறான். அப்பப்பா! என்ன பிடிவாதம்! என்ன பிடிவாதம்! முன்பெல்லாமாவது என்னிடம் கொஞ்சம் பயம் இருந்தது. இப்பொழுது என்னடாவென்றால் என்னிடம் கூடப் பயம் குறைந்து விட்டது. நேற்று உங்கள் அருமைப் பேரன் என்ன சொன்னான், தெரியுமோ? 'இந்த வீடு எனக்கும் எங்கள் தாத்தாவுக்கும்தான் சொந்தம். உனக்குச் சொந்தமில்லை. அதிகமாகப் பேசினால் வீட்டை விட்டே விரட்டி விடுவேன். தெரியுமா, சங்கதி?' என்றான்!" என்றாள் சாருமதி.

சதாசுகர் சிரித்துக் கொண்டே, "ஏண்டா, ராமு! அம்மாவை இப்படிச் சொல்லலாமாடா?" என்றார்.

ராமு அவர் சொல்லுவது எதையாவது காதில் வாங்கிக் கொண்டால் தானே? அவனுக்கு ஒரே குறி, ஒரே

நோக்கம். சதாசுகரின் மேல் விழுந்து புரண்டு, "எழுந்திரு, தாத்தா! போய்த் துப்பாக்கி வாங்கிக் கொண்டு வந்து கொடு!" என்று கண்களைக் கசக்கிக் கொண்டே சொன்னான்.

அவன் பிடிவாதத்தைக் கண்ட சதாசுகருக்கு வேறு வழி தோன்ற வில்லை. வேறு வழி தோன்றுவது ஏது? துப்பாக்கி வாங்கித்தான் ஆக வேண்டும் என்று ராமுவின் குழந்தைப் பிடிவாதம் அவரையும் பிடித்துக் கொண்டு விட்டது. குறிப்பிட்ட வயதைத் தாண்டி விட்டால் கிழவர்களும் குழந்தைகளாகி விடுகிறார்கள் என்பது எவ்வளவு அநுபவ பூர்வமான அசைக்க முடியாத உண்மை!

சதாசுகர் என்ன சாதாரணமான கிழவரா? உலகம் அறிந்த அநுபவம் முதிர்ந்தவரல்லவா? குழந்தையின் அந்தப் பிடிவாதத்திலும் ஒரு உன்னத நோக்கத்தைக் கண்டார். 'ஒன்றே தெய்வம்' என்னும் கொள்கையின் உண்மை அதில் உறைந்திருப்பதையும் உணர்ந்தார். 'அந்த ஒன்றைப்பெறக் குழந்தைராமு துப்பாக்கியில் தன் கருத்தைச் செலவிட்டிருப்பதுபோல் தாமும் செலவிட வேண்டும், அந்த ஒன்றிலேயே லயிக்கவேண்டும், ஒரு பொருளான ஆண்டவனை அடைய அது ஒன்றே வழி. அதைக் குழந்தை உருவத்தில் குருவாக வந்து ராமு காட்டுகிறான்.' இதை நினைத்த அவர் நெஞ்சுருகி, நெக்குருகிச் சிறிது நேரம் நின்றார். தமக்குக் குருவாகத் தோன்றும் அந்தக் குழந்தையின் ஆசையை நிறைவேற்றியே தீரவேண்டும் என்று தீர்மானமான முடிவுக்கு வந்தார். எனவே, கரகரத்துப் போன மெதுவான குரலில், "அம்மா, சாருமதி! நான் போய் வந்து விடுகிறேன். இவன் துப்பாக்கி வாங்காமல் விட மாட்டான் போலிருக்கிறது!" என்றார். அப்புறம் அவர் சாருமதியின் பதிலை எதிர்பார்க்கவும் இல்லை; ஆட்சேப சமாதானங்களுக்காகக் காத்திருக்கவும் இல்லை. உடனே எழுந்து சென்று தம் பெட்டியைத் திறந்து கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குப் புறப்பட்டு விட்டார். சாருமதி உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தபடியே சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள்.

'இவருக்குத்தான் என்னிடம் எவ்வளவு அன்பு! எவ்வளவு பிரியம்! எவ்வளவு பாசம்! போன பிறவியில் இவர் எனக்குத் தகப்பனாராகத்தான் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு அன்பும் பாசமும் என்னிடம் இவருக்கு ஏற்படுமா?'



கும்பகோணம் மீனா மெட்டாலிக் இண்டஸ்டிரீஸ் உரிமையாளர் திரு ஏ. ஆர். விஸ்வநாத செட்டியார் அவர்களின் குமாரி ஸ்ரீலதா, பேத்தி கஜேதா ஆகியவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் ராஜா தியேட்டரில் நடைபெற்றது. ஸ்ரீ என். வி. கல்யாணராமன் எம்.எல்.சி. தலைமை வகித்துக் குழந்தைகளின் நடனத்தை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

அவள் மனம் கற்பனைச் சிறகு கட்டிக் கொண்டு பூர்வஜன்ம வாசனையைப் பற்றிச் சிந்திக்க வானுயரப் பறந்து விட்டது.

சாயந்திரம் திரும்பும்பொழுது சதாசுகர் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார். அவர் ராமுவுக்குத் துப்பாக்கி மட்டும் வாங்கி வரவில்லை. சாருமதிக்காகப் புடவை, ரவிக்கை, ஸ்லீபர், போர்வை, ரிப்பன் முதலியனவும் வாங்கி வந்தார். தகப்பனார் பட்டணத்துக்குப் போனால் பெண்ணுக்கு ஒன்றும் வாங்காமல் வருவாரா? அவர் வாங்கி வந்த பொருள்களெல்லாம் என்னவோ சாதாரணமானவைதான். சாதாரண நிலைமையாயிருந்தால் இவற்றின் விலையும் சாதாரண மானதுதான். ஆனால் சதாசுகர் அவற்றை எவ்வளவு அன்புடனும் ஆர்வத்துடனும் வாங்கியிருந்தாரோ! அவ்வளவு அன்பும் ஆர்வமும், தன்னலம் நிறைந்த, உள்ளன்பு இல்லாத இந்த நயவஞ்சகக்கார உலகத்தில் காணக் கிடைக்கக் கூடியவையா?

சதாசுகரின் மனமும் கற்பனைச் சிறகு கட்டிக் கொண்டு வானுயரப் பறக்கத் தொடங்கி விட்டது.

'ராமு இந்தத் துப்பாக்கியைக் கண்டதும் எவ்வளவு ஆனந்தப்படு

வான்? மகிழ்ச்சியில் எப்படி எப்படி யெல்லாம் குதிப்பாள்? அவள் கண்கள் எப்படி ஒளி வீசும்? உதடுகளில் எப்படி யெப்படி யெல்லாம் புன்முறுவல் நெளியும்? போனதும், 'தாத்தா!' என்று உரக்கக் கூவிக்கொண்டு ஓடி வந்து நம்மை எப்படி இறுகக் கட்டிக் கொள்ளுவாள்? இதைப் பற்றி மூச்சு விடாமல் வாய் ஓயாமல் பேசித் தீர்த்து விடுவாள். இரவு இதைப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு அவள் தூங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சாருமதியைத் தொடக் கூட விடமாட்டாள்!'

ராமுவைப் பற்றியே எண்ணி வந்த சதாசுகரின் சிந்தனை 'சாருமதியைத் தொடக்கூட விடமாட்டாள்' என்ற எண்ணம் எழுந்ததுதான் தாமதம்; சாருமதியைப் பற்றிக் கொண்டது.

சிந்தனை என்பது ஒரு படரும் கொடி. அது தனக்கு எதையுமே கொழுகொம்பாக அமைத்துக் கொண்டு வானுயர வளரும். அல்லது புவி முழுவதும் பரவிப் படரும். சாருமதியைப் பற்றிய சிந்தனை எழுவே, 'குழந்தையும் தாயும் கணவனோடு குடித்தனம் நடத்தினால் எவ்வளவு நன்றாயிருக்கும்? வாழத் தெரியாத பாவி அவன் ஆனந்தத்தைக் கெடுத்து விட்டு ஓடிவிட்டானே! மாசு மறுவற்ற பூவுள்ளத்தை வாட்டி வதக்கி விட்டு ஓடி விட்டானே!' என்று எண்ணி வருந்தினார். 'எத்தனை தங்கமான பெண்! என்னிடம்தான் எத்தனை பிரியம் அவளுக்கு! பேச்சுக்குப் பேச்சு 'அப்பா!' என்று அவள் அழைப்பதுதான் எத்தனை இன்பம் பயக்கிறது!' இவ்வாறு எண்ணிப் பார்த்தவர், 'அவளுக்காக நாம் வாங்கிப் போகிறோமே, இந்தப் பொருள்களை யெல்லாம் பார்த்தால் சாருமதி என்ன சொல்லுவாள்?' என்று தம் மனத்தையே கேட்டுக் கொண்டார். 'இதெல்லாம் எனக்கு எதற்காக அப்பா வாங்கிவந்தீர்கள்? நீங்கள் வரவர வீண் செலவு செய்ய ஆரம்பித்து விட்டீர்கள், அப்பா!' என்று சொல்லுவாள். அப்பொழுது அவளுடைய உள்ளத்தில் ஆனந்தமும் அபிமானமும் கரை புரண்டு ஓடும். அவள் உள்ளத்தில் ஏற்படும் அந்த ஆனந்தத்தையும் அபிமானத்தையும் உலகத்தின் மாபெரும் கவிஞனே முன் வந்தாலும் வார்த்தைகளில் வடித்து வைத்து விடுவானா? ஊஹூம், முடியாது. முடியவே முடியாது. அவ்வளவு மகிழ்ச்சி வெறியில் மிதந்தே விடுவாள்! இப்படி நினைத்துப் பார்த்த அவரே மட்டற்ற மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து விட்டார்.

மாலை நேரம். இரவின் இருள் ஜன சஞ்சாரமற்ற மலைப் பாதைகளையும் இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாக விரிந்திருந்த குடிசைகளையும் கவிந்து கொள்ளுவதற்காக வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது; அதே சமயம் சதாசுகர் தம் குடிசையை நெருங்கி விட்டார். சாருமதி ராமு இருவரும் வாசற்படியில் நின்று கொண்டு வழி மேல் விழி வைத்த வண்ணம் தம்மை எதிர்பார்த்திருப்பார்கள் என்று அவர் எண்ணிக் கொண்டிருந்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி அங்கே யாரும் இல்லை. சதாசுகரின் மனம் இந்தக் காட்சியைக் கண்டதும் படபடவென்று அடித்துக் கொண்டது. ஒரே பாய்ச்சலில் உள்ளே நுழைந்தார். அங்கே அவர் கண்ட காட்சி! அப்பப்பா! சொல்லி முடியாது. அவருக்குத் தம் கண்களின் மீதே நம்பிக்கை உண்டாகவில்லை!

கட்டிலில் யாரோ ஒரு புது மனிதன் படுத்திருந்தான். அவன் அருகிலேயே கால்மாட்டில் உட்கார்ந்து கொண்டு சாருமதி அன்பு தவழும் பார்வையுடன் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். சதாசுகரின் கால்கள் அப்படியே நின்று விட்டன; அதற்கு மேல் ஒரு அடி கூட எழும்பவில்லை. அவர் மூச்சு விடக்கூட மறந்தவராய் அப்படியே அசைவற்று நின்றார். அதே சமயத்தில் படுத்திருந்த அந்த மனிதன் சாருமதியின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டவாறே, "அதெல்லாம் சரிதான், 'சாரு! ஆனால் இப்பொழுது நான் சொல்லுவதைக் கேட்டுத்தான் ஆகவேண்டும். இல்லாவிட்டால் நான் எங்கேயாவது குளங் குட்டையில் விழுந்து உயிரை விட்டு விடுவேன்!" என்றான்.

"இதென்ன, இப்படித் தத்துப் பித்து என்று பேசுகிறீர்கள்? உங்களை மீறி நான் நடக்கக் கூடியவளா? நீங்கள் சொல்லுகிறபடியே நான் செய்யச் சித்தமா யிருக்கிறேன்!" என்று கூறினாள் சாருமதி.

அவ்வளவுதான்-; சதாசுகரின் கண்களிலிருந்து தீப்பொறிகள் பறக்கத் தொடங்கின. (தொடரும்)

பாகவதமாகிய

பக்திவயல்

பௌராணிகர்

23. பிரஹ்லாத சரிதம் (3) நரசிம்மாவதாரம்

பிரஹ்லாதன் உரைத்த உபதேசத்தைக் கேட்ட அரசகுமாரர்கள் அதையே ஆமோதித்துத் தம் ஆசிரியர் கற்பித்த கல்வியைப் புறக்கணித்தார்கள். இதைக் கண்டு பயந்த ஆசிரியன் இப் புது மாறுதலை அரசனிடம் தெரிவித்தான். ஹிரண்யனுக்கு உடல் நடுங்கியது. எப்படியாவது மகனை மாய்த்துவிட வேண்டும் என்று நிச்சயம் செய்தான். மகனை வரவழைத்தான். பிரஹ்லாதன் வந்து வணங்கி நின்றான். கால் மிதிபட்ட சர்ப்பமெனச் சீறினான் அரக்கன். "குலத்தில் கலகத்தைக் கொண்டு வந்த கொடியவனே! இன்றே உன்னை யமன் வீட்டுக்கு அனுப்புகிறேன். எவன் பலத்தை நம்பி நீ மூவுலகும் நடுங்கும் என்னுடைய கட்டளையை மீறத் துணிந்தாய்?" என்றான்.

அதற்கு மைந்தன் மெதுவாகப் பதில் உரைத்தான்: "அரசே! எனக்கு பலம் அருளியவனே உனக்கும் பலம் அருளியிருக்கிறான். பலம் கொண்ட மற்றவருக்கும் பலமாக நிற்கிறான். பிரமன் முதலாகி இருப்பவை எல்லாம் அவனுடைய ஆட்சிக்கு ஆளானவை. காலமும் அவனே, எமை ஆளும் ஈசனும் அவனே. புத்தியும் அவனே, புஜ பலமும் அவனே. இவ் வரக்கத் தன்மையை அகற்று. மனத்தை அடக்கு. தடங்கலற்றுத் திரியும் மனமே மாந்தர்க்கு எதிரி. நிலைத்திருக்கும் மனமே பரம்பொருள். சேவைக்கு இன்றியமையாதது. ஐம்புலனும் மனமும் உள்ளிருக்கும் விரோதிகள். மூவுலகை வென்றாலும் இவர்களை வெல்லாது விடுவது வாழ்வுக்குக் கேடு. மனத்தை வென்றவனுக்கு அனைவரும் நண்பரே. அவனுக்கு எதிரி என்பவர் ஏது?" என்றான்.

ஹிரண்ய கசிபு மனத்தில் இந்த உபதேசம் சிறிதேனும் ஏறவில்லை. "வரம்பின்றிப் பேசுகிறாய். மடியவே இச்சை கொண்டாய் போலும். இறக்கத் துணிந்தவரே இவ்வாறு பிதற்றுவார். என்னையல்லால் இவ்வுலகத்துக்கு ஈசுவரன் ஒருவன் இருக்கிறான் என்றனையே! அவன் எங்கும் இருப்பானாகில் இதோ, இந்தத் தூணில் ஏன் தோன்றவில்லை? இப்பொழுதே உன்னைத் தலை வேறு உடல் வேறாய் வெட்டப் போகிறேன். நீ சரண் புகுந்த ஹரி உன்னைக் காப்பாற்றட்டும், பார்க்கிறேன்" என்று பலவாறு பக்தனை பாலகனை மிரட்டிக் கொண்டு சிங்காதனத்தை விட்டுக் கீழே குதித்துத் தன்முன் இருந்த தூணை விரல் மடக்கிய கையால் குத்தினான்.

அச்சமயம் அத் தூணினின்று ஓர் பேரரவம் எழுந்தது. அண்டமே பிளந்து போகுமோ என்று அச்சம் அளிக்கும் அவ்வொலியைக் கேட்டு, பிரமன் முதலியோர் தம் லோகமே அழிந்து போகிறது என்று அஞ்சினர். மைந்தனை மாய்ப்பதிலே மனம் இழந்த தானவேந்திரன் அரக்கர் மனத்தைக் கலக்கிய அவ்வோசையின் காரணத்தை உடனே அறியவில்லை.

தன் அருமை பக்தன் சொன்ன சொல்லை மெய்யாக்க வேண்டி அனந்தன் அந்தத் தூணிலே தோன்றினார். அவ்வுருவைக் கண்ட ஹிரண்ய கசிபு "இதென்ன தோற்றம்? மனிதனும் இல்லை, மிருகமும் இல்லை. மானிடச் சிங்கமாக இருக்கிறதே!" என்று எண்ணித் திகைத்தான். நரசிம்ம மூர்த்தி அரக்கன் கண்முன் நின்றார். உருக்கிய பொன் போன்ற பயங்கரக் கண்களும், பிடரித் தலை ரோமத்தால் பருத்ததோர் வதனமும், கோரமாய் வெளித் தோன்றும் கோரைப் பற்களும், வாளென்று கூராகி அசையும் பெரு நாவும், சினமேறிய பார்வையும், தூக்கி நிற்கும் காதும், பெருமலையின் குகையைப் போல் திறந்திருக்கும் வாயும், வானத்தைத் தொட்டாற்போல் நீண்ட நெடு மேனியும், வீங்கிய கழுத்தும், அகன்ற மார்பும், கருங்கிய இடையும், வெண் ரோமத்தால் மூடுண்ட பேருடலும், ஆயுதம்போல் நகம் வளர்ந்த கைகளும், அணுகுதற்கு இயலாத பொல்லாத பார்வையும் வாய்ந்த ஹரியைக்

கண்டு அங்கிருந்த அனைவரும் நடுநடுங்கிச் சிதறி ஓடினார்கள்.

“மாயாவியான மாதவனே என்னைக் கொல்லச் செய்யும் வழியேயாம் இது” என்று தீர்மானித்த ஹிரண்யன் கதையைக் கையேந்தினான். நரசிம்மனை எதிர்கொண்டு தாவினான். (தீயைத் தீண்டிய பூச்சியைப் போல் அப் பெரும் ஜோதியில் மறைந்து போனான். இருளையே விழுங்கிய சத்துவனிடம் இருளெனத் தோன்றிய ஹிரண்யன் அழிந்து கலந்ததில் விந்தை இல்லை.) ஓடி வந்து கதையால் தன்னைப் புடைக்கவந்த ஹிரண்யனைக் கதாதரன், கருடன் பாம்பைப் பிடிப்பதைப் போல் பிடித்தார். அரக்கன் பிடியினின்று நழுவினான். வானவர் அனைவரும் முகில் மறைவில் நின்றுகொண்டு இப் பயங்கரச் சண்டையைக் கண்டனர். தப்பித்த ஹிரண்யன் நரசிம்மன் மனம் தளர்ந்தான் என்று கருதித் தன் வாளைக் கையில் ஏந்தி அஞ்சாத நெஞ்சோடு திரும்பவும் எதிர்த்து வந்தான். ஹரி அட்டகாசம் செய்தார். பேரொலி யிட்டார். பருந்தைப் போல் படுவேகத்துடன் பதுங்கித் திரிந்தான் அரக்கன். ஆனால் ஆண்டவனின் ஜோதி அவன் கண்ணை இடுக்கியது. ஹரி அரக்கனைப் பிடித்தார். வாயிலருகில் கீழே தள்ளித் தம் துடைமீது வைத்துக் கொண்டார். நகங்களால் அவன் உடலைப் பிளந்தார். பீறிட்ட ரத்தத்தால் நரசிம்மன் முகம் சிவந்து தோன்றியது. அரக்கனின் குடலை மாலையாய் அணிந்து கொண்டார். மத யானையை மாய்த்த சிங்கமெனத் துலங்கினார். நெஞ்சைப் பிளந்துவிட்டு அரக்கனுடைய உடலை உதறித் தள்ளினார். அவனைச் சுற்றியிருந்த சேவகரை அடியோடு அழித்தார்.

நரசிம்மனுடைய பிடரி மயிரால் அசைவுற்ற மேகங்கள் சிதறுண்டன; பார்வையின் ஜோதியால் கிரகங்கள் ஒளி குன்றின; பெருமூச்சின் வேகத்தால் கடலும் கொந்தளித்தது; அவர் செய்த ஆரவாரத்தைச் செவியுற்ற திக்கஜங்கள் கதறின; தலை அசைத்த தருணத்தில் விமானங்கள் இடம் விட்டு மேல் கிளம்பின; கால் சுமை தாங்காமல் பூமியும் ஆடியது. பர்வதங்கள் பறந்தன. சிங்காதனத்தில் வீற்றிருந்த நரசிம்மன் முகத்தில் கோபம் குறையவில்லை.

பிரமனும் ருத்ரனும் ஏனைய தேவரும் அங்கு வந்து கூடினார்கள். ஆனால் பயங்கரத் தோற்றத்துடன் வீற்றிருக்கும் விஷ்ணுவை அணுகவே அஞ்சினர். ஒவ்வொருவராய்த் தோத்திரம் செய்தனர். அனந்தனுடைய ஆவேசம் அழியாததைக் கண்டு தேவர்கள் ஸ்ரீதேவியை வருமாறு வேண்டினர். அம்மையும் வந்தனள்; காணாத கோபத்தைக் கண்ணுற்றனள். அருகிலே போவதற்கு அச்சமுற்றனள். அச்சமயம் பிரமதேவன் பிரஹ்லாதனை அணுகி, “அப்பனே! உன் தந்தையிடம் கொண்ட கோபம் இறைவனுக்கு நீங்கவில்லை. அவரைச் சாந்தப்படுத்துவாய்” என வேண்டினார். “அங்ஙனமே ஆகுக” என்றான் பிரஹ்லாதன். மெல்ல விஷ்ணுவை அணுகினான். கை கூப்பிக் கம்பெனத் தரையில் விழுந்து வணங்கினான். தாளைத் தொட்டு வணங்கின சிறுவனைக் கண்ட மாதவன் மனமுருகித் தம் தாமரைக் கையை அவன் தலைமீது வைத்து வாழ்த்தினார். திருமாலின் கைபட்ட பிரஹ்லாதனுக்கு மின்னலைப் போல் மெய்யறிவு மலர்ந்தது. மயிர்க் கூச்செடுத்து மனம் கசிந்து கண்ணீர் மல்க அன்பினால் கம்மல் கொண்ட குரலோடு மாதவனைப் புகழலானான்:

முனிவரும் தேவரும் மாசற்ற சித்தரும்
ஓயாது பாடியும் காணாத மாதவன்
தனியனாய்த் தானவன் மைந்தனாய்த் தோன்றிடும்
தீக்குலச் சிறுவனை ஆட்கொள்வதாகுமோ?

ஆனையின் அரசனும் மூலமே வாவென்று
கூவியே கூப்பிட்ட மாபெரும் மாலினை
ஏனையோர் செல்வமும் போகமும் புத்தியும்
வலிமையும் அடைவதற் கல்பமன்றோ?



நாரணன் நாமங்களை எண்ணாத அந்தணர்
சீருடன் வாழினும் கீழ்க்குலம் ஆகுவர் ;
காரணன் பேரையே தோத்திரம் செய்பவர்
நாயுண்டு தீர்பினும் மேலான மாந்தரே.

தான்பூண்ட கோலத்தைக் கண்ணாடி காண்பிக்கு
மாமென்று, நாம்செய்த பூசையின் பலனெலாம்
மீனானமாதவன் தனக்கென்று நீண்டாது
மீண்டுமத்தொ ண்டருக்கே கொடுப்பான்.

அய்யனே ! ஆகவே அச்சமே இல்லாது
உந்தனைப்புகழவே முன்வந்து நிற்கிறேன்.
பொய்யான மாயையில் கட்டுண்ட பேதையும்
போற்றியே புண்ணியன் ஆவதும் திண்ணமே.

நீடித்த ஆயுளும் ஏராளச் செல்வமும்
விண்ணவர் வாழ்த்திடும் பெருமையும் எந்தையின்
ஜோடிப் புருவத்தின் அசைவினில் அழிந்தன.
அன்னவன் உன்னிடம் உயிர் இழந்தான்.

பக்தரோடுறவாடி நின்னையே நினைப்போர்க்கு
வேறான அருளொன்று தேவையில்லை
சக்தியின் மாயையால் இருளிலே இருப்போரைக்
கைதூக்கி விடுவதுன் கருணையன்றோ ?

தனிமையில் தனக்கென்றே தவம் செய்பவர் பலர்
மற்றோரைக் கருதாத பூசையில் பயனில்லை
இனிதான முக்தியை நான்மட்டு மெய்தாது
பாமரக் கோடியரை என்னோடு காப்பாய்.



சினத்தினைச் சிந்திவிட் டன்பனாய்த் தோன்றுவாய் ;
அரக்கனும் அழிந்தனன் ; தொண்டரே மிஞ்சினர்
மனத்தினில் வந்திடும் பயங்களை நீக்கவே
நரசிங்க ரூபத்தை அடியவர் எண்ணுவர்.

சிங்கமாய்ச் சீறிடும் அன்பனைக் கண்டுநான்
அஞ்சாதிருப்பினும், எந்தனுக்கு உந்தனின்
பங்கயத்தாளினில் புகல் அளிப்பாய் ;
மீண்டும் பிறப்பதற்கே இங்கு அஞ்சுகின்றேன்.

(பிரஹ்லாதன், தான் அடைய விரும்பும் பதவியை எல்லோரும் அடைய வேண்டும் என்று கருதி மற்றவருக்காக ஹரியிடம் மனுச் செய்தது வியக்கத் தக்கதோர் பெருஞ் செயல்.)

நரசிம்மமூர்த்தி மகிழ்ச்சி மிகுந்தவராய் வணங்கி நிற்கும் பிரஹ்லாதனிடம் பேசினார்: "பிரஹ்லாதனே ! உன்னிடம் பிரீதி அடைந்தேன். வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

பக்தனான பிரஹ்லாதன் ஒன்றையுமே விரும்பவில்லை. புன்சிரிப்புடன் பிரபுவினிடம் பேசினான்.

"இன்பங்களைக் கொடுக்கும் வரத்தைத் தந்து என்னை ஆசை காட்டலாகாது. அவைகளுக்கு அஞ்சியே உம்மிடம் சரண் புகுந்துளேன். என் மனப்பான்மையை அறியவே, 'வரம் தருவேன்' என்கிறீர் போலும். இல்லையேல் அன்பனுக்கன்பனை நீங்கள் ஏன் இவ்வாறு வினவ வேண்டும்? சிற்றின்பங்களை இச்சித்துத் தேவரீரை வணங்குபவன் வியாபாரியே அல்லாது பக்தன் அல்ல. நம் இருவருக்கும் வாய்த்த பொருத்தம் அரசனுக்கும் சேவகனுக்கும் இடையே இருக்கும் சம்பந்தம் அன்று. ஆயினும், இச்சைகளை நிறைவேற்ற வல்லவனே! எனது கோரிக்கையைக் கொடுக்க எண்ணினையானால், ஒன்றே கேட்பேன். கோரிக்கை ஒன்றுமே என் மனத்தில் எழாமல் அருளுவாய். அதிசயச்சிங்கனே! உன்னை வணங்குகிறேன்" என்றான் பிரஹ்லாதன்.

பரமன் மகிழ்ந்தார். ஒரு மன்வந்தரம் தைத்தியருக்கு அரசனாக இருக்கும்படி பிரஹ்லாதனுக்குக் கட்டளை இட்டார். தன் தந்தையின் பாபங்களைப் பொறுக்க வேண்டும் என்று பிரஹ்லாதன் ஹரியை வேண்டினான். "நீ பிறந்த புண்ணியத்தால் உன் தகப்பனுடன் இருபத்தியொரு தலைமுறை உன் மூதாதையர் கடைத்தேறி விட்டனர்" என்று நரசிம்மமூர்த்தி அருளினார்.

இவ் வரலாற்றை ராஜசூய யாகத்தில் தருமனுக்கு நாரதர் எடுத்துரைத்தார் என்று முன்னமேயே கூறியிருக்கிறோம். தருமனுக்கு நாரதர் இதன் பின் நான்கு ஆசிரமத்தில் இருப்பவரும் எவ்வாறு நல்லொழுக்கங்களைக் கைப்பற்றி வாழ வேண்டும் என்பதை விவரித்தார். தன் இடையே துறவிகள் வாழ வேண்டிய வழியைப் பற்றிக் கூறும் பொழுது, பிரஹ்லாதனுக்கு தத்தாத்ரேயர் ஒரு சமயம் செய்த உபதேசத்தை எடுத்துரைத்தார். "இவ்வுலகில் தேனீயும் மலைப்பாம்பும் இரண்டு சிறந்த ஆசிரியர்கள். அவை கற்பிக்கும் பாடம் என்னவெனில், தான் சேமித்ததைப் பிறர் பிடுங்குவதைப் பார்த்தும் தேனீ அதன் வேலையைச் சோர்வின்றிச் செய்கிறது. இருந்த இடத்தை விட்டு அகலாமல் அகப்பட்டதை உண்டு காலத்தைக் கழிக்கின்றது மலைப் பாம்பு. இதுவே துறவிக்குத் தகுதியான வழியாம்" என்பது அந்த உபதேசத்தின் கருத்து.

கண்ணனுடைய பெருமையை நாரதர் சொல்லக் கேட்டுத் தருமர் ஆனந்தம் அடைந்தார். நாரதரையும் கண்ணனையும் பூஜை செய்தார்.

பட்டி தொட்டியில் பத்து நாள்



கதிர்

ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு ரயில் வண்டியிலோ, பஸ்ஸிலோ பிரயாணம் செய்யும்போது, நடுவழி கிராமப் புறங்களில் ஆங்காங்கு சில போர்டுகள் நடப்பட்டிருப்பதைக் காண லாம். அந்தப் போர்டுகளில், பெரிய கொட்டை எழுத்தில் "தேசிய வளர்ச்சித் திட்டம்" என்ற தலைப்பும் அதனடியில் சில புள்ளி விவரங்களும் காணப்படும். சில இடங்களில் 'வட்டார வளர்ச்சித் திட்டம்' என்றும், 'சமுதாய வளர்ச்சித் திட்டம்' என்றும் குறிப்பிடப் பட்டிருக்கும்.

இவற்றைத் தவிர, சாலை ஓரமாக உள்ள வயல்களில், 'ஜப்பானியச் சாகுபடி' என்று விளக்கும் போர்டு ஒன்று ஆங்காங்கே சிறு குச்சிகளில் தொங்கவிடப் பட்டிருக்கும்.

பிரயாணம் செய்யும் போதெல்லாம், "என்றாவது ஒரு நாள் இந்தச் சமுதாய வளர்ச்சி வட்டாரத்துக்குள் போய்ப் பார்த்துவிட வேண்டும்" என்று தீர் மானித்துக் கொள்வேன்.

இந்த ஆவலை அதிகரிக்கச் செய்வதே போல், பத்திரிகைகளிலும் அடிக்கடி நமது மந்திரிகள் கிராமங்களில் சுற்றுப்பிரயா ணம் செய்து துவக்க விழாக்கள் நடத்தும் செய்திகள் வந்து கொண்டிருக்கும்.

"கொள்ளுப்பட்டி கிராமத்தில் அமைச் சர் திரு....அவர்கள், சமுதாய வளர்ச்சிக் கிணறு ஒன்றைத் திறந்து வைத்தார்...!"

"எள்ளுப்பட்டி கிராமத்தில் தாய் சேய் நலவிடுதிக்கு அமைச்சர் அஸ்திவாரக் கல் ஒன்றை ஊன்றினார்!"

"செங்கற்பட்டி கிராமத்தில் காளை களுக்கு மூக்கணாங்கயிறு பரிசளித்தார்!" என்பதுபோன்ற செய்திகள் புகைப் படங் களுடன் வெளிவரும். இவற்றைப் பார்த் ததும், "ரயில் வண்டியிலிருந்து கீழே குதித்தாவது நாம் இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டத்தை ஒருநாள் பார்த்தே தீருவது!" என்று தீர்மானம் செய்து கொண்டு விட்டேன்.

நல்ல வேளையாக அந்த மாதிரியெல்லாம் ரயில் வண்டியிலிருந்து கீழே குதித்து, நமது ரயில் வண்டிகளின் ஆமை வேகத் தைக் குறைக்கவொட்டாமல், சென்னை அரசாங்கத்தின் தகவல் அறிவிப்புத்துறை அதிகாரி என்னைத் தடுத்து விட்டார்!

சமுதாய வளர்ச்சித் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்கள் சிலவற்றை நேரில் வந்து காண வேண்டு மென்று பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு அனுப்பி யிருந்தார். அந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கு நான் ஏன் தயங்கப் போகிறேன்?

மொத்தம் நான்கு ஜில்லாக்களில் இந்தச் சமுதாய நலத் திட்டங்களை யெல்லாம் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எட்டு தினங்கள் இதற்கு அவகாசம் அளித்திருந்தார்கள்.

ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய நான்கு ஜில்லாக் களின் கிராமங்கள் சிலவற்றைக் காண ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

இவை தவிர பெரியாறு அணை, வைகை அணை, பாபநாசம் அணை, மணிமுத்தாறு அணை இவற்றைக் காணவும் திட்டம் வகுத்திருந்தார்கள். மதுரை, ஸ்ரீவில்லிப் புத்தூர், ஆழ்வார் திருநகரி, திருச்செந் தூர் முதலிய ஸ்தலங்களில் ஆலய தரிசனத்துக்கும் வாய்ப்பு அளித்திருந் தார்கள். திருக்குற்றாலத்தில் நீராடுவதற் கும் வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது.

சென்னையிலிருந்து இந்த நிருபர்கள் கோஷ்டி சென்ற டிஸம்பர் மாதம் 29-ந் தேதி கிளம்பிற்று. நிருபர்களுக்கு வேண் டிய உதவிகள் செய்யவும் வழி காட்டவும் அரசாங்கத் தகவல் துறை, பொதுஜனத் தொடர்பு அதிகாரி ஸ்ரீ எஸ். வேங்கடசாமி அவர்கள் எங்களுடன் கூடவே பிரயா ணம் செய்தார். பிரயாண ஆரம்பத்தி லேயே எல்லோருடைய மனத்தையும் அவர் கவர்ந்துவிட்டார். யார் எவ்வளவு கேள்விகள் கேட்டாலும், அலுக்காமல் பதில் சொல்லும் அவரது பொறுமையை நானும் சோதிக்காமல்விடவில்லை. "தேசிய விஸ்தரிப்புத் திட்டத்துக்கும், சமுதாய

வளர்ச்சித் திட்டத்துக்கும், ஸ்தல அபிவிருத்தித் திட்டத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன?'' என்று அவரைக் கேட்டு வைத்தேன்.

''அடிப்படையில் ஒரு வித்தியாசமும் இல்லை. பிரும்மா, விஷ்ணு, சிவன் என்று மூர்த்திகள் வெவ்வேறாக விளங்கியபோதிலும், ஜீவராசிகளை உய்விப்பது ஒன்றே அவற்றின் குறிக்கோள். அம்மாதிரிதான் இதுவும். கிராமங்களை வாழ்விப்பதுதான் இந்தத் திட்டங்களின் லட்சியமாகும். இந்த மார்கழி மாதத்தில் நாம் மேற்கொண்டிருக்கும் பிரயாணமும் பகவத் சங்கற்பமானதே. மாதங்களில் தாம் மார்கழியாக விளங்குவதாகச் சாட்சாத் நாராயணன் கூறியிருக்கிறார்...!'' என்று ஸ்ரீவேங்கடசாமி பதிலளித்தார். இவ்வாறு அவர் பதில் கூறியபோதெல்லாம், சிறந்த வைஷ்ணவ பக்தர் ஒருவருடன் பிரயாணம் செய்யும் வாய்ப்பு பெற்றதாக எண்ணி மகிழ்ச்சி அடைந்தேன்.

மறுநாள் காலை திண்டுக்கல்லில் நாங்கள் இறங்கியதும், ''பிளாக் டெவலப்மெண்டு ஆபீசர்'' (வட்டார வளர்ச்சி



ஆத்தூர் கோழிப் பண்ணை

அதிகாரி) கைத்தொழில் அதிகாரி, கம்போஸ்ட் உர அதிகாரி, விவசாய அதிகாரி என்று பல அதிகாரிகளும் உதவி தண்டல் நாயகம் திரு திரவியம் அவர்களும் எங்களை வரவேற்றனர். அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, எங்களுக்காகத் தயாராகக் காத்திருந்த அழகும், சுத்தமும் ஒருங்கே அமைந்த டி. வி. எஸ். பஸ்ஸில் அமர்ந்து ஏழு மைல் தூரத்திலுள்ள காந்திக்கிராமத்துக்குச்சென்றோம்.

காந்திக் கிராமத்தினுள் இறங்கிச் சுற்றுமுள்ள ஆசிரமங்கள், மாணவ இல்லங்கள், தலை நிமிர்ந்து உழுது கொண்டிருந்த காளைகள், தூய கதராடை தரித்துச் சுறுசுறுப்போடு ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருந்த இளைஞர்கள், ஆங்காங்கே ராட்டைகள் சுழலும் காட்சிகள் இவற்றைப் பார்த்ததும் என்னை அறியாமலேயே எனக்குக் கிராமியக் கலை கட்டி விட்டது.

பெட்டிபடுக்கையை விருந்தினர் குடிசை ஒன்றில் போட்டு விட்டு, வயல் வரப்பின் வழியாக நடந்தேன்.

வரப்புகள் வழியாகவும், வேலிகளைத் தாண்டிக் கொண்டும் சென்ற நிருபர்கள் ஒவ்வொருவரையும் ஒருவர் அன்போடு துரத்திக்கொண்டு வந்து நிறுத்தி, ''தயவு செய்து அந்தக் கொட்டகைக்குப் போங்கள்!'' என்று கேட்டுக் கொண்டிருந்தார்.

அவர்தான் காந்தி கிராமத் தலைமைப் பணியாளர் திரு வாஸன்ஜி. அவர் சுட்டிக் காட்டிய கொட்டகைக்குள் சென்றதும் எங்களுக்குக் காலை ஆகாரம் அளிக்கப்பட்டது. ஆகாரத்தை முடித்துக்கொண்டு வெளியேற நினைத்தபோது மாணவர் ஒருவர் புன்முறுவலுடன் எங்களில் சிலரை வாசற்படியில் தடுத்து நிறுத்தி, ''தயவுசெய்து அவரவர்கள் சாப்பிட்ட இலைகளை அவரவர்கள் எடுத்துக் கொண்டு போய்ப் போட்டு விடலாமா?'' என்று கேட்டுக் கொண்டார். நாங்கள் செய்ய மறந்துபோன இந்தக் கடமையை நினைவூட்டியதற்காக அவரைப் பாராட்டி விட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் இலைகளை எடுத்துச் சென்று அதற்காக வெட்டப்பட்டிருந்த குப்பைக் குழியில் போட்டு விட்டு வந்தோம்.

காந்திக்கிராம அமைப்பும், அங்கு நிலவும் கடமை உணர்ச்சியும் ஏற்கெனவே கிராமியக்கலை கட்டிவிட்ட எனக்குச் சமுதாய வளர்ச்சிக் கிராமத்துக்கு எப்போது போகப் போகிறோம் என்ற ஆவலை அதிகரிக்கச் செய்தன. சிறிது நேரத்துக்குள் ஸ்ரீ வேங்கடசாமி எங்கள் எல்லோரையும் பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு, அங்கிருந்து ஏழு மைல் தூரத்தில் உள்ள ஆத்தூர் என்னும் கிராமத்துக்கு அழைத்துச் சென்றார். எங்களுடைய வருகையை எதிர்பார்த்து வட்டாரத் திட்ட அதிகாரிகள் பலர் ஒரு குழியின் அருகே நின்று கொண்டிருந்தார்கள். அந்தக் குழியினருகே சென்று பார்த்ததும், அங்கு ஒரு சிறிய கட்டடத்துக்குக் கருங்கல்லால் அஸ்திவாரம் எழுப்பப்பட்டு வருவதைப் பார்த்தேன். ''ஓரளவு ஊர் ஜனங்கள் உதவியுடன் இங்கு ஒரு மருத்துவ மனை எழுப்பப்படுகிறது...இதன் செலவில் கால் பாகம் ஊரார் பங்கு, மீதியை வட்டார வளர்ச்சிக் குழு ஏற்கும்!'' என்று கூறி அதன் புள்ளி விவரங்களை வட்டார அதிகாரி ஒருவர் விளக்கினார். அதைப் பார்த்து விட்டுச் சற்று அப்பால் தோண்டப்பட்டிருந்த வேறு குழிகளைப் போய்ப் பார்த்தோம். அங்கு வேறொரு அதிகாரி தோன்றி ''இவைதான் சமுதாய உரக் குழிகள். இந்தக் குழிகளை விவசாயிகள் உபயோகிக்கலாம். ஆளுக்கு ஒரு குழி வீதம் வாடகைக்கு 'விட்டு வைக்கிறோம். வாடகை ஆண்டு ஒன்றுக்கு ஓரணாதான்!'' என்று விளக்கினார். அவர் 'கம்போஸ்ட்' உர அதிகாரி. ஒரு குழியிலாவது குப்பை, சத்தை இல்லாமல் சுத்தமாய் இருப்ப

தைப் பார்த்துச் சற்று வருத்தப்பட்டு விட்டு அருகிலிருந்த ஓர் ஆரம்பப் பள்ளிக்குச் சென்றோம்.

போகும் வழியில் எங்களுடன் வந்து கொண்டிருந்த சிலர் பேசிக்கொண்டிருந்து அந்தக் கிராமத்தில் அரசியல்வாதிகளும் அதிருப்திவாதிகளும் இருப்பது விளங்கியது. அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளாமல் பள்ளிக்கூடத்துக்குள் சென்றோம். அந்தப் பள்ளிக்கூடம் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் நடத்தப்படுகிறது. சமுதாய வளர்ச்சிக் குழு அதற்கு உதவி செய்திருக்கிறது. எல்லா வகுப்புக் குழந்தைகளும் அதில் படிக்கிறார்கள். பள்ளிக் குழந்தைகள் எங்களைக் கும்மிப் பாட்டுக்கள் மூலமாக வரவேற்றனர். அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துவிட்டு வெளியேறி, ஒரு தெரு வழியாக வரும்போது ராம நாமம் காதில் ஒலித்தது. ராம நாமம் எழுந்த வீட்டுக்குள் நுழைந்ததும் எங்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அந்தச் சிறு வீட்டில் சென்ற இருபத்தைந்து வருடங்களாக ராம பஜனை சங்கம் ஒன்று நடந்து வருவது தெரிய வந்தது. சங்கத்தினுள் நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். குழந்தைகள் நாமாவளி பாடினார்கள்.

அந்த ஊரில் இந்த ராமபஜனை சங்கத்தார் சில அரிய பணிகளையும் செய்திருக்கிறார்கள். சங்க அங்கத்தினர்கள் ஒன்றுசேர்ந்து, சாலை ஓரத்தில் பல வருஷங்களுக்கு முன்னதாகவே — அதாவது இந்தச் சமுதாய நலத் திட்டங்கள் அமுலுக்கு வருவதற்கு முன்னதாகவே மரங்கள் நட்டுத் தவறாமல் தண்ணீர் ஊற்றி வந்திருக்கிறார்கள். குழந்தைகளுக்கு விளையாடும் இடம் அமைத்து நாற்புறமும் செடிகள் வளர்த்திருக்கிறார்கள். தெருவைச் சீரமைப்பு செய்திருக்கிறார்கள். சமுதாய அபிவிருத்திப் பணிக்கு இந்தச் சங்கத்தினிடம் உள்ளது போன்ற உற்சாகத்தை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். "வெறும் சமுதாயப்பணி மட்டும் போதிய பலனைத் தந்து விடாது. கடவுள் பக்தியுடன் செய்யும் பொதுப் பணிகளே சிறப்பாக விளங்கும்!" என்று கூறி நிற்கிறது, ஆத்தூர் ராமபஜனை சங்கமும், அதன் சேவைகளும்.

அடுத்தபடியாக அங்கிருந்து ஒரு கோழிப் பண்ணைக்குச் சென்று பார்த்தோம். "ஒயிட் லெக் ஹோரன்" என்ற வகைக்கோழிகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. இந்தக் கோழிகள் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவை. இக்கோழிகளுக்கு முட்டையிடத்தான் தெரியுமே தவிர, அடைகாக்கத் தெரியாது. அடைகாக்கும் வேலையை உள்நாட்டுக் கோழிகள் நிறைவேற்றுகின்றன. தினம் ஒரு முட்டை இடக்கூடிய இந்தக் கோழிகளின் எண்ணிக்கையை வளர்க்க, கிராமவாசிகளுக்குக் கடனாகவும் இலவசமாகவும் முட்டைகள் வழங்குவதாகக் கூறப்பட்டது.

கோழிப் பண்ணையை யொட்டி, பொலி காளைகளும், எருமைக் கடாக்களும் காணப்பட்டன. இவற்றைக் குறித்து அதிகமாக விசாரிக்க நேரமில்லை. அவசரம் அவசரமாக அங்கிருந்து தருமத்துப் பட்டி என்ற கிராமத்துக்கு வந்து சேர்ந்தோம்.

தருமத்துப்பட்டி சிறியதோர் குக்கிராமம். வறுமை தாண்டவமாடுவது வெளிப்படையாகவே தெரிய வந்தது. இந்தக் கிராமத்தில் மாதர் சங்கம் ஒன்று அமைத்திருக்கிறார்கள். கிராமப் பெண்களுக்கும் மாதர்களுக்கும் இந்தச் சங்கத்தின் மூலம் சகோதரியார் ஒருவர் பணியாற்றி வருகிறார். இவருக்கு "எஸ். ஈ. ஓ." என்று பெயர். "சமூகக் கல்வி அமைப்பாளர்" என்று இதன் பொருள். எஸ். ஈ. ஓ.க்களில் ஆண்களும் உண்டு; பெண்களும் உண்டு. இவர்களைத் தவிர கிராம சேவகர்கள், கிராம சேவிகள் என்ற ஊழியர்களையும் சமுதாய வளர்ச்சி வட்டாரம் முழுதும் காணலாம்.



காந்தி கிராமத்தில் உழவு நடக்கிறது !

தருமத்துப்பட்டி மாதர் சங்கத்தில் சில பெண்மணிகள் நூற்பு கற்றுக் கொள்கிறார்கள். தையல் இயந்திரம் ஒன்றும் அங்கு காணப்பட்டது. காற்றோட்டமோ, வெளிச்சமோ இல்லாத மிகச் சிறிய இடத்தில் மாதர் சங்கம் அமைந்திருப்பதைப் பார்த்துவிட்டு வெளியே வந்தோம். பிறகு சமுதாய வளர்ச்சி அலுவலகத்துக்குச் சென்றோம். "கிராமத்துத் தெருவில் அமைந்துள்ள அந்த அலுவலக இல்லத்துக்கு வாடகை உண்டா? அல்லது இலவசமாக ஊரார் யாராவது அளித்தார்களா?" என்று என் அருகிலிருந்த வட்டார வளர்ச்சி அதிகாரி ஒருவரைக் கேட்டேன்.

"வாடகை வீடுதான் இது!" என்று பதிலளித்தார் அவர்.

"என்ன வாடகை அளிக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"மாதம் அறுபது ரூபாய் வாடகை!" என்று அவர் பதில் கூறியதும் நானும் என் அருகிலிருந்த நிருப நண்பர்களும் திடுக்கிட்டுப் போனோம்.

"சென்னைப் பட்டினத்து வாடகை கெட்டது போங்கள்!" என்று கூறி விட்டு, அலுவலகத்தில் நுழைந்தோம். அங்கு வட்டார வளர்ச்சித் திட்டத்தைப் பற்றிய அறிக்கைகள் எங்களுக்கு வழங்கப் பட்டன.

தருமத்துப்பட்டியிலிருந்து கிளம்பி, வழியில் ஒன்றிரண்டு அபிவிருத்தி வேலை முறைகளைப் பார்த்துக் கொண்டு காந்தி கிராமத்துக்குத் திரும்பினோம்.

காந்தி கிராமத்தில் இரவு தங்கி, மறு நாள் அங்கு நடைபெறும் பல விதமான பயிற்சித் திட்டங்களையும் சேவைகளையும் சுற்றிப் பார்த்தோம். காந்திக் கிராமத்தின் சிறப்புப் பணிகள் பலவற்றில் முக்கியமாக அநாதைக் குழந்தைகளைத் தாயன்புடன்



தருமத்துப்பட்டி கிராமத் தோற்றம்

வளர்த்துக் கல்வி புகட்டி வருவதைக் குறிப்பிட வேண்டும்.

காந்திக் கிராமத்தில் காணப்பட்ட சேவா உணர்ச்சியை, கல்லுப்பட்டி காந்தி நிகேதனத்திலும் நாங்கள் காணலானோம். தமிழ் நாட்டில் முக்கியமாக விளங்கும் இவ்விரு காந்திய வழி சேவா நிலையங்களைக் கண்டதோடு, ராஜபாளையத்தில் காலஞ் சென்ற ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கள் நினைவாக விளங்கி வரும் காந்தி கலா நிலயத்தைப் பார்க்கும் வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது. இந்த ஸ்தாபனங்களிலிருந்து கிடைத்த ஆத்மீக உணர்வுடன், ஒரு வார காலம் வரையில் ஏறக்குறைய ஐம்பது கிராமங்களைச் சுற்றிப் பார்த்தோம்.

தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழுள்ள கிராமங்களையும் பார்த்தோம். சமுதாய வளர்ச்சித் திட்டக் கிராமங்கள் பலவற்றையும் பார்த்தோம். ஸ்தல அபிவிருத்தித் திட்டத்துக் கிராமங்களையும் பார்த்தோம்.

ஆசார்ய வினோபாஜி அவர்கள் விஜயம் செய்ததன் பயனாக ஏற்பட்ட கிராம தானப் பகுதி ஒன்றையும் பார்த்தோம்.

சில கிராமங்களில் நாங்கள் ஒரு மணி நேரத்துக்கு அதிகமாகத் தங்கி ஆராய்ச்சிகள் செய்தோம். பெரும்பாலான கிராமங்களில் பத்து பதினைந்து நிமிஷங்களுக்குள் அவசரம் அவசரமாக வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு, வந்தனோபசாரம் கூறி விட்டுத் திரும்பி விட வேண்டியிருந்தது. இரண்டொரு கிராமங்களுக்கு நாங்கள் செல்லும்போது இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிட்டது. சில கிராமங்களில் எங்களைக் கிராம மக்கள் அன்புடன் ஒயில் ஆட்டம், தாரை தப்பட்டைகளுடன் வரவேற்று மகிழ்ந்தனர்.

ஓரிடத்தில் எங்கள் பஸ்ஸை இரவு எட்டு மணிக்கு மேல் சிலர் வழிமறித்து அங்கிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு வந்து தான் ஆக வேண்டும் என்று கூறினார்கள். எங்களுக்கு அளிப்பதற்காக வைத்திருக்கும் காப்பி முதலியவை வீணாகி விடும் என்று கூறினார்கள். பஸ்ஸிலிருந்த நாங்கள் எங்களுடைய களைப்பைத் தெரிவித்தபோது, கூட்டத்திலிருந்த வட்டார அபிவிருத்தி அதிகாரி ஒருவர் எங்களை நேராக, "இப்போது நீங்கள் வராவிட்டால் அப்புறம் இந்தக் கிராமத்தில் நான் தலைகாட்டவே முடியாது. உங்களை வரவேற்பதற்காகக் கிராமவாசிகளை மிகப் பாடுபட்டுக் கூட்டம் சேர்த்துக் காலை முதல் உட்கார வைத்திருக்கிறேன். இன்று அவர்கள் ஏமாற்றம் அடைந்தால் நாளை முதல் எந்த வரவேற்புக்கும் கூட்டம் கூட முன் வர மாட்டார்கள். என் வார்த்தையையும் நம்ப மாட்டார்கள்! ஆகவே எனக்காக நீங்கள் வந்துதான் ஆகவேண்டும்" என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு நாங்கள் இணங்க வேண்டியதாயிற்று.

சில கிராமங்களில் எங்களை வரவேற்பதில் சிலர் ஈடுபட்டிருக்கும்போது, கிராம மக்களில் வேறு சிலர் சற்று எட்டி நின்று, நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அப்படி ஒதுங்கி நின்றுகொண்டிருந்த கிராம மக்களை நெருங்கிக் கேட்டபோது, இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் உள்ள குறைகளையும் பாரபட்சமான நட


பினிக்ஸாரால் தயாரிக்கப்பட்ட
துணிகளை அணிந்தோர்களாரும்
உயர்ந்த மனப்பான்மையுடையவர்
களாகவும் ஆடம்பரக்காரர்க
ளாகவும் காணப்படுகிறீர்கள்
ரூயா துணிகள்
fabrics
ரூயாவினால் தயாரிக்கப்பட்ட துணிகள், உங்களைப் பரவசப்படுத்தும் டிசைன்களிலும், அநேக விதமான வர்ணங்களிலும், உங்களுக்குக்கிடைக்கின்றன. தூய்மையான எழிலுக்கு பினிக்ஸ் மில்லாரின் வாயில்களும், ப்ரின்டுகளும் மற்றும் விரேனுவும், ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.
பினிக்ஸ் மில்ஸ் லிமிடெட்
லோயர் பரேல், பம்பாய்-13
RP1-3


சிவாஜி கணேசன்
அளிக்கும்
பத்மினி பிக்சர்ஸாரின்
வீரபாண்டிய
கட்டபொம்மன்
சரித்திரப் புகழ்பெற்ற
மகோன்னத காவியம்
முழு நீள
கேவா கலரில்.
B.R.பந்துலு
சக்தி கிருஷ்ணசாமி
W.R.சுப்பாராவ்
G.ராமனாதன்
பரணி
ஏப்ரல் வெளியீடு


வடிக்கைகளையும் அவர்களில் சிலர் கூறத் தயங்கவில்லை. ஓர் இடத்தில் நாங்கள் வரவேற்புகளைப் பெற்றுக் கொண்டு பஸ் ஏறும்போது, ''எல்லாம் பித்தலாட்டம்! ஒரே சூதுவாது. ஏமாறாதீங்க!'' என்று கிராமவாசிகளில் ஒருவர் உரக்கக் கூறி விட்டுச் சென்றார்.

இந்தப் பெரிய சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதில் குற்றங் குறைகள் இருக்கத்தான் செய்யும். கோடிக்கணக்காகப் பணம் செலவிடும்போது, குறைகள் இடம் பெறாமல் இராது! ஆகவே குறை கூறல்களைப் பாராட்டக் கூடாது; குறைகளை நீக்கி நிறைவுகளையே தான் காண வேண்டும்.

ஆனால், பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் செயல்கள் காணப்பட்டால் அதைப் பற்றி எவ்வாறு பேசாமல் இருக்க முடியும்?

முக்கியமாக, இந்தப் பெரிய திட்டத்தில் கடன் வழங்குவது, கட்டடங்கள் கட்டுவது, மேல்நாட்டு முறையில் சமூக சேவை செய்வது என்பவை போன்ற காரியங்களே குறிக்கோளாக விளங்குகின்றன.

எந்த அபிவிருத்தி வட்டாரத்துக்குள் சென்றாலும், கடன் அளிப்பு பற்றியும் கட்டடங்கள் கட்டுவது பற்றியும் சமுதாயத்தை நாகரிகமாக்கும் செயல்களைப் பற்றியுமே அதிகமாகப் பேசப்படுகின்றன; புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன.



ஸ்ரீவைகுண்டம்: அநுமார், சுக்ரீவ சகிதம் ராமர்

கடன் வழங்குவதைப் பற்றி ஆராய்வோமானால், எல்லாம் ஒரே கடன் மயமாகக் காட்சியளிப்பதைக் காணலாம். விதைகள் வாங்கக் கடன, உரம் வாங்கக் கடன், ஏர் வாங்கக் கடன், எருது வாங்கக் கடன், கிணறு வெட்டக் கடன், பம்பு செட் வாங்கக் கடன், கிணறுகளைப் பழுது பார்க்கக் கடன், உழு கருவிகள் வாங்கக் கடன், வீடு கட்டிக் கொள்ளக் கடன், வண்டி வாகனத்துக்குக் கடன் என்று கடன்கள் வழங்கப்படுகின்றன.

கடன்கள் பெறுவதிலும், அளிப்பதிலும் கூட்டுறவு சங்க முக்கியஸ்தர்கள், கிராம ஆலோசனைக் கமிட்டிகள், வட்டார ஆலோசனைக் குழு முதலியவைகளின் செல்வாக்குகள் ஊடுருவி நிற்பதாக அங்கங்கே புகார்கள் கூறப்படுகின்றன. கடனுக்கு அடுத்த இடமாகக் காட்சி தருவது கட்டடங்களுக்கு ஆகும் செலவு. ஒரு பள்ளிக்கூடத்துக்குக் கட்டடம் கட்ட வேண்டுமானால், அதற்கு 'எஸ்டிமேட்' தயாரிக்கப்படுகிறது. ரூ. 5000 செலவு ஆகும் என்று தீர்மானித்தால், நாலில் ஒரு பங்குத் தொகையை ஊரார் அளிக்க வேண்டும். பணம் கொடுக்க இயலாத பட்சத்தில் ஊரார் தங்கள் உழைப்பை அளித்தும் உதவி செய்யலாம். அல்லது கட்டட வேலைக்கு வேண்டிய வண்டி மாடுகள், அநேக இடங்களில் உழைப்பு அல்லது பணம் கிடைத்து வருவதாகவே கூறப்பட்டது. ஊர் மக்கள் ரூ. 1250 கொடுத்த இடங்களில் ராஜ்ய சர்க்கார் ரூ. 1250ம் மீதி ரூ. 2500ஐ மத்திய சர்க்கார் மானியமாகவும் கிடைத்துப் பள்ளிக்கூடக் கட்டடம் கட்டப்படுகிறது. கட்டடங்களைக் கண்டிராக்டுக்கு விட்டே கட்டுகிறார்கள்.

சில இடங்களில் ஊரார் அனைவருமே பணம் கொடுப்பதில்லை. ஊரில் ஒருவர் இருவரே அளிக்கிறார்கள். ஒருவர் கொடுத்தாலும் அது ஊரார் பணம்தான். பலர் அளித்தாலும் அது ஊரார் பணம்தான்! இம்மாதிரி இடங்களில் பொதுக் காரியத்தில் தாங்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கும் ஊர் ஜனங்களின் ஆர்வம் வீணாகிறது. ஏமாற்றமடைந்த கிராமவாசிகள் என்ன நினைக்கிறார்கள்? இந்தச் சமுதாய நலத் திட்டங்களெல்லாம் கிராமத்தில், ஏதோ குறிப்பிட்ட சிலருக்காகவே நடப்பதாகக் கருதி முக்கியமான சமயங்களில் ஒதுங்கி நின்று விடுகிறார்கள்.

கட்டடங்கள் என்னும்போது, சில கிராமங்களில் கட்டப்பட்டிருக்கும் திறந்த வெளி நாடக மேடைகளையும், ரேடியோ மேடைகளையும்தான் கூறுகிறேன்.

திறந்தவெளி அரங்குகளெல்லாம் 'ஊரார் ஒத்துழைப்பின்' அளவுக்குத் தக்கவாறு பெரிதாகவும் சிறிதாகவும் கட்டப்பட்டுள்ளன.

ஒரு கிராமத்தில் இடுப்பளவு உயரத்துக்கு சிமிண்டினால் ஒரு பெரிய மேடை கட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்து விட்டு என் அருகிலிருந்த கிராம முதியவர் ஒருவரை நோக்கி, "இது என்ன மேடை? ஏதாவது பெரியவர் சமாதியோ?" என்று கேட்டேன். "அல்ல, அல்ல! ரேடியோப் பெட்டி வைத்துக் கேட்கும் மேடை இது" என்றார் அவர். அந்த மேடைக்கு ரூபாய் ஐந்நூறு வரை வீண் செலவு செய்திருக்கிறார்கள் என்றும் கூறினார்.

கிராம மக்களுக்கு வேலை அளிக்கக் கைத்தொழில் கற்றுக்கொடுக்க ஏராளமாகச் சர்க்காக்கள் உற்பத்தி செய்து விநியோகிக்கிறார்கள். பஞ்சு கடன் கொடுத்து நூற்கச் சொல்கிறார்கள்.

ஆனால் நூற்கப்படும் நூல் முழுமையையும் விலை கொடுத்து வட்டார அதிகாரிகள் வாங்கிக் கொள்வதில்லை. நூல் சிட்டங்களை யெல்லாம், திருப்பூருக்கு அனுப்புகிறார்கள். திருப்பூரில் எந்த அளவு நெசவு சாத்தியமோ அந்த அளவுக்குக் கிராமங்களில் நூல் விலைக்கு வாங்குவது நடைபெறுகிறது.

ஒரு முக்கியமான காதி வளர்ச்சி ஸ்தாபனத்தில் நான் விசாரித்த போது, "நாங்கள் நூலை வாங்கிக்கொண்டு கிராம மக்களுக்கு முழுப் பணமும் கொடுப்பதில்லை, பாதிப் பணமாகவும் மீதித் தொகைக்குக் கதராடைகளாகவும் கொடுத்து விடுகிறோம். இதன் மூலம் நூற்பவர்கள், உடை விஷயத்தில் தங்களுடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது!" என்று கூறினார்கள். ஆனால் நான் கேள்விப்பட்டது வேறு.

வறுமை தாளாத கிராம மக்கள் தாங்கள் வாங்கிச் செல்லும் கதர் வேட்டி, சேலைகளைக் குறைந்த விலைக்கு விற்று விடுவதாகக் கூறப்பட்டது. இதைப் பற்றியும் காதி அன்பர்கள் சிந்திக்க வேண்டும்.

எங்களுடைய பிரயாணம் நெடுகிலும் கருத்தைக் கவர்ந்த மற்றொரு முக்கியமான விஷயம் ஜப்பானிய விவசாய முறை.

நெல்லை ஜில்லாவில் இந்த விவசாய முறைக்கு நல்ல ஆதரவு இருக்கிறது. கன்யாகுமரி ஜில்லாவிலும் இந்த விவசாயத் திட்டத்துக்கு ஆர்வம் இல்லாமற் போய் விடவில்லை. மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் மட்டும் அவ்வளவு உற்சாகமாக இந்தத் திட்டத்தை வரவேற்பதாகத் தோன்றவில்லை.

ஜப்பானிய விவசாய முறையின்படி, நிலத்தை அதிக ஆழமாக உழ வேண்டும், அதிகமாக உரம் இடவேண்டும். அதிகமாகவே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். சூரிய ஒளி நன்றாக வீசும்படி அதிக இடைவெளி விட்டு நாற்று நடவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, உயர்தரமான விதைகளை உபயோகிக்க வேண்டும். உழுதல், உரமிடல், நீர்பாய்ச்சுதல், சூரிய ஒளி அளித்தல், நல் விதைகளை உபயோகித்தல் ஆகிய ஐந்தொழில்களில் ஏதாவது ஒன்று பழுதடைந்தாலும் இந்தச் சாகுபடியே பழுதடையக் கூடும்.

ஆகவே, நீர்ப்பாசன வசதி பற்றாக் குறையாயுள்ள ஜில்லாக்களில் இந்த ஜப்பானிய முறையை ஏற்க விவசாயிகள் தயங்குவது இயற்கையே. குமரி ஜில்லாவில் சென்ற ஒன்பது வருடங்களாக மழை பெய்யவில்லை. சென்ற ஆண்டு மழை பெய்ததும் ஜப்பானிய விவசாய முறையை விவசாயிகள் உபயோகிக்க முன் வந்தார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த வருஷம் இதுவரை ஒரு சொட்டுக் கூட மழை பெய்யவில்லை.

எங்களுடைய பிரயாண நிகழ்ச்சி நிரலில் சில அணைத் திட்டங்களைக் காணவும், பிரசித்தி பெற்ற யாத்திரை ஸ்தலங்கள் சிலவற்றைக் காணவும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பெரியாறு அணைத் திட்டத்தின் சரித்திரத்தையும் பெரியாறு ஏரியின் வனப்பையும் விட, சென்னை ராஜ்ய மின்சார இலாகா அங்கு நிகழ்த்திவரும் அரிய சாதனைகள் பிரமிப்பூட்டுவதா யிருந்தன. இந்தியாவின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஒரு பெரிய மின் உற்பத்தி நிலையத்தை மிகக் குறுகிய காலத்தில் அமைத்திருக்கின்றனர்.

பெரியாறு திட்டத்தின் உபரித் தண்ணீரைத் தேக்கி வைப்பதே வைகை அணைத் திட்டத்தின் நோக்கம். இங்கு அணைத் திட்டம் பூர்த்தியாகித் திறப்பு விழாவும் நடக்கக் காத்திருக்கிறது. அடுத்தபடியாக நாங்கள் பாபநாசம் அணைத் திட்டத்தைக் காணச் சென்றோம். அவகாசமின்மையால், பொதிகைமலைப் பகுதியோடு நின்று, அங்கு கட்டப்பட்டிருக்கும் வ. வே. சு. அய்யர் ஞாபகார்த்த மண்டபத்தைப் பார்த்து விட்டு, அங்கு எங்களுடைய அஞ்சலியைத் தெரிவித்து விட்டுத் திரும்பினோம். நாங்கள் பார்த்த அடுத்த அணை, மணிமுத்தாறு அணை.

இந்த அணைத் திட்டம் அமைக்கும் போது கட்டிய ஏராளமான வீடுகள்—இப்போது பூட்டிக் கிடக்கின்றன. இதே சமயத்தில் புதிதாகச் சில வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

இந்த அணையைப் பார்க்க வருபவர்களுக்கு அங்குள்ள வீடுகளைப் பயன்படும்படி செய்தால் அது ஒரு நல்ல உல்லாசப் பிரயாண ஸ்தலமாக விளங்கும்.

ஆலயங்கள் வரிசையில் நாங்கள் பல கோவில்களுக்குச் சென்று ஆண்டவனை வழிபாடுகள் செய்துகொண்டு வந்தோம். தேச வளத்துக்கு உதவுமாறு அங்கங்கே நான் பிரார்த்தித்துக் கொள்ளவும் தவறவில்லை. மதுரைக்குச் சென்றபோது ஆலாலசுந்தரரை நான் பிரார்த்தித்துக் கொண்டேன்.

ஆதி முதல் சமுதாய நலத் தொண்டராக விளங்கி, பிட்டுக்கு மண் சுமந்து சென்ற ஆலால சுந்தரரை நினைத்து, நாட்டில் இந்தச் சமுதாய நலத் திட்டங்கள் நேர்மையாகவும், நாணயமாகவும் நிறைவேற அருள் புரிய வேண்டும் என்று வேண்டிக் கொண்டேன்.

சோக்ரதர் சம்வாதங்கள்

க. சந்தானம்

4. ராஜ்யம் எதற்காக?

[பங்கெடுத்துக் கொள்ளுவோர்—சோக்ரதர், க்ளாக்கோன், ஆதிமந்தோஸ் முதலானோர்]

சோ: ஒரு ராஜ்யம் சிருஷ்டி செய்யப்படும் விதத்தைக் கவனித்தால், நீதியும் அநீதியும் தோன்றுவது தெளிவாகலாம்.

ஆதி: நானும் அப்படியே நினைக்கிறேன்!

சோக்: ஆனால் அது மிகவும் தொல்லையானது. நன்றாக ஆலோசித்துக் கூறுவாய்.

ஆதி: நன்கு யோசித்துவிட்டேன். சம்வாதத்தை மேலே தொடர்ந்து நடத்த வேண்டும்.

சோக்: மனித சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே ராஜ்யம் பிறக்கிறது என்று எண்ணுகிறேன். எந்த மனிதனும் தனக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் தானே செய்து கொள்ள முடியாதல்லவா? வேறு மூலகாரணம் சாத்தியமா என்று யோசித்துப் பார்.

ஆதி: வேறொன்றுமிருக்க முடியாது.

சோக்: நமது தேவைகள் பல. அவைகளைப் பூர்த்தி செய்யப் பலர் வேண்டும். ஒரு பணிக்கு ஒருவனும், மற்றோர் பணிக்கு வேறொருவனுமாகப் பலர் கூடி ஓரிடத்தில் வசிக்கத் தொடங்குகிறார்கள். இந்தக் கூட்டாளிகளின் சமூகமே ராஜ்யமாகிறது.

ஆதி: உண்மை.

சோக்: தமக்குள் சேவைகளைப் பரிமாறிக் கொள்ளுகின்றனர். அதனால் எல்லோரும் லாபமடைவதாக நம்புகிறார்கள்.

ஆதி: முற்றிலும் நியாயமே.

சோக்: ஒரு ராஜ்யத்தைக் கற்பனையால் சிருஷ்டி செய்யத் தொடங்குவோம். உண்மையில் அதற்குச் சிருஷ்டிகர்த்தா அவசியமே. எல்லாப் புதிய முயற்சிகளுக்கும் அவனே தாய்.

ஆதி: அதற்கென்ன சந்தேகம்?

சோக்: எல்லாவற்றிலும் முக்கியமான தேவை உணவு. அதில்லாமல் ஜீவித்திருக்க முடியாது.

ஆதி: ஆமாம்!

சோ: இரண்டாவது வீடு, மூன்றாவது உடை முதலியன. நமது ராஜ்யம் இவைகளைச் சமாளிக்குமா என்று ஆராய்வோம். ஒருவன் உழவனாயிருப்பான். வேறொருவன் வீடு கட்டும் கொத்தனாகவும், மற்றொருவன் நெசவுக்காரனாகவும், நான்காவது மனிதன் செருப்புத் தைக்கும் சக்கிலியாகவும் இருப்பான்.

ஆதி: சரி.

சோ: இவ்விதம் நாலைந்து குடும்பமாவது இல்லாமல் ராஜ்யமிராது.

ஆதி: நிச்சயம்.

சோ: இவர்கள் என்ன செய்வார்கள்? ஒவ்வொருவரும் எல்லா வேலைகளையும் தனக்கு வேண்டிய அளவு செய்து கொள்ளலாம். அதற்குமாறாக, குடியானவன் நான்கு பேருக்கு உணவும், தச்சன் நால்வருக்கு வீடும், மற்றவர்களும் அப்படியே பொதுவாகவும் பணி புரியலாம்.

ஆதி: குடியானவன் உணவு உற்பத்தியிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். * மற்றவர்களும் தம் தம் பணிகளிலேயே ஈடுபட வேண்டும்.

சோ: நீ கூறுவது மேலான வழி. எல்லா மனிதரும் ஒரே விதமானவரல்லர். வெவ்வேறு சுபாவமுள்ளவர்கள்.

ஆதி: ஆமாம்.

சோ: எல்லாச் சமூகவேலைகளும் சரிவர நடைபெற வேண்டுமானால், மேற்கூறிய நால்வர் போதாது. குடியானவனுக்குக் கலப்பையும், மண்வெட்டியும் மற்ற சாதனங்களும் வேண்டும். தச்சன் கொத்து வேலை செய்யமுடியாது. செங்கல் சுடமாட்டான். நெசவுக்காரனுக்கும், சக்கிலிக்கும் பல சாதனங்கள் வேண்டும்.

ஆதி: உண்மை.

சோ: இந்தத் தொழிலாளிகளோடு ஆடு மாடு மேய்ப்பவர், தோல் பதனிடுவோர், மூட்டை தூக்கிச் செல்லுவோர் முதலிய பணியாளர்களைச் சேர்த்துக் கொண்டால் கூட்டம் அதிகரிக்கும்.

ஆதி: ஆமாம். சிறிய சமூகத்தில் எல்லா வேலைகளும் நடைபெறுவது அசாத்தியம்.

சோ: வேறிடங்களிலிருந்து சாமான்கள் கொண்டு வருவதற்கு வியாபாரிகள் வேண்டுமல்லவா?

ஆதி: அவசியம் வேண்டும்.

சோ: அந்த வியாபாரிகள் சாமான்களைக் கொடுத்துவிட்டு வெறும் கையோடு திரும்புவார்களா?

ஆதி: மாட்டார்கள்.

சோ: அந்தச் சாமான்களுக்கு ஈடாக இதர சாமான்களை உற்பத்தி செய்வோர் இங்கு இருக்க வேண்டும்.

---

* "உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை"

என்ற குறள் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

ஆதி : அவசியம்.

சோ : வியாபாரிகளையும் சாமான்களையும் சுமந்து செல்லக் கப்பல்களும், மாலுமிகளும் தேவையாருமல்லவா ?

ஆதி : ஏராளமாக வேண்டும்.

சோ : இம்மாதிரி வியாபாரத்துக்கு, ஓர் கடை வீதியும், பணமும் அவசியம். சாதாரணமாக இதர வேலைகளுக்குச் சக்தியில்லாதவர்களே கடைக்காரர்களாகி விடுகிறார்கள்.

ஆதி : அப்படியே.

சோ : அவர்களைத் தவிர உடல் வலிமையுள்ள கூலியாட்களும் தேவையல்லவா ? கனமான சாமான்களைத் தூக்க வேண்டுமல்லவா ?

ஆதி : வேண்டும்.

சோ : நமது ராஜ்யம் இப்பொழுது பூர்த்தியாகி விட்டதா ?

ஆதி : அப்படித்தான் தோன்றுகிறது.

சோ : நீதியும் அநீதியும் எங்கே? எனக்குப் புலப்படவில்லையே?

ஆதி : இந்த மக்கள் பரஸ்பரம் நடந்து கொள்ளும் முறையில் அவை பதிந்து கிடக்கலாம். வேறு வழி தோன்றவில்லை.

சோ : உனது யோசனையில் உண்மையிருக்கலாம் என்று எண்ணுகிறேன். ஆனால், நன்கு ஆராய்வோம். நமது ராஜ்யத்துப் பிரஜைகளின் வாழ்க்கையைக் கவனிப்போம். தங்களுக்கு வேண்டிய தானியங்களை உற்பத்தி செய்து சிறிய குடிசைகளைக் கட்டிக் கொள்ளுவார்கள். வெய்யில் காலத்தில் கச்சத்தோடு செருப்பில்லாமல் வேலை செய்வார்கள். குளிர் காலத்தில் கனமான உடைகள் அணிய வேண்டும். தானியத்தாற் செய்த உணவு அருந்தி, பாய்களின் மீது படுத்துறங்குவார்கள். ஓழிந்த வேளைகளில் மாலைகள் கட்டித் தலையில் அணிந்து குடும்பத்துடன் விருந்துண்டு களிப்பார்கள். வறுமையையும், போரையும் உத்தேசித்துத் தமது குடும்பங்கள் அளவுக்கு மீறி அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுவார்கள்.

ஆதி : அவர்கள் சாப்பாடு சப்பென்றல்லவா இருக்கும்?

சோ : மறந்து விட்டேன். உப்பும் எண்ணெயும், வெண்ணெயும் கொண்டு கிழங்குகளைச் சமைப்பார்கள். பழங்களையும், பட்டாணியையும் கொண்டு உணவுக்கு ருசி உண்டு பண்ணுவார்கள். இம்மாதிரி நீண்ட காலம் ஆரோக்கியத்துடன் வசித்து, இவ்வாழ்வைத் தமது சந்ததியாருக்கு வைத்துப் போவார்கள்.

கள : சோக்ரதரே, இது வெறும் மிருக வாழ்வல்லவா ?

சோ : களக்கோன்! உனக்கு வேறு என்ன வேண்டும் ?

கள : சாதாரணமான நாகரிக வாழ்வின் சாதனங்களைக் கொடுக்கவேண்டும். கட்டில், மெத்தை, சாப்பிடுவதற்கு மேஜை, ருசியான சமையல், தின்பண்டங்கள் எல்லாம் வேண்டாமா ?

சோ : ஓகோ! உனக்கு வெறும் ராஜ்யம் போதாது. செல்வம் மிகுந்த ராஜ்யத்தை விரும்புகிறாய் போலும். அதையும் ஆராய்வோம். ஒருகால் அப்பொழுதுதான்

நீதியும், அநீதியும் பிறக்கலாம். எனது எண்ணத்தில் நேர்மையான ராஜ்யத்தை வர்ணித்தேன். ஆனால் எளிய வாழ்க்கை பலருக்குப் பிடிக்காது என்பது உண்மையே. நீ கூறிய கட்டில், மெத்தை, தின்பண்டங்கள் மட்டுமல்ல; வாசனைத் திரவியங்கள், அலங்காரப் பொருள்கள், வேசியர் முதலிய பலவித உல்லாச சாதனங்களும் தேவைப்படும். ஓவியம் வரைவோரும், ஆடைகளில் சித்திரவேலை செய்வோரும், தங்கநகைகளும், தந்தச்சாமான்களும் செய்வோரும், அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் சேகரிப்போரும் சேர்ந்து பெரும் கூட்டமாகிவிடும். அப்பொழுது நமது நாடு போதாது. கணக்கற்ற தொழில்களும், கலைகளும், கலைஞரும், அவர்களுக்குத் தொண்டு செய்யும் வேலைக்காரர்களும் பெருகிக் கொண்டே போவார்கள். இவற்றையெல்லாம் போதிக்கும் ஆசிரியர்கள், குழந்தைகளுக்குச் செவிலித் தாய்கள், சமையற்காரர்கள், மாமிசத்துக்காக மாடு, பன்றி முதலிய மிருகங்களை வளர்ப்பவர்கள், இந்த உணவுகளை அருந்துவதால் உண்டாகும் நோய்களைத் தீர்க்க வைத்தியர்கள், இவர்களுக்கெல்லாம் பழைய பிரதேசத்தில் இடமேது? பக்கத்திலிருப்பவரது பூமியை நாம் விரும்புவோம். நமது பூமியை அவர்கள் விரும்புவார்கள். இருவரும் செல்வம் சேர்ப்பதில் போட்டி போடுவோம்.

கள : போட்டியை எப்படித் தடுக்க முடியும்?

சோ : அப்பொழுது யுத்தம் செய்ய வேண்டி வரும், களக்கோன்.

கள : நிச்சயம் செய்துதானாகவேண்டும்.

சோ : யுத்தம் நன்மையா தீமையா என்பதை இப்பொழுது முடிவு செய்ய வேண்டாம். ஆனால் ராஜ்யங்களின் இதர தீமைகளிலிருந்து போர் பிறப்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமல்லவா?

கள : சந்தேக மில்லாமல் ஒப்புக் கொள்ள வேண்டும்.

சோ : நமது ராஜ்யம் மேலும் பெருக வேண்டும். இப்பொழுது ஒரு முழுச் சைனியத்தைச் சமாளிக்கும்படி அதைப் பெரிதாக்குவது அவசியமாகும்.

கள : ஏன்? பிரஜைகள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள முடியாதா?

சோ : முடியாது: யுத்தம் ஓர் தனிக் கலையல்லவா?

கள : ஆமாம்.

சோ : குடியானவன் தனது விவசாயத்திலும், நெசவுக்காரன் நெசவிலும், சக்கிலி செருப்புத் தைப்பதிலும் தனது முழு நேரத்தையும் கழிக்க வேண்டும் என்று எதற்காக விதித்தோம்? ஒவ்வொருவனும் தனது தொழிலில் தேர்ச்சியடைவதற்கல்லவா? போர் எளிதான கலையா? அதில் தேர்ச்சியில்லாதவன் கத்தியையும், கேடயத்தையும் வைத்துக் கொண்டு என்ன செய்வான்?

கள: ஆம். தேர்ச்சியின்றிக் கருவிகளால் பயனில்லை.

சோ : பாதுகாப்பாளர்களின் கடமை அதிகரிக்கும்போது, அவர்களின் தேர்ச்சியும், சாமர்த்தியமும் அதிகரிக்க வேண்டும் அல்லவா?

கள : சந்தேகமில்லாமல்.

சோ : அந்தத் தொழிலுக்கு அவனுடைய இயற்கைக் குணங்கள் ஏற்றனவா என்று பார்க்க வேண்டாமா?

கள : அது நமது கடமையாகும்.

சோ : நகரைக் காப்பதில் இந்தக் காவலர்களுக்குக் காவல் - நாய்களின் குணம் தேவையல்லவா?

கள : உமது வார்த்தையின் அர்த்தம் புரியவில்லையே!

சோ : அவர்களுக்குக் கூரிய பார்வையும், எதிரியைத் தாக்குவதில் துரிதமும், தீரமும் வேண்டுமல்லவா? அவனுடன் சண்டை செய்ய வலிமையும் வேண்டுமல்லவா?

கள : இந்தக் குணங்கள் மிகவும் அவசியம்.

சோ : மனத்தில் தைரியமும் தேவையன்றோ?

கள : நிச்சயமாக.

சோ : இந்தச் சுபாவமுள்ளவர்கள் தமக்குள் எளிதில் சண்டை போட்டுக் கொள்வார்களே? பிறரோடும் சச்சரவு செய்யத் தயங்க மாட்டார்களல்லவா?

கள : இந்தக் கஷ்டம் எளிதில் தீர்வதல்ல.

சோ : நமது காவலருக்கு இந்த முரண்பாடான குணங்கள் வேண்டும். ஒரு பக்கம் அளவற்ற தைரியம், மறுபுறம் மிகவும் சாந்த சுபாவம். இவ்விரண்டும் அசாத்தியமல்லவா?

கள : அப்படித்தான் தோன்றுகிறது.

சோ : ஆனால், நாம் பழைய உதாரணத்தை மறந்து விட்டோம். காவல் * நாய் அன்னியரைக் கண்டு பிடித்தாலும், பழகினவர்களிடம் சாதுவாக இருக்கிறதல்லவா?

கள : இதை நான் யோசிக்கவில்லை.

சோ : அம்மாதிரியான நாய்க்கு ஒரு தனி அறிவு இருக்கிறதல்லவா?

கள : ஆமாம்.

சோ : நமது காவலர்களுக்கும் அவ்வித அறிவு இருக்குமானால், முரண்பாடான குணங்களை அவரிடமும் காண முடியுமன்றோ?

கள : அவசியம் காண முடியும்.

சோ : இயற்கையால் காவலர்களாக இருக்கக் கூடியவர்களைக் கண்டு பிடித்த பின், அவர்களைச் சரியாகக் கல்வி கற்பித்து வளர்க்க வேண்டும். நீதி அநீதியைப் பற்றிய நமது முக்கிய ஆராய்ச்சிக்கு இந்தப் பயிற்சி முறை வழி காட்டலாம்.

கள: இந்த ஆராய்ச்சி நல்ல பலன் அளிக்கும்.

---

* "மன்னர்க்கு நாய்போல் வனப்புடையர் வாய்வயவர்" என்ற பழம் பாட்டிலும் காவல் செய்யும் வீரர்களை நாயோடு உவமை கூறித் தமிழ்ப் புலவர் பாடியிருப்பதைக் காண்க.

மணத்தழும்பு

ரா. சு. நல்லபெருமாள்

வெற்றிலைத் தட்டை மேஜையின்மீது வைத்து விட்டு அங்கேயே நின்றாள் செல்லம். சுந்தரம் திரும்பிக் கூடப் பார்க்காமல் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"எதிர் வீட்டிலே, அவர்கள் வீட்டுப் பெண் வந்திருக்கிறாளாம்" என்றாள் செல்லம்.

சுந்தரம், காதில் வாங்காததுபோல் பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"உங்களைத்தானே, எதிர்வீட்டிலே அவர்களின் பெண் வந்திருக்கிறாள் தெரியுமா?" என்றாள் செல்லம் மீண்டும்.

அவள் குரலில் தொனித்த கேலியைப் புரிந்து கொண்டான். "யார் அவள்?" என்றான் சுந்தரம்.

"உங்கள் ராஜிதான்!"

சுந்தரம் திடுக்கிட்டான்.

"என் ராஜியா ...? என்ன உளறுகிறாய்?"

"நான் ஒன்றும் உளறவில்லை. எதிர் வீட்டு மாமி சொன்னதைத்தான் உங்களிடம் சொல்லுகிறேன்!"

"என்ன சொன்னாள்?"

"ராஜியினுடைய அம்மா சொன்னாள்: சின்ன வயசிலே நீங்கள் இரண்டு பேரும் மணப் பந்தலில் மாலை மாற்றினதை யெல்லாம் சொன்னாள்."

"சரி, அதற்கென்ன இப்போது" என்றான் சுந்தரம் அசிரத்தையுடன்.

"உங்கள் ராஜியாச்சே என்று சொன்னேன்" என்றாள் கேலியாக. அவளை முறைத்துப் பார்த்தான் சுந்தரம்.

"என்ன முறைக்கிறீர்கள்? உள்ளதைத்தானே சொன்னேன். நியாயமாக நீங்கள் அவளைத்தானே மணந்திருக்க வேண்டும்?"

"அதனால் என்ன?"

"ஒன்றுமில்லை. அந்த உங்கள் ராஜி, எதிர் வீட்டுக்கு வந்திருக்கிறாளாம்" என்று கூறி விட்டு அவனைக் கூர்ந்து பார்த்தாள் செல்லம்.

இந்தப் பெண்களுக்குத் தான் எவ்வளவு பொறாமை. அறியாப் பருவத்தில் பழகியிருந்தால்கூட இந்தப் பெண்களுக்குச் சந்தேகம் வந்து விடுகிறதே!

"அதனால் உனக்கு என்ன வந்தது, பொறாமையாக இருக்கிறதா?" என்றான் சுந்தரம்.

"எனக்கென்ன பொறாமை? உங்களைப் பார்க்கத்தான் பரிதாபமாக இருக்கிறது. அவளைக் கலியாணம் செய்யக் கொடுத்து வைக்கவில்லை, பாவம்!" என்றாள், கண்களைச் சிமிட்டிக் கொண்டு.

"நானே அதற்காக வருந்தவில்லையே!" என்றான் சுந்தரம்.

"ஆகா! உங்கள் நாக்குத்தானே அப்படிச் சொல்லுகிறது? உண்மையைச் சொல்லுங்கள், அவளை மணக்கவில்லையே என்று நீங்கள் வருத்தப்படவே இல்லையா?"

"இதென்ன கேள்வி? பேசாமல் போ!" என்றான். அவள் போய் விட்டாள்.

காயம்பட்டு ஆறின தழும்பு என்றும் ஞாபகத்தில் இருப்பதில்லை. கைபட்டுத் தடவும் போதுதான் ஞாபகம் வரும். அதே போல் தான் பழைய சம்பவங்களும். சுந்தரமும் தன் இதயத்தில் ஏற்பட்டு விட்ட தழும்பை மறந்து விட்டான். செல்லம் தூண்டவே, பழைய ஞாபகம் வந்து விட்டது. 'ஐயோ! இந்தத் தழும்பு நினைவில் வரும்போது, வலிக்கவும் செய்கிறதே! இந்த வலி என்று மறையும்? மறந்திருக்கும் வரையில் ஒன்றும் தெரியவில்லை. இந்த வேதனை மாறுமா?' பழைய நினைவில் வேதனை இருந்தாலும், நடந்த சம்பவங்கள் நினைவில் வந்து வட்ட மிட்டபோது இனித்தன.

மேஜையைத் திறந்து, டைரிக்குள் வைத்திருந்த ஒரு படத்தை எடுத்துக் கூர்ந்து பார்த்தான். அந்தப் படத்தில் ஒரு சிறுவனும் சிறுமியும் மணவறையில், கழுத்தில் மாலையுடன் சிரித்தவண்ணம் காட்சியளித்தார்கள்.

படத்தைப் பார்த்து விட்டுச் சுந்தரம் சிரித்தான். அந்தச் சம்பவம் நடந்து பதினாறு வருடங்களுக்கு மேலாகி விட்டன. பலருக்கு மறந்துகூடப் போயிருக்கும்.

• •

அப்போது சுந்தரத்துக்கு வயது எட்டு இருக்கும். ராஜி, எதிர் வீட்டுப் பெண், சுந்தரத்துக்குத் தூர உறவினளுங்கூட. அவளுக்கு ஐந்து வயதிருக்கும். சுந்தரத்தின் தமக்கைக்குத் திருமணம் நடந்தது. தாலி கட்டி முடிந்ததும், மாப்பிள்ளையும், பெண்ணும் மணவறையிலிருந்து கீழே இறங்கினார்கள். அப்போது சுந்தரம், ராஜியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மணவறைப் பக்கம் வந்தான். காலில் கொலுசு ஒலிக்க, பட்டுப் பாவாடை சகிதம் காட்சியளித்த ராஜி, சுந்தரத்தின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். யாரும் எதிர்பாராத ஒரு காரியத்தை அப்போது செய்து விட்டான் சிறுவன் சுந்தரம்.

ராஜியை அழைத்துக் கொண்டு மணவறையில் ஏறினான். மணவறை அலங்காரத்துக்காகத் தொங்கிய பூமாலைகளில் இரண்டை எடுத்தான். ஒன்றை ராஜியின் கையில் கொடுத்தான்.

"ராஜி! என் கழுத்தில் போடு" என்றான் சுந்தரம். அந்தக் குழந்தையும் கூச்சமில்லாமல் மாலையை அவன் கழுத்தில் போட்டது. அவளை மணவறையில் உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்தான். ஓம குண்டத்தில் நெருப்பு இன்னும் அணையவில்லை. புரோகிதர் திகைத்து உட்கார்ந்திருந்தார். ஒரு கணம் கூட்டத்தில் அமைதி நிலவியது. எல்லோரும் திகைத்தனர். மணவறையை விட்டு இறங்கிய பெண்ணும், மாப்பிள்ளையும் வீட்டுக்குள்

போகாமல் அங்கேயே திகைத்துப் போய் நின்று விட்டனர்.

"ஓம்! மந்திரம் சொல்லும்" என்றான் சுந்தரம், புரோகிதரைப் பார்த்து. அவர் சிரித்தார். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. எல்லோரும் சிரித்தனர். சுந்தரத்தின் அப்பாவுக்குக் கோபம் ஒருபுறமும் சிரிப்பு ஒரு புறமும் வந்தன. குழந்தையை அடிப்பதா, அணைப்பதா என்று தெரியவில்லை.

"இப்பவே ஓத்திகை பாக்கிறான் பயல்!" என்றார் ஒரு கிழவர்.

"நல்ல ஜோடிதான்!" என்றார்கள் பலர்.

கல்யாணச் சம்பவங்களைப் படம் பிடிக்க வந்தவர், அந்தக் குழந்தைகளின் விளையாட்டுக் காட்சியையும் படம் பிடித்து விட்டார். நினைவு அழிந்து விட்டாலும், அந்தப் படம் அழியாதல்லவா!

குழந்தைகள் இப்படி விளையாடி விட்டன. அறிந்து செய்யாத ஒரு செய்கை. ஆனால், இதயத்தில் பதிந்து விட்ட கட்டம் அது.

அன்று நடந்தது விளையாட்டுத்தான். ஆனால், அதை உண்மையாக்க நினைத்தார்கள் சுந்தரமும், ராஜியும். அதை வெறும் விளையாட்டாக எண்ண அவர்களால் முடியவில்லை. ஆன்ம சக்தியின் பிணைப்பில் ஏற்பட்ட ஒரு தெய்வீகச் சடங்கு அன்று நடந்து விட்டதாக எண்ணினார்கள். ஆனால், மற்றவர்களுக்கு அது விளையாட்டாகவேதான் தோன்றியது. விளையாட்டுப் போலவே அதை மறந்தும் போய் விட்டார்கள்.

* * *

அந்தப் படத்தை மீண்டும் மேஜைக்குள் வைத்துப் பூட்டினான் சுந்தரம். மனத்தில் அமைதியில்லை.

சிறுபிள்ளைத்தனமாகச் செய்த ஒரு காரியம், எவ்வளவு ஆழமான காயத்தை உள்ளத்தில் ஏற்படுத்தி விட்டது? விளையாட்டுத்தானே என்று ஒதுக்கிவிட முடியவில்லையே? கொஞ்சம் மறந்திருந்தான். ஆனால், இப்போது அந்த ராஜியே எதிர்வீட்டுக்கு வந்திருக்கிறாள். எத்தனை வருடங்களுக்குப் பிறகு வந்திருக்கிறாள்!

பத்து வருடங்களுக்கு முன்னால் ராஜியின் தந்தைக்கு வேலை மாற்றலாகவே, எல்லோரும் டில்லிக்குப் போய் விட்டார்கள். அவளோடு ஓடி ஆடி விளையாடிய சுந்தரத்துக்குக் கொஞ்ச நாட்களுக்கு வருத்தமாய் இருந்தது. பிறகு, மறந்து விட்டான். மணவறையில் மாலையுடன் காட்சியளிக்கும் அவர்களுடைய படத்தைப் பார்க்கும்போதெல்லாம், சிரித்துக் கொள்வான். ஆனால், சுந்தரம் பெரியவனாக மாறியபோது அவனையுமறியாத ஒரு வேதனை இதயத்தைச் சூழ்ந்து கொண்டது. அந்தப் படத்தைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். அந்தச் சம்பவத்தின் தத்துவம் அவனுக்குப் புரியும்போது ராஜி, அவன் பக்கத்தில் இல்லை. குழந்தை ராஜியின் படம் மட்டும் இருந்தது.



அப்பாவிடம் மெதுவாக ராஜியைப் பற்றிக் கூடச் சொல்லிப் பார்த்தான். அப்பா, பணத்தைப் பார்த்தார்; அம்மா, அந்தஸ்தைப் பார்த்தாள். டில்லியில் குமாஸ்தா வேலையில் உழலும் ஒருவரின் மகளாக வாய்த்து விட்ட ராஜியையா அவர்கள் ஏற்பார்கள்?

சுந்தரம் மட்டும் அவளை நினைவில் வைத்து ஏங்கினான். பாவம்! தன்னையே உணர முடியாமல் தவித்தான். அவனுக்கே அவனுடைய நிலையைக் கண்டு சிரிப்பு வந்தது.

இப்போது, சுந்தரம் வாலிபன். என்றோ நடந்த சம்பவத்தை நெஞ்சில் புதைத்துத் திண்டாடுகிறோமே என்று நினைத்தபோது சிரித்தான். இருட்டறையில் கறுப்புப் பூனையைக் குருடன் தேடிய கதைதான். கட்டுக் கோப்பில்லாத நினைவுகள் உள்ளத்தில் நிறைந்து குழப்பின. இதெல்லாம் அர்த்தமற்ற நினைவுகள் என்ற முடிவுக்கு வந்தபோது, பெற்றோர்கள் நிச்சயித்த பெண்ணை மணக்கச் சம்மதித்தான். ஆனால், இதயத்தின் அடித்தளத்தில் ஏக்கத்தின் கறை படிந்திருந்தது. சாம்பலுக்குள் இருக்கும் நெருப்பு வெளியில் தெரிவதில்லை. கிண்டும்போது, சுட்டு விடும். சுந்தரமும் பழைய நினைவைக் கிண்டி விட்டுக் கொள்வான். நினைவு சுட்டாலும், அதில் இன்பம் இருந்தது. தூசி விழுந்த கண்களைக் கசக்கும் போது, ஒரு வித சுகம் இருக்கிறதே!

செல்வத்தை மணந்தபிறகு, சுந்தரத்தின் வாழ்க்கை இன்ப வெள்ளத்தில்

தான் மிதந்தது. சில சமயங்களில், பழைய சம்பவமும் நினைவில் வந்து போவதுண்டு. அந்தப் படத்தை வேண்டுமென்றே எடுத்து வைத்துப் பார்த்துக் கொண்டு பழைய நினைவுகளைக் கிண்டுவான். மறக்க வேண்டியதை மறக்க விடாமல் செய்து கொண்டிருந்தான். கற்பனை உலகத்தில்தான் எவ்வளவு ரசனை !

ராஜிக்கு அந்தச் சம்பவம் ஞாபகத்தில் இல்லை. ஆனால், வளர்ந்தபிறகு, பிறர் சொன்னதைக் கேட்டிருக்கிறாள். அந்தப் படத்தைப் பார்த்திருக்கிறாள். விவரம் தெரியாத வயதில் அது நடந்தது என்பதை உணர்ந்தாலும், அந்தச் சம்பவம் தன் வாழ்க்கையோடு பின்னி விட்டதாக நினைத்தான். ஆனால், தலையெழுத்து எங்கே தள்ளுகிறதோ, அந்தத் திசையில்தானே போக வேண்டியிருக்கிறது? அறியாப் பருவத்தில் கருத்தில் நுழைந்தவளின் உருவமே அவன் மனத்தில் பதியவில்லையே? வெறும் நினைவு மட்டும் இருந்தது. அதைக் கொண்டு சுந்தரம் எப்படியிருப்பான் என்று கற்பனை செய்யக்கூட முடியாதே. உருவமற்ற ஒரு ஜீவன் அவள் உள்ளத்தில் இடம் பெற்று விட்டது. வாய்விட்டுப் பெரியவர்களிடத்தில் இதைச் சொல்லத்தான் முடியுமா? அவளுடைய அப்பா, அவளுக்கு ஒரு வரனைப் பார்த்துக் கல்யாணத்தைச் செய்து வைத்தார். பிறகு, அலைந்த அவள் உள்ளம் அமைதி யடைந்து விட்டது.

வழிப் பயணத்தில் எத்தனையோ பேர்களைச் சந்திக்கிறோம். பிரிந்த பிறகு, மறந்து விடுகிறோம். ஆனால், சிலர் மட்டும் ஞாபகத்தில் வந்து போவதுண்டு. அதேமாதிரிதான் ராஜிக்குச் சுந்தரத்தின் நினைவு எப்போதாவது வந்து வட்டமிடுவதுண்டு. அந்த நினைவு வரும் போதெல்லாம், ராஜிக்குச் சிரிப்பு வந்துவிடும். ஆனால், எண்ணத்தில் சலனமில்லை.

ஆறு மாதங்களுக்கு முன், ராஜியின் தந்தை ஓய்வு பெற்றுச் சொந்த ஊருக்கு வந்தார். வந்தவர் பல விஷயங்களைச் சொன்னார். ஹைதராபாத்தில் ராஜிக்குக் கல்யாணம் ஆகியிருப்பதையும் கூறினார். சுந்தரத்துக்கு மாத்திரம் இந்தச் செய்தி நெஞ்சில் வலியைக் கொடுத்தது. தனக்குக் கிடைக்காத பொருள், உலகத்தில் வேறு எவனுக்குமே கிடைக்கக் கூடாது. இப்படி ஏனோ இந்தப் பைத்தியக்கார மனம் விரும்புகிறது. ''இந்தப் பழம் புளிக்கும்'' என்ற தத்துவம்கூட மனத்தில் பதியவில்லை. இதயத்திலிருக்கும் விஷம், எப்போது மறையும்? அது இருந்துகொண்டல்லவா புண்படுத்துகிறது? நினைவு எப்போது தெளிவடைந்து, மனத்தில் அமைதி நிலவும்?

''டேய், சுந்தரம்! உனக்கு ஞாபகம் இருக்கிறதா, நீயும் ராஜியும் மணவறையில் உட்கார்ந்து மாலை மாற்றி விளையாடினீர்களே?'' என்றார் ராஜியின் தந்தை. சுந்தரம் சிரித்தான். சிரிப்பில் உயிர் இல்லை. வாழ்க்கையே வெறும் விளையாட்டு என்று நினைத்து விடும் பக்குவம் வந்து விட்டால், கவலையே இல்லை. ஆனால் பாழும் மனம், எத்தனை ஆசைகளை, உணர்ச்சிகளை உள்ளே ஊறவிட்டுத் தவிக்கிறது?

''உங்கள் ராஜி வந்திருக்கிறாளாம், தெரியுமா?'' என்று அவன் மனைவி கூறியதைக் கேட்டதும், அவன் மனம் குதூகலித்தது. அதே சமயம், இதயத்தின் அடித்தளத்தில் வேதனை நெளிந்தது.

''உங்கள் ராஜி!'' என்ற சொல்லிலுள்ள பந்தத்தில் சுந்தரம் மகிழ்ந்தான். அவனுக்கே உள்ள ராஜியாக அவள் ஆனதாகத்தான் அன்று விளையாடினான். அது, வெறும் விளையாட்டுத்தான். என்ன செய்வது? கண்ட கனவெல்லாம் நனவாகி விடுவதில்லையே! ஏமாந்தாலும், நம்பிக்கையிலும்தானே வாழ்க்கையே சுழலுகிறது!

• • •

ராஜி வந்து நான்கு நாட்களாயிற்று. சுந்தரம், வீட்டை விட்டு வெளியே வரவில்லை. வர விருப்பம் இல்லை. அவளைப் பார்த்துவிடக் கூடாது என்றிருந்தான். அவள்மீது வெறுப்பில்லை. ஆனால், பார்த்து விட்டால் மனத்தில் களங்கம் தோன்றிவிடக் கூடாதே என்ற பயந்தான். 'எதற்காகப் பார்க்க வேண்டும்? பார்த்த பிறகு இந்தப் பைத்தியக்கார மனம், என்னென்ன வேதனைகளை அனுபவிக்குமோ? எதற்கு இந்த வேதனை? அவளைப் பார்க்காமலேயே இருந்து விட்டால் எதுவும் கற்பனையோடு நின்று விட்டுப் போகலாமல்லவா? கண்ணால் பார்த்துக் கருத்து குலைய வேண்டாமே! இப்போதிருக்கும் மன அமைதியை ஏன் இழந்து தவிக்க வேண்டும்?' சுந்தரம் வீட்டை விட்டு வெளியே வரவே இல்லை.



அன்று, உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்காகச் செல்லம், பக்கத்து ஊருக்குப் போயிருந்தாள். மாலையில் சுந்தரம் வீட்டிலுள் இருந்தான். வெளிக் கதவு தாளிடாமல் இருந்தது. கையில் ஒரு குழந்தையுடன் சுந்தரத்தின் எதிரில் வந்தாள் ராஜி. சுந்தரத்துக்கு முதலில் அடையாளம் தெரியவில்லை.

''சுந்து அத்தான்! என்னைத் தெரிகிறதா?'' என்றாள் ராஜி சிரித்துக்கொண்டே.

வந்தவள் ராஜிதான் என்பதைத் தெரிந்து கொண்டதும், அவன் மனத்திலுள் சங்கடம் தோன்றியது. உள்ளம் துடித்தது. உடல் வியர்த்தது. கஷ்டப்பட்டுச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு சிரித்தான்.

"தெரியாமல் என்ன?" என்றான். இமை கொட்டாமல் அவளையே பார்த்தான். அவளிடந்தான் எவ்வளவு மாறுதல்! அந்தக் காலத்தில் பாவாடை கட்டி, கொலுசு ஒலிக்க ஓடியாடிய ராஜிக்கும், இப்போது கையில் குழந்தையுடன் நிற்கும் பெண்ணுக்கும்! எவ்வளவு வித்தியாசம்!

"என்ன, அத்தான்! அப்படிப் பார்க்கிறாய்? ஆளே மாறிவிட்டேனென்று? நீயுந்தான் மாறிப் போயிருக்கிறாய்."

என்ன பதில் சொல்வது? அவளுடைய நினைவில்தானே அமைதியை இழந்து தவிக்கிறான். எவ்வளவு கொடுமையான கேள்வியைக் கேட்டு விட்டாள் ராஜி. சுந்தரம் நீண்ட பெருமூச்சு விட்டான்.

"அத்தான்! நீ அதிர்ஷ்டசாலி. நல்ல பெண் உனக்கு மனைவியாகக் கிடைத்திருக்கிறாள். நல்ல குணம். இரண்டு நாட்களுக்கு முன் எங்கள் வீட்டுக்கு அவள் வந்திருந்தாள். நன்றாகப் பேசுகிறாள்."

சுந்தரம், ஒன்றும் பேசாமல் முற்றத்திலிருந்த மணவறையைப் பார்த்துக் கொண்டிருந்தான். மனம் அலைந்து கொண்டிருந்தது.

"ராஜி! ஞாபகம் இருக்கிறதா, நாம் குழந்தையாக இருந்தபோது அந்த மணவறையில்.......?"

பாதியில் நிறுத்தி விட்டு, நாக்கைக் கடித்துக் கொண்டான்.

'சே, ராஜிதான் தன்னைப்பற்றி என்ன நினைப்பாள்? பழைய சம்பவத்தை நினைவுறுத்தி மனத்தைக் கலக்கிறானே என்று அவள் தவறாக நினைத்து விட்டால்...?' சுந்தரம், குற்றவாளியைப்போல் குன்றிப் போனான். அவளை நிமிர்ந்து பார்க்கவே கூசினான்.

"அதை இன்னும் நீ ஞாபகத்தில் வைத்திருக்கிறாயா, அத்தான்?" என்றாள் ராஜி. அவனைக் கூர்ந்து பார்த்தாள். சுந்தரத்துக்கு அவளை நிமிர்ந்து பார்க்கத் தைரியம் இல்லை. மடியிலிருந்த குழந்தையைப் பார்த்தான்.

"அத்தான்! அந்த விளையாட்டை நீ மறந்திருப்பாய் என்றல்லவா நினைத்தேன்?"

"அது எப்படி மறக்க முடியும், ராஜி?" என்றான் சுந்தரம்.

"மறந்து விடு, அத்தான்!......அதுதான் நல்லது" என்றாள் ராஜி.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் மல்கியிருந்தது.

"எதற்காகக் கண் கலங்குகிறாய், ராஜி?"

"ஒன்றுமில்லை, விதி எப்படியெல்லாம் வாழ வைக்கிறது பார்த்தாயா?" என்று கூறிக் கண்களைத் துடைத்துக் கொண்டு இலேசாகச் சிரித்தாள் ராஜி.

"நீயும் இன்னும் அதை ஞாபகத்தில் வைத்திருக்கிறாயா?" என்றான் சுந்தரம்.

"நம்முடைய விளையாட்டைப்பற்றி மற்றவர்கள் சொல்லித் தெரிந்து கொண்டேன். படத்தையும் பார்த்துச் சிரித்ததுண்டு. பிறகு அதை மறக்கவில்லை. ஆனால், அதை விளையாட்டு என்று நினைக்கப் பழகிக் கொண்டேன்" என்றாள்.

"அந்தப் படம்கூட என்னிடம் பத்திரமாயிருக்கிறது" என்றான்.

அந்தப் படத்தை எடுத்துக் காட்டினான். இருவரும் அதையே வெறிக்கப் பார்த்தனர். பிறகு, திடீரென்று ராஜி சிரித்தாள்.

"நல்ல வேடிக்கை!" என்று சொல்லிக் கொண்டே ராஜி சுந்தரத்தைப் பார்த்தாள். சுந்தரத்தின் கண்களில் நீர் மல்கியது.

"அத்தான்! நான் உன்னைப் பற்றி எவ்வளவோ நினைத்தேன். ஆனால் நீ கோழையாக இருக்கிறாய்! விதியின் போக்கை உணர்ந்து கொண்டுதான் வாழ வேண்டும். என்னை நீ நினைப்பதில் தவறில்லை. ஆனால் அந்த நினைவு தவறாக இருக்கக் கூடாது. ஆண் கண் கலங்கலாமா? உன்னைப் போல் நானும் பழைய நினைவில் வேதனையடைந்ததுண்டு. ஆனால், உன்னை என் அண்ணனாக நினைத்துப் பழகத் தெரிந்து கொண்டேன்" என்று கூறிக் கொண்டே அந்தப் படத்தைக் கிழித்தாள்!

"ஐயோ, என்ன ராஜி இது?" சுந்தரம் பதறிப்போனான்.

"இந்தப் படம் இனிமேல், உனக்கு வேண்டாம். இது இருந்தால் உன் அமைதிக்குப் பங்கம்தான். இது, உன்னிடமிருந்து கொண்டு உன் மனத்தை அலைக்கிறது. நடந்த சம்பவத்தை மறக்க விடாமல் செய்கிறது" என்றாள் ராஜி.

சுந்தரம் திகைத்தான். சுக்கலாகக் கிழிந்துக் கீழே கிடந்த படத்துண்டுகளைப் பார்த்தான். மனம் தெளிந்தது. தன் நிலையை எண்ணி மனம் குன்றினான்.

"ராஜி! என்னைத் தவறாக எண்ணி விடாதே. என் நினைவில் களங்கம் கிடையாது. இந்தப் படத்தைக் கிழித்த பிறகு, எனக்கு அமைதிதான்" என்றான் சுந்தரம். அவன் குரல் கம்மியது.

"அடப் பயலே! யாருடா அது? சிரிக்கிறாயே...! பார் அத்தான், குழந்தை உன்னைப் பார்த்துச் சிரிக்கிறான்" என்றாள் ராஜி உற்சாகமாக. சுந்தரமும் சிரித்தான். குழந்தையின் கன்னத்தைக் கிள்ளினான்.

"நேரமாகி விட்டது. நாளைக்கு ஹைதராபாத் போகிறேன். ஒரு முறை அங்கு வாயேன். அவர் உன்னோடு கலகலப்பாகப் பழகுவார். வருவாயா, அத்தான்?" என்றாள் ராஜி. அவன் கையிலிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

"கட்டாயம் வருவேன், ராஜி" என்றான் சுந்தரம் மனத்தில் கலக்கமில்லாமல்.

"நீ வரும் போது, என் பையனுக்கு ஒரு பெண் பெற்றுக் கொண்டு வர வேண்டும்" என்றாள், சிரித்துக் கொண்டே. அதைக் கேட்டுச் சுந்தரம் சிரித்தான். இருவரும் மனம் விட்டுச் சிரித்தார்கள்.

ராஜி போய் விட்டாள். கீழே கிழித்த படம் சிதறிக் கிடந்தது. அதைப் பொறுக்கி அடுப்பில் கொண்டு போய்ப் போட்டு விட்டு வந்தான். தாங்க முடியாத பாரம் நெஞ்சிலிருந்து இறங்கியது போன்ற சுகம்.

மனத் தழும்பு மாறாவிட்டாலும், அதில், வேதனை இல்லை. நினைவு அகலாவிட்டாலும் அதில் களங்கம் இல்லை. அலைந்த மனத்துக்கு இப்போது ஓய்வு கிடைத்தது.

'மனத்தழும்பு' என்னும் இச் சிறுகதையில் வரும் ஒரு காட்சியைத்தான் இந்த இதழ் அட்டைப்படமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் வினு.

ஒரே ஒரு நிமிஷம்

“புஷ்பக்”

சூரியநாராயணு கொலையைப் பற்றி அறிந்த பிறகு என் நண்பர் கன்னையா நாயுடுவுக்கு ஒரே திகில்தான்.

“ஏன் ஸார்! பணத்துக்காக வேண்டிக் கொலை செய்யக்கூடத் துணிந்து விட்டார்களே, ஸார்!” என்றார் அவர் மிகுந்த நடுக்கத்தோடு.

அவர் நடுக்கத்தையும் திகிலையும் என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. நண்பர் கன்னையாநாயுடுவுக்குப் பாங்கியில் நம்பிக்கை கிடையாது.

அப்படி நம்பிக்கை ஏற்படாததற்குக் காரணம் இந்தப் பாழாய்ப் போன ‘வருமான வரி’ இலாகா என்று ஒன்று இருப்பதுதான். வருமானவரி கொடுப்பது என்றால் நாயுடுவுக்குப் பிடிப்பதில்லை.

நான் தெளிவாகச் சொல்லி விட்டேன் அவரிடம். “ஸ்வாமி, நீர் கேள்விப்பட்டதும் பத்திரிகையில் படித்ததும் கட்டுக் கதையல்ல. உண்மையாக நடந்ததுதான். என்றாவது ஒரு நாள் உயிரையும் இழந்து செல்வத்தையும் அடியோடு பறிகொடுப்பதைவிட எல்லாவற்றையும் பாங்கியில் கட்டி ஒழுங்காகக் கணக்கும் வைத்துக் கொண்டு வருமான வரி கொடுத்து விடுவது மேல்.”

கன்னையா கேட்கிற வழியாக இல்லை. “எங்கள் பரம்பரையிலேயே நடக்காத விஷயம். நான் சம்பாதித்த துட்டுக்கு இவனுக்குப் பங்கு கொடுப்பானேன்?”

“நாயுடு! இரும்புப்பெட்டியில் கோட்டு கோட்டாக நிரப்பிக்கொண்டே யிருக்கிறீங்க. விஷயம் வெளியிலே பத்துபேருக்குத் தெரியும். ‘கேடி’ எவனாவது காதிலே போட்டுக் கொண்டால் சும்மாயிருப்பானா? ராத்திரியோடு ராத்திரியா வீட்டுக்குள்ளேபுகுந்து கொள்ளையடிச்சுண்டு போயிடுவான்!” என்றேன்.

அவர் கடையைத்திறக்கப் புறப்பட்டுப் போய் விட்டார். மேலே என்னோடுபேச அவர் விரும்பவில்லை. ‘அவர் மனைவியாவது நல்லது சொன்னால் கேட்பாளா?’ என்று நினைத்தபடி அவளைப் பார்க்கப் போனேன். நாயுடு என்னுடைய நண்பர் இல்லையா?



★

இரவு நடுச் சாமத்துக்குமேல் வீட்டுக் கதவு படபட வென்று தட்டப்படும் ஓசை என்னை எழுப்பியது. முதல் நாள் காலை நாயுடுவுடன் திருடர்களைப் பற்றிப் பேசியிருந்தது எனக்கு நடுக்கத்தைத் தந்தது. எவனோ என்னவோ? நடுநிசியில் கதவைத் தட்டுகிறானே? துணி உலர்த்தும் கொம்பைத் தயாராக வைத்துக்கொண்டு கதவைத் திறந்தேன். உள்ளே நுழைந்தவன் மேல் அடி விழ இருந்தது. கடைசி வினாடியில் நாயுடு என்று தெரிந்து நிதானித்தேன்.

“ஐயையோ! போச்சு போச்சு! எல்லாம் போச்சு!” என்று அலறினார் நாயுடு.

“ஒன்றும் போகலேங் காணும். எதற்கு இப்படி அலறுகிறீர்கள்?” என்றேன்.

“நீ சொன்னபடி நடந்து விட்டது. இரண்டு தடியர்கள் என் வீட்டுக்குள் நுழைந்தார்கள்!” என்று அவர் சொன்னதும் எனக்குத் தூக்கிவாரிப்போட்டது.

நாயுடு தொடர்ந்தார்: தூங்கிக்கொண்டிருந்தவனை எழுப்பி இரும்புப் பெட்டிச் சாவியைக் கேட்டார்களாம். நாயுடு தயங்கிய போது சட்டென்று கத்தி ஒன்று ஒரு தடியனின் கையில் பளபளத்ததாம். நாயுடு நடுங்கிக் கொண்டே இரும்புப் பெட்டியைத் திறந்தாராம். அங்கே அவருக்கும் அந்தத் தடியர்களுக்கும்கூட ஒரு அதிசயம் காத்திருந்ததாம். ரூபாய் நோட்டுக்களில் ஒன்றைக்கூடக் காணோமாம். பூ! இவ்வளவுதானா! கோடிக்கணக்காய்ப் பணம் வைத்திருக்கிறாய் என்றல்லவோ கேள்வி!” என்றார்களாம்.

அவர்கள் போன பிறகு நாயுடு இங்கே ஓடி வந்திருக்கிறார்.

“நாயுடுகாரு உங்கள் மனைவி உங்களிடம் சொல்லவில்லையா?”

“அவள் என்னத்தைச் சொல்றது? கட்டை மாதிரி தூங்குகிறாளே. குறட்டை விட்டுக் கொண்டு.”

“அதில்லை, நாயுடு! உங்கள் மனைவியிடம் சொல்லிவிட்டு அவள் அனுமதியுடன் எல்லாப் பணத்தையும் நான்தான் பாங்கியில் போட்டு விட்டேன். இதோ இருக்கிறது. ‘பாஸ்’ புத்தகம். மாலையில் வேலை அதிகமாக இருந்தது. காலையில் கொடுக்கலாம் என்று இருந்தேன். உங்கள் மனைவி அதைச் சொல்லவில்லையா?

நாயுடுவுக்குப் போன உயிர் வந்தது. “அவள் என்னிடம் சொல்லப் பயந்து பேசாமல் இருந்திருப்பாள். ‘அதிகப்பிரசங்கி’ என்று திட்டுவேன் என்று பயம். நீயே என்னிடம் சொல்லிவிட்டால் நல்லது என்று நினைத்திருப்பாள்!”

“நாயுடு! நீரும் உங்களுடைய மனைவியைப் போலவே குறட்டை விட்டுத் தூங்கலாம் இனிமேல். போய் வாருங்கள்” என்றேன்.

“எப்படி ஐயா, தூக்கம் வரும்? ஐந்து வருஷ வருமான வரியைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமே!” என்று புலம்பிக் கொண்டே போய்ச் சேர்ந்தார் நாயுடு.

கோடி செம்பொன்

பொன்னம்மாளுக்கு இன்றுதான் அடுப்பங்கரையிலிருந்து ஓய்வு; புக்ககத்திலிருந்து வந்திருந்த அவள் மகள் வடிவு அப் பொறுப்பை மேற்கொண்டுவிட்டாள். ஆனால், நல்ல நாளும் கிழமையுமாக இன்று பொழுது விடிந்ததுமா அந்த அலமாரிச் சாவி காணாமற்போகவேண்டும்!

எண்ணெய், அரப்புப் பொடியை நாடிவந்த வடிவின் தகப்பனார் சதாசிவம், பூட்டப்பட்டிருந்த அலமாரியைக் கண்டு திடுக்கிட்டார். எங்கே தொலைந்தது சாவி?

அவருடைய மகன் சந்துருவுக்கோ அதைப் பற்றி அக்கறையில்லை; தான் அரும்பாடுபட்டுச் சேகரித்திருந்த புராதன நாணயங்களைப் பெருமையுடன் அத்திம்பேரிடம் காண்பித்துக்கொண்டிருந்த அவனுக்கோ, திடீரென்று காணாமற் போயிருந்த ஒரு நாணயத்தைப் பற்றியே கவலை. இதையறிந்த வாண்டுப் பயல் காசி பதுங்கலானான்; அன்று காலை அவன் அந்த நாணயத்துடன் விளையாடிக்கொண்டிருந்தபோது சமையலறையில் ஏதோ ஒரு பாண்டத்தில் அதைத் தவற விட்டுவிட்டதையும், எந்தப் பாண்டத்தில் விழுந்தது என்பதை அறிய முடியாமல் போனதையும் பற்றித் தற்சமயம் அவன் மூச்சே விடவில்லை.

"லேசுப்பட்ட நாணயமா அது! பல்லவ மண்டலாதிபதி மாமல்லரோட மூன்றாவது தலைமுறையினரான நந்திவர்மனோட நாணயம்னா! எங்கே அது?" என்று அம்மாவிடம் அதட்டினான் சந்துரு.

"எனக்கென்னடாப்பா தெரியும், சந்துரு. கருக்கல்லே கீரைக்காரன் வந்தப்போ . . ."

"அதைக்குடுத்து கீரை வாங்கிட்டயா? கி.பி. எட்டாவது நூற்றாண்டு நாணயம்னா கின்னுக்கீரைன்னு நெனப்பா? கோடி செம்பொன் பெறக் கூடிய நாணயத்தையா எடுத்து . . .?"





"கீரையும் வாங்கலே ஒண்ணுமில்லே சந்துரு.. ஒரு வேளை உங்கப்பா அதை உண்டியிலே போட்டிருந்தாலும் போட்டிருக்கலாம்" என்றாள் பொன்னம்மாள். உடனே, உடைப்பதற்காக ஒரு சுத்தியை உருவினான் சந்துரு.

"வேண்டாமடா, ஸ்வாமி உண்டியை உடைக்காதே"

"ஒருக்கால் அந்தப் பூட்டிய அலமாரிக்குள்ளார இருக்குமோ" என்றான் வாண்டுப் பயல் தந்திரமாக.

அடுத்த கணம், பன்னிரண்டு நூற்றாண்டுகளைப் பிளந்து புதைபொருள் குடையும் உத்வேகத்துடன் சந்துருவின் முரட்டுச் சுத்தி அந்த அலமாரியைக் குறி வைத்துப் பிளந்தது. படார்!

"இப்போ உடைத்தென்ன உபயோகம். கருக்கல்லே உள்ளே எண்ணெய் மாட்டிக்கிட்டிருந்தப்போ உடைக்க ஆளில்லே. எண்ணெய் சேர்த்துக்காமலே சமைக்கத் தொடங்கிட்டா வடிவு. நான் தடுத்ப்போ, தனக்குத் தெரியும்னு என்னையே அடக்கிட்டா. இனிமே யாராலே சாப்பிடமுடியுமோ அந்த சமையலை!" என்று பொருமிவிட்டுப் போய் படுத்துக்கொண்டாள் பொன்னம்மாள்.

உடைபட்ட அலமாரியிலிருந்து அரப்புப் பொடி, எண்ணெய் ஜாடி, ஒரு சாவி, தம் வாழ் நாட்களில் ஒரு பல்லவ நாணயத்தையே பார்த்தறியாத ஒரு கரப்பான் பூச்சிப் பட்டாளம் எல்லாம் வெளிப்பட்டன. சந்துருவுக்கு ஏமாற்றமே!

அன்று, பொன்னம்மாளைத் தவிர எல்லோரும் நாக்கைத் தீட்டிக்கொண்டு பகல் விருந்துக்கு அமர்ந்துவிட்டனர். ஆனால், வாண்டுப் பயல்மட்டும் ஏனோ சாப்பிட ஆரம்பிக்காமல் தட்டைப் பார்த்தவாறு விழித்தான். சிறிது நேரம் கழித்து "வந்து ... அது ... காலையிலே ஏதோரு பாத்திரத்திலே விழுந்தது ...!" என்று கூறினான்.

"ஏதுடா?" என்று கர்ஜித்தது சந்துருவின் குரல்.

"உன்னோட காசு!"

"என்ன? பல்லவ சாம்ராட் நந்திவர்மனோட நாணயமா? எதுலேடா விழுந்தது ... எதுலே? ... குழம்பிலேயா, கூட்டுலேயா? ... வடைப் பருப்புலேயா? ... புளிசாதத்திலேயா? ... பொங்கல்லேயா ...? சொல்லித் தொலையேன்!"

"தெரியலே, இனிமேல்தான் தேடணும்!" என்றான் வாண்டு. கூட்டையும் குழம்பையும் குழப்பி ஆராய்ந்தாள் வடிவு. குஞ்சா லாடுகளை ஒவ்வொன்றாக விண்டு பார்த்தான் சந்துரு. மாப்பிள்ளையோ பரிதாபகரமாகக் கழுத்தைப் பிடித்துக்கொண்டு இருமினார். "வயிற்றை ஏதோ செய்கிறதே" என்று முணுமுணுத்தார் சதாசிவம்.



"கல் நெஞ்சர்களே, கி. பி. எட்டாவது நூற்றாண்டின் அரிய பொக்கிஷத்தை ஜீரணம் செய்துவிட்டு ..."

"எக்ஸ்-ரே எடுக்கவேண்டியதுதானே எல்லாரையும்" என்றார் மாப்பிள்ளை கவலையே உருவாக. சந்துரு இடைவெட்டி "அதற்கு எவ்வளவு செலவானாலும் தரும், நாணயத்தின் மதிப்பே கோடி செம்பொன் ...!"

"வீடு பத்தி எரிகிற சமயத்திலே இதென்னடா உளறல் ..." என்று ஆத்திரத்துடன் சீறினார் சதாசிவம்.

நடந்த விஷயமே அறியாமல் இந்த சமயத்தில் சாப்பிட அங்கு வந்த பொன்னம்மாள், எல்லோரும் குழம்பி இருப்பதைக் கண்டு "அப்பவே சொன்னேன். பொரிக்கறதுக்கு மட்டுமே 'டால்டா' உபயோகிக்கறவள் நான். டின் வெளியே இருக்கேன்னு அதிலிருந்து எடுத்து எல்லாப் பண்டத்துக்கும் உபயோகிச்சுட்டாள் வடிவு. யாரு சாப்பிடுவாங்க. அதான் முழிக்கிறாங்க எல்லாரும்!" என்று இடித்துக் காட்டினாள். இது சிரிப்பை உண்டுபண்ணியது.

"'டால்டா' மேலே பழியைப் போடக் கூடாது. சுத்தமான, புத்தம் புதிய தாவர எண்ணெய்களிலேயிருந்து தயாராகி, வைட்டமின்கள் ஏ, டி இரண்டும் சேர்க்கப்பட்டுள்ள 'டால்டா' உடம்புக்கு நல்ல பண்டமது. அதாலே எதைத் தயாரிச்சாலும் அதனதன் சுயமான ருசி நல்லா எடுபடும்!" என்று விளக்கினார் மாப்பிள்ளை.

"தெரியும், தெரியும். இனிமேலே இந்த டின் இங்கேயிருந்தா சாவைக்கும் நம்மைப் பட்டினி போட்டுடுவாள் வடிவு" என்று புலம்பியபடி பொன்னம்மாள், பேச்சை மாற அடையாளமிட்ட அந்த டின்னைத் தூக்கினாள். "அதோ" என்று கூவி டின்னுக்கு அடியில் காட்டினான் வாண்டு. "என் பல்லவ நாணயம்!" என்று மின்னல் வேகத்தில் பாய்ந்து நாணயத்தை மீட்டுக்கொண்டான் சந்துரு.

உடனே சாப்பாடு மணமணவென்று இறங்கியதைப் பார்க்கவேண்டுமே! உணவில் நாணயம் விழுந்திருக்கிறதோ என்ற சந்தேகத்தினால்தான் சாப்பாடு இறங்கவில்லை என்பதைப் பொன்னம்மாள் பிற்பாடு புரிந்துகொண்டாள். பிறகு, பிறரைப்போல் அவளும் பற்பல விருந்து வகையறாக்களின் ருசியில் லயித்துவிட்டாள். சாப்பாட்டில் ஈடுபட்டு மௌனியாக மாறிவிட்ட சந்துருவின் வாயிலிருந்து மூன்றே வார்த்தைகள் வெளிவந்தன: "கோடி செம்பொன் கொடுக்கலாம்!"

தித்திப்பு

"வாருங்கள், மாப்பிள்ளே!'' என்று குதூகலமாக மருமகன் சிரஞ்சீவி சீதாராமனை வரவேற்றார் கோதண்டபாணி.

ஜட்காவண்டிக்காரன் சீதாராமனின் பெட்டியை உள்ளே கொண்டு வந்தான்.

''பாரு'' என்று வீட்டுக்குள் குரல் கொடுத்தார் கோதண்டராமன். சீதாராமன் ஜட்காவுக்குச் சில்லறை கொடுத்து விட்டுத் திரும்புவதற்கும் பார்வதியின் தாமரை முகம் அவனைக் கண்டு புதுமலர்ச்சி பெறுவதற்கும் சரியாக இருந்தது.

''கல்யாணத்தன்று பார்த்த அந்தப் பார்வதியை விட இவள் ஆயிரம் மடங்கு அழகாகி விட்டாளே!'' என்று மனத்துக்குள் ஒரே வியப்பு சீதாராமனுக்கு.

கதவு ஓரத்தில் நின்று, ''வாருங்கோ, மாப்பிள்ளே! ஊரில் எல்லாரும் சௌக்கியம்தானே?'' என்று மாமியார் கோதையம்மாள் விசாரித்தாள்.

ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டு, ''சௌக்கியம்'' என்றான் சீதாராமன்.

''முந்தா நாளே வருவீர்களென்று எதிர்பார்த்தோம்'' என்று கோதண்டராமன் மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

சீதாராமன் இந்தக் கேள்விக்கென்று தான் தயாரித்து வைத்திருந்த பதிலே 'டக்' கென்று சொல்லி விட்டான்.

''மானேஜர் லீவே கிடையாது என்று சாதித்து விட்டார். அப்புறம் விஷயத்தைச் சொல்லி அவரிடம் கெஞ்ச வேண்டியதாகப் போயிற்று. நாளைக் காலையில் ஐந்து மணி வண்டிக்குப் புறப்பட்டு விட வேண்டும். ஜங்ஷனில் இறங்கிய கையோடு, நாளைக்காலே வண்டிக்கு இரண்டு டிக்கட் 'ரிசர்வ்' செய்து விட்டேன்'' என்றான் சீதாராமன்.

''முழுசாக ஒரு நாள் கூட இங்கே தங்கவில்லே!''

''அதற்கு என்ன, ஏப்ரலில்வருகிறோம். இந்த ஊருக்கே என்னே மாற்றினாலும் மாற்றி விடுவார்கள்!''

கதவோரத்திலிருந்து முனகல் கேட்டது.

''பாரு! அம்மா என்ன சொல்கிறாள், கேளு.''

பார்வதிபதில்சொன்னாள். ''வெந்நீர் தயாராகஇருக்கிறதாம். குளித்துச் சாப்பிட்ட பிறகு, எல்லாம் ஆற அமரப் பேசலாமே என்கிறாள்.''

''ஆமாம்'' என்றான் சீதாராமன். ''என்ன பிரயாணம்! ராத்திரியெல்லாம் தூக்கமே இல்லை. ரயிலில் ஒரே மூட்டைப் பூச்சி உபத்திரவம்'' என்றான்.

சாப்பாடு முடிந்தது. 'பார்வதி இன்னுமா சாப்பிட்டு முடியவில்லே?' என்று அறைக் கதவையே பார்த்துக் கொண்டிருந்தான் சீதாராமன்.

கடைசியில், பார்வதி வந்தாள், ஒரு தட்டில் நாலைந்து சாத்துக்குடிப் பழங்களை எடுத்துக் கொண்டு.

''அதுதானே பார்த்தேன்!'' என்றான் சீதாராமன்.

''என்ன?''

''கடைக்குப் போய்ச் சாத்துக்குடி பேரம் பேசி வாங்கி வந்திருக்கிறாய். அதுதான் இத்தனே நேரமாக உன்னே ஆளைக் காணோம்!''

''சாத்துக்குடி கடையில் ஒன்றும் வாங்க வில்லே. எங்கள் வீட்டுக் கொல்லேயில் கொடியாகப் படர்ந்திருக்கிறது. போய்ப் பறித்துக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள் பார்வதி.

சீதாராமன் சொக்கிப் போனான். அவனுடைய பேறுவை ஓட விடாமல் தடுத்து நிறுத்திய இன்பக் கனவுகளெல்லாம் ஒவ்வொன்றாகக் கண்ணெதிரே நடக்கிறதைக் கண்டு அவனுக்கு உடம்பு புல்லரித்தது.

''உட்காரேன், பார்வதி!''

''இல்லே, அப்பா எதற்காவது கூப்பிட்டு வைப்பார்.''

''அதெல்லாம் உன் அம்மா பார்த்துக் கொள்ள மாட்டாளா?''

பார்வதி சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. எது வேண்டுமானாலும் என்னேத்தான் கேட்பார்!''

''ஓகோ? குழந்தை விடுதூது போல் இருக்கிறது.''

''அப்படியே பழகிப் போயிற்று. நான் இல்லாவிட்டால், வீட்டில் மௌனம் தான்! அப்பாவுக்கு ஒன்றும் ஓடாது. அம்மாவுக்குக் காரியங்கள் அப்படியப்படியே நின்றுவிடும்!''

சீதாராமன் ''நல்ல வேடிக்கை!'' என்று கூறிச் சிரித்தான்.

''ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?''

''இல்லே. நாளை நீ என்னோடு வரப்போகிறாயா, இல்லையா?''

''அழைத்துப் போனால், வருகிறேன்!''

''அப்புறம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையில் 'டெலிபோனுக' வேலை செய்ய ஆள் இல்லாமல் போய் விடுமே?''

துறைவன்



"அதுதான் எனக்கும் மிகவும் கவலையாக இருக்கிறது."

"எத்தனை வருஷத்துத் தகராறோ?"

"ஐந்து வருஷங்களுக்கு மேலாயிற்று. அப்பாவும் அம்மாவும் நேர்முகமாகப் பேசி நான் பார்த்த ஞாபகமில்லை. அன்றைக்கு உத்தியோகமாகிப் பம்பாய் போனதிலிருந்து, இந்த "டெலிபோன்" உத்தியோகம் என் தலையில் வந்து விழுந்து விட்டது!"

"தகராறு எதுவாக இருந்தாலும் சரி, நான் தீர்த்து வைக்கப் போகிறேன், பார்!" என்றான் சீதாராமன்.

"குடும்பத் தகராறு விஷயத்தில் பெரிய அநுபவசாலி போலத்தான் பேசுகிறீர்கள். இன்னும் முழுசாக ஒரு சண்டை



கூடப்போட்டாகவில்லை நாம் இருவரும். தீர்க்கப் போகிறாராமே தீர்க்க!"

"பெரியவர்கள் சண்டையைக் குழந்தைகளாகிய நம்மால்தான் தீர்க்க முடியும், பார்வதி! வேண்டுமானால் பாரேன்!"

"எங்க அப்பா ரொம்பக் கோபக்காரர். தெரியுமா?"

"ஓகோ! நான் அதற்கு மேல் கோபக்காரன்! ரௌத்ராகாரமாக அடித்து விளாசவேணுக்கும்!"

பார்வதிக்குஉள்ளூறப் பயம். "முதலில் இந்தச் சாத்துக்குடியை அடித்து விளாசுங்கள், பிறகு யோசிக்கலாம்!"

சாத்துக்குடிச் சுளைகளைச் சுவைத்துக்கொண்டே, சீதாராமன் மனசுக்குள் பல சமாதானத் திட்டங்களை வகுத்தும் பெருக்கியும் கூட்டியும் கழித்தும் பார்த்தான். ஒன்றும் சரியான வழியாகத் தோன்றவில்லை!

"எல்லாம் தானாகச் சரிப்பட்டுப் போகும், நீ இந்த வீட்டில் இல்லாவிட்டால்!" என்று கையை விரித்து விட்டான் சீதாராமன்.

"ஒன்று சொல்லட்டுமா?"

"சொல்லு, என் பிரியநாயகி!"

"கேலி பண்ணாமல் கேட்கிறதானால் சொல்லுகிறேன்!"

"சொல்லு; சிரிக்கவில்லை!"

"இன்று சாயங்காலம், நாம் படம் பார்க்கப் போய் விடுவோம்!"

"அப்பாவும் அம்மாவும் கலந்து பேசி முடிவுக்குவரட்டுமென்கிறாய்!"

"எப்படி என் யோசனை?"

"பெண்களுக்கே உதிக்கும் யோசனை! பலே! நான் தயார்!"



வெளியிலிருந்து "பாரு!" என்று கூப்பிட்டாள் கோதையம்மாள்.

"தாது நீ சொல்லி வாராய்!" என்று பாடினுன் சீதாராமன்.

கோதண்டராமனின் குரல் அவருக்கே இனம் தெரியாது. அவ்வளவு சாது மனிதர். கோதையம்மாளோ, அதற்கு மேல் பரம சாது. வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசுவதற்கு நாலு தடவைகள் யோசிக்கிற சுபாவம். இந்தத் தம்பதிகளுக்குள் 'பேச்சு வார்த்தை'' நின்று விட்டது என்பது அதிசயந்தான் அல்லவா?

கோபம் வந்தால் சிலர் கத்துவார்கள்; சிலர் கை நீட்டி அடித்து விடுவார்கள். சிலர் வார்த்தைகளைச் சரமாரியாகப் பொழிந்து கொட்டுவார்கள்! கோதண்டராமன் இதற்கு நேர் மாறுனவர்.

ஐந்து வருஷங்களுக்கு முன்னுல் ஒரு நாள். பார்வதிக்கு அப்பொழுது பன்னிரண்டு வயது. அவளுடைய அண்ணு அன்று ஐ. ஏ. எஸ். பரீட்சை எழுதப் போக வேண்டும்.

"நந்துவுக்குக் காப்பி கொடுத்தாயா, கோதை!" என்று காலையிலிருந்தே 'ஜுரூர்' செய்து கொண்டிருந்தார் கோதண்டராமன். ஐ. ஏ. எஸ். பரீட்சைக்குப் போகிற பிள்ளை, பூரணத் திருப்தியோடு போக வேண்டுமல்லவா?

"சாப்பாட்டுக்கு அப்புறம் புறப்படும் பொழுது ஒரு 'டம்ளர்' காப்பி கொடு" என்று அவர் உத்தரவிட்டார்.

'நந்து' என்ற நந்தகுமார் காப்பியை எதிர்பார்த்து நின்றுன்.

'டமால்' என்று சத்தம் கேட்டது.

கோதண்டராமன் உள்ளே போய்ப் பார்த்தார்.

குழந்தை பார்வதி பால் பாத்திரத்தைக் கீழே போட்டுப் பால் அவ்வளவும் தரையில் சிந்திவிட்டது.

பார்வதி பேந்தப் பேந்த விழித்தாள்.

கோதையம்மாளுக்கு வந்த கோபத்தில் பார்வதியின் முதுகில் 'திண்' என்று ஒரு அடி கொடுத்து விட்டாள்!

பார்வதி 'ஹோ' வென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

"பார்த்தாயாடா, நந்து! நீ பரீட்சைக்குப் போகிற வேளையிலே, குழந்தையை அடிச்சு அழப் பண்ணிவிட்டாள், பார்த்தாயா?" என்று மெதுவாகச் சொன்னுர் கோதண்டராமன். ஆனுல் அவர் குரலில் இருந்த துக்கம் எல்லாரையும் நடுங்க வைத்தது!

இதுதான் சம்பவம். மேற்படிச் சம்பவம் நடந்த நாள்தொட்டு, தம்பதிகளுக்குள் பேச்சு வார்த்தை இல்லை! நந்து

நிஜமாகவே ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணிய பிறகு கூடக் கோதண்டராமன் கோதையை மன்னிக்கவில்லை!

• • •

சீதாராமனும் பார்வதியும் சினிமாவுக்குப் போய் விட்டார்கள்.

கோதண்டராமன் தம்முடைய அறையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார். கோதையம்மாளுக்குச் சமையலறையில் வேலை இருந்தது. புருஷன் வீட்டுக்குப் போகும் பெண்ணுக்காகத் தின்பண்டங்கள் தயார் செய்து கொண்டிருந்தாள் கோதை.

நாளைக்குப் பார்வதி ஊருக்குச் சென்ற பிறகு ஏற்பட வேண்டிய சூழ்நிலை இப்பொழுதே ஏற்பட்டு விட்டது. மோட்டாருக்கு நாலு சக்கரங்களில் ஒன்றைக் கழற்றிப் போட்டு விட்டது போல் இருந்தது. இனி வீடு வீடாக இருக்குமா?

"பாரு....." கோதண்டராமனின் குரல் காதில் விழுந்தது.

'பாரு' கணவனோடு சினிமாவைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

கோதையம்மாளுக்கு வேடிக்கையாக இருந்தது. 'நாளைக்கும் இவர் "பாரு" என்றுதான் கூப்பிடுவாரோ? கடலை மாவைப் பிசைந்து கொண்டிருக்கும் கையோடு எப்படி 'அவரை'ப் போய்ப் பார்க்க முடியும்? என்னதான் நடக்கிறது, பார்ப்போமே!' என்று சும்மா இருந்து விட்டாள்.

ஐந்து நிமிஷங்கள் ஆடி அசைந்து மறைந்தன.

சைக்கிள் பால்காரன் வாசலில் வந்து நின்று மணி அடித்தான்!

மைசூர்ப்பாகைத் தகுந்த பதத்தில் இறக்க வேண்டிய கோதை எப்படி எழுந்துபோக முடியும்? தன்னையறியாமலேயே "பாரு" என்று குரல் கொடுத்தாள்! ஒரு நொடி கழித்துத் தான் தன் பைத்தியக்காரத்தனம் அவளுக்குப் புலப்பட்டது.

யாரோ சமையலறைக்குள் திடுதிப்பென்று நுழையும் சத்தம் கேட்டது.

வேறு யாருமில்லை, கோதண்டராமன் தான். பால் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு போனார். பாலை வாங்கிவந்து, சமையலறை அலமாரிக்குள் வைத்து மூடினார். கோதையம்மாள் குனிந்த தலை நிமிரவில்லை. "செய்யட்டும், இப்போதாவது குடும்பக் காரியம் செய்யட்டும்" என்று அவளுக்கு மனத்துள் ஒரு திருப்தி.

கோதண்டராமன் உடனே சமையலறையை விட்டு வெளியே போய்

விடுவாரென்றுதான் அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவர் அங்கேயே நின்று கொண்டிருந்தார். சூடான மைசூர்ப்பாகு அடுப்பை விட்டு இறங்கப்போகும் ருசிகரமான நேரத்தில், யார்தான் அந்த இடத்தை விட்டு அகல முடியும்?

கோதண்டராமனின் முழங்கால்களையும் பாதங்களையுமே கோதையம்மாள் கடைக் கண்ணால் பார்த்தாள். அவர் முகத்தில் என்ன இருந்தது என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை! தன்னைப் போய்ப் பால் வாங்கும்படி செய்து விட்டாள் என்ற உக்கிரமோ? அல்லது மைசூர்ப்பாகில் கொஞ்சம் ருசி பார்ப்பதற்குக் கொடுக்க மாட்டாளா என்ற ஆவலோ எது இருந்தது அவருடைய முகத்தில்?

"கோதை!" அவருடைய குரல் பக்கத்தில் கேட்டது.

கோதையம்மாளுக்கு உடம்பு புல்லரித்தது. எத்தனை வருஷங்களுக்குப் பின் அவர் இப்படிப் பெயரைச் சொல்லி அழைக்கிறார்! அவர் குரலே புதிதாக அல்லவா இருக்கிறது?

"...ம்..." என்றாள் கோதை.

"கோதை! நீ என்னோடு இனிமேல் பேசவே மாட்டாயா?"

கோதையம்மாளுக்குச் சிரிப்பு வந்தது.

"பேசினால் போச்சு!" என்றாள்.

"நாளைக்குப் பார்வதி இங்கே இருக்க மாட்டாள்!"

"ஆமாம், அதற்கென்ன?"

"அவள் இல்லாவிட்டால்தான், நமக்குள் பேச்சு வார்த்தை இருக்காதே?"

"யார் சொன்னது அப்படி?"

இந்தப் பதிலைக் கேட்டதும், கோதண்டராமனுக்குப் புதிய மைசூர்ப்பாகுக் கட்டியை வாயில் போட்டுச் சுவைப்பது போலிருந்தது.

"தித்திப்புப் போதுமா, பாருங்கள்!" என்று ஒரு துண்டு மைசூர்ப்பாகை அவரிடம் நீட்டினாள், கோதை எங்கேயோ பார்த்துக் கொண்டு!

ட்டிய கையைத் தம் இரு கரங்களாலும் பற்றிக் கொண்டார் கோதண்டராமன். மைசூர்ப்பாகு சாட்சியாக அந்த இரண்டு உள்ளங்களிலும் பரிசுத்தமான அன்பு இனிப்பாகப் பாய்ந்து சென்று கொண்டிருந்தது.

கோதையம்மாள், தன் கையை இழுத்துக் கொள்ளவில்லை. "கோதை! நீ என்னை ஒரு நாளும் கோபித்துக் கொள்ள மாட்டாய். எனக்குத் தெரியும்" என்று மெதுவாகச் சொன்னார் கோதண்டராமன்.

"மைசூர்ப்பாகு" என்று ஞாபகமூட்டினாள் கோதை!

"இனி எனக்கு எந்தப் பண்டமும் தித்திக்காது" என்று சொல்லி எழுந்து சென்றார் கோதண்டராமன்!

சினிமாப் பார்த்து விட்டுச் சீதாராமனும் பார்வதியும் உல்லாசமாக நடந்தே வீட்டுக்கு வந்தார்கள்.

"அம்மா!" என்று குரல் கொடுத்து, வாசல் அழிக்கதவைக் குலுக்கினாள் பார்வதி.

வீட்டுக்குள்ளேயிருந்து கோதண்டராமனின் குரல் பளிச்சென்று கேட்டது.

"கோதை! அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறே! பாரு வந்து விட்டாள், போய்க் கதவைத் திற."

பார்வதிக்குத் தூக்கிவாரிப் போட்டது! 'அப்பாவா இப்படி......'கோதை' யென்று கூப்பிட்டார்?' மறுகணம் அவளுக்கு ஓர் அதிர்ச்சி! தன் கணவர் இதைக் கவனித்து விட்டாரோ?

கோதையம்மாள் வாசல் விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்தாள்.

சீதாராமன் தன்னுடைய அறையில் போய் அமர்ந்தான். அவனுக்குத் தான் பார்த்து விட்டு வந்த சினிமாக் காட்சிகளெல்லாமே மறந்து போய் விட்டன.

கையில் ஒரு தட்டோடு, பார்வதி வந்தாள். அவள் முகத்தில் புத்தம் புதிய மலர்ச்சி ஒளிர்ந்து கொண்டிருந்தது.

தட்டில் மூன்று மைசூர்ப்பாகுத் துண்டுகள் இருந்தன.

"எனக்கு இரண்டு, உனக்கு ஒன்று" என்றான் சீதாராமன் இலேசாகச் சிரித்துக்கொண்டே!

"எதற்காக ரெட்டைப் பங்கோ?"

"நான் விஜயம் செய்தேன். உன் அப்பா அம்மாவுக்கிடையே சமாதானம் உண்டாகி விட்டது."

பார்வதி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் முகம் அந்தக் கணத்தில் எவ்வளவு அழகாக வெட்கியிருக்கும் என்பதைச் சீதாராமன் ஊகித்துத்தான் பார்க்க வேண்டியிருந்தது!


"பாரு!"

அப்பா குரல் கொடுத்தார்.

"அம்மாவை இலை போடச் சொல்லு. மணி பதினொன்று அடிக்கப்போகிறது."

"இந்தத் தடவை மறந்து போகாமல் பாரு என்று கூப்பிடுகிறார் பார்த்தாயா, உன் அப்பா" என்றான் சீதாராமன்.

பார்வதி ஓடியே போய்விட்டாள்!



நேஷனல்-எக்கோ கம்பெனி

அளிக்கும் புதிய ரேடியோ

'ஙியூ பிரமுக்' மாடல் 731

இனிய த்வனி! நெறந்த உழைப்பு! நீடித்த சேவை!

[illegible]

நிகர விலை ரூ. 625/- உள்ளூர் வரிகள் தனி

ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையென்ஸஸ் பிரைவேட் லிமிடெட்

ஆபெரா ஹவுஸ், பம்பாய் 4 • 3, மதன் ஸ்ட்ரீட், கல்கத்தா 13 • ப்ரேசர் ரோடு, பாட்னா • 1/18, மௌண்ட் ரோடு, மதராஸ் 2 • 35/79, [illegible] ரோடு, பெங்களூர் • [illegible], டெல்லி

G.R.A. 7698

தமிழ் கூறும் நல்லுலகம்

நாகபுரி சர்வகலாசாலை தமிழ் மாணவர் சங்கத்தின் ஆதரவில் பொங்கல் திருநாள் அமோகமாகக் கொண்டாடப்பட்டது. முதன் முதலில் இவ்வூரில் அமரர் கல்கி நினைவு நாளை இச்சங்கம் முன்பு சிறப்பாகக் கொண்டாடிப் பெருமைபெற்றுள்ளது.

தமிழரின் பண்பாட்டுக்கு ஏற்ப அலங்கரிக்கப்பட்ட சர்வகலாசாலை மாணவர் மன்றத்தில் கதம்ப நிகழ்ச்சிகள் பிரார்த்தனை கீதத்துடன் ஆரம்பமாயின.

சங்க மாணவிகள், பொங்கலைப் பற்றிய ஒரு பாட்டுடன் கோலாட்டத்தையும், பாரதியாரின் பாடலுடன்கும்மியையும் அளித்தனர். கர்நாடக சங்கீத வாத்திய கோஷ்டி ஒன்றும் ஏற்பாடு ஆகியிருந்தது. மாணவ - மாணவிகளின் கோஷ்டி கானத்தை மக்கள் ரசித்தனர்.

ஸ்ரீ கோவிந்தராசன் எழுதிய "அழையா விருந்தாளிகள்" என்ற குட்டி ஹாஸ்ய நாடகமும் மேடை ஏற்றப்பட்டது.

✿

வத்திராயிருப்பு மக்கள், உலகம் புகழும் விஞ்ஞானியும், தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கழக இயக்குநரும், வத்திராயிருப்புவாசியுமான பத்மபூஷண் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களின் அறுபதாவது பிறந்த தின விழாவைச் சென்னை சர்வகலாசாலை துணைவேந்தர் டாக்டர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியார் தலைமையில் சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடினர். விழா வத்திராயிருப்பு இந்து உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் நடைபெற்றது.

டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் அவர்கள் பெருத்த ஆரவாரத்துக்கிடையே டாக்டர் கிருஷ்ணனின் உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், "உலகம் போற்றும் உத்தமர், மாபெரும் விஞ்ஞானி நமது தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கழக இயக்குநர் டாக்டர் கிருஷ்ணன் உங்கள் ஊரில் பிறந்தது நீங்கள் செய்த மாபெரும் அதிர்ஷ்டம். அவர் பெரிய விஞ்ஞானி மாத்திரமல்ல, உயர்ந்த பண்புமுள்ளவர்" என்று கூறினார்.

தலைவர் உரைக்குப் பின் மதுரைக் கல்லூரி காரியதரிசி யக்ஞநாராயணன், மதுரைக் கல்லூரி முதல்வர் தோதாத்திரி அய்யங்கார், மதுரை வழக்கறிஞர்கள் ஸ்ரீமான்கள் சங்கர அய்யர், எஸ். இராமசாமி அய்யங்கார், இவ்வட்டார சட்டசபை உறுப்பினர் ஸ்ரீ ரா. கிருஷ்ணசாமி நாயுடு முதலியவர்களும் பள்ளிக் காரியதரிசி ஸ்ரீனிவாசாச்சாரியாரும் டாக்டர் கிருஷ்ணனின் அரிய பண்புகளையும், அவர் வாழ்க்கையின் சில நிகழ்ச்சிகளையும் பற்றிப் பேசினார்கள்.

✿

ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத் பாதாள் 1950-ம் ஆண்டு "திருப்பாவை திருவெம்பாவை" விழாவைப் பிரகடனப் படுத்தினார்கள். அன்று தொட்டுத் தமிழ் நாட்டில் எங்கு பார்த்தாலும் மார்கழி பிறந்ததும் திருப்பாவை திருவெம்பாவை திருவிழாக்கள் தான். ஆனால் இந்த ஆண்டில் ஓர் அதிசயம்! ஆண்டாள் அரங்கேறி, திருப்பாவை பாடி, நடித்து விட்டாள். "சங்கத் தமிழ்" என்று ஆண்டாள் திருப்பாவையைப் பற்றிக் கூறியிருக்கிறாள். இதுவரை இசையிலும் இயலிலும் தான் திருப்பாவையின் அருமையை உணர்ந்தோம். ஆனால் அது நாடகத் தமிழ் என்றும் கலை வளர் தஞ்சை எடுத்துக் காட்டி விட்டது.

தியாகப் பிரும்மசபையின் ஆதரவில், மிகவும் கோலாகலத்துடன் ஆண்டாள், மாணிக்கவாசகர் உயிர் ஓவியங்களுக்கு முன், சென்ற 4-1-59 ஞாயிற்றுக்கிழமை குமரகான சபா ஹாலில் திருப்பாவை - திருவெம்பாவை திருவிழா கொண்டாடப்பட்டது. அப்பொழுது காலையில் தஞ்சை பிரபல வக்கீல் பாலசுப்பிரமணிய அய்யர் தலைமை தாங்கினார். டெபுடி கலெக்டர் ஸ்ரீ ராமசந்திரபத்தர் திருப்பாவை திருவெம்பாவை பற்றியும், பண்டித திரு என். எஸ். தாத்தாச்சாரியார், திருப்பாவை கூத்து பற்றியும் பேசினார்கள். மாலையில் இராமநாதன் செட்டியார் ஹாலில் ஆண்டாள்-திருப்பாவை நாடகம் சிறப்பாக நடந்தது.

✿

கீழப்பூங்குடியில் திருப்பாவை திருவெம்பாவை விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

நால்வர் படம், பாவை நூற்கள் ஊர்வலத்துக்குப் பின் திரு கண்ணப்ப ஐயா மடத்தில் கண்டிரமாணிக்கம் வித்துவான் திரு நா. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கூட்டம் நிகழ்ந்தது. தலைவர், திருப்பாவையைப் பற்றியும் சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் அ. மணிவாசகன் அவர்கள் திருவெம்பாவையைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர். திரு ஆ. க. சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

ஊர்வலத்தில் திரு முத்து நாதசுரக் குழுவும் திரு ஞானப்பிரகாச தேசிகர் பாவைப் பாடல் குழுவும் கலந்து கொண்டன.

✿

செம்பூர்வாழ் தமிழர்களின் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்க ஸ்தாபனம் அருகில் இல்லாத குறையைப் போக்க, "பம்பாய்த் தமிழ் மன்றம்" என்னும் இலக்கிய ஸ்தாபனம் சமீபத்தில் செம்பூரில் நிறுவப்பட்டுள்ளது.

முக்கலைகளாகிய இயல், இசை, நாடகம் இவைகளைப் பேணி வளர்ப்பது, தமிழில் ஆராய்ச்சி செய்தல், நூல்நிலையம் ஏற்படுத்துதல், வாராந்திரக் கூட்டங்கள் நடத்துதல், மற்றும் தமிழகத்திலிருந்து வரும் அறிஞர்களைக் கௌரவித்தல்—இவை மன்றத்தின் நோக்கங்களாகும்.

திரு எஸ். வி. லட்சுமண அய்யர், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.




மேட்டூர் சந்தன சோப்பின் மென்மையை விவரிப்பதே கடினம்!



அபூர்வ மிருதுத்தன்மையும் பரிசுத்த மேனியும் நுட்பமான இனிய சந்தன மணங் கமழும் ஓர் நிலை...நீங்கள் கேட்ட மாத்திரத்திலேயே கிடைக்கும்! ஆனால், கேட்பதை மட்டும் **மேட்டூர் சந்தன சோப்** என்று குறிப்பிட்டுக் கேளுங்கள்!

மேட்டூர் சந்தன சோப்பில் மனோஹரமான சந்தன மணம் நுட்பமான முறையில் சேர்க்கப்பட்டுள்ளது.



மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்

மேட்டூர் அணை R.S. :: சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

MC-602.

அத்தியாயம் 25


எதையும் இழக்கும் இயல்பு

இரவு ஒன்பது; பத்து நாழிகை இருக்கும். மூன்சிறை அறக்கோட்டத்தின் முன் வாயிற் கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன. அறக்கோட்டத்து வேலைகளை முடித்துக் கொண்டு ஓய்வாக அமர்ந்து உரையாடலில் ஈடுபட்டிருந்தனர் அண்டராதித்தனும் கோதையும்.

"இன்னும் ஒரு நாள் கொற்கையில் தங்கி முத்துமாலை வாங்கிக்கொண்டு வந்திருக்கலாம். கலவரத்தைச் சாக்குக் காட்டிப் பயமுறுத்தி என்னை இழுத்துக் கொண்டு வந்து விட்டீர்கள். இப்படித் தொடர்ந்து என்னை ஏமாற்றிக் கொண்டே வருகிறீர்கள். இது கொஞ்சங்கூட உங்களுக்கு நன்றாயில்லை" என்று கோதை வம்புக்குக் கொடி கட்டிப் பறக்க விட்டாள்.

"அதுதானே கேட்டேன்! காரியத்தோடுதான் பேசவதற்கு வந்தாயா? அன்றைக்கு நாம் இருவரும் கொற்கையிலிருந்து அந்த நேரத்தில் திரும்பியிருக்கா விட்டால், அந்தக் கரவந்தபுரத்துப் பிள்ளையாண்டான் பாழ்மண்டபத்தில் அழுதுகொண்டே கிடந்து திண்டாடியிருப்பான். பாவம்! அவனுக்கு அப்படியா நேரவேண்டும்? எந்தப் பயல்களோ திருமுகத்தைப் பறித்துக் கொண்டு அடித்துப் போட்டு விட்டுப் போயிருக்கும்போது நாம் சென்றதால் அவனுக்கு உதவமுடிந்தது. கோதை! இந்த மாதிரி மற்றவர்களுக்குத் துன்பத்தைப் போக்கி உதவுவதில் கிடைக்கும் பெருமை ஒரு முத்து மாலையைக் கழுத்தில் அணிந்து கொள்வதால் கிடைக்குமா?"

"அடடா! என்ன சாமர்த்தியமான பதில்! உலகத்திலுள்ள ஆண் பிள்ளைகள் அத்தனை பேரும் எங்கெங்கோ நன்றாகப் பேசிப் பெயர் வாங்கி விடுகிறார்கள். வீட்டுப் பெண்களிடம் பேசும்போது மட்டும் இப்படி அசடு வழிந்து விடுகிறதே? 'எனக்கு முத்துமாலை வாங்கித் தருவ



தற்கு வக்கில்லை' என்று ஒப்புக் கொள்ளுங்களேன். ஏன் இப்படிப் பூசி மெழுகிப் பதில் சொல்கிறீர்கள்?''

''அம்மா, தாயே! பரதேவதை! உன் வெண்கல நாக்கைக் கொஞ்சம் அடக்கியே பேசு. மூலைக்கு மூலை படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் யாத்திரிகர்கள் விழித்துக் கொண்டு விடப் போகிறார்கள். உன்னிடம் நான் படும் பாட்டை வேறு ஆண்பிள்ளைகள் பார்த்து விட்டால் வெட்கக்கேடுதான்!''

''இந்தப் பயம் மட்டும் உங்களுக்கு இருக்கிறதே? ஒரு முத்துமாலை வாங்கிக் கொடுத்து விடுவதுதானே?''

''கோதை! உனக்கு ஒரு 'அறிவுரை' சொல்கிறேன், கேள். 'உன்னுடைய மனைவி உனக்கு அடங்கிய கற்பும் புகழும் உடையவளாய் இருந்தால் நீ உன் பகைவர்களுக்கு முன் பீடு நடை நடக்கலாம்' என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். இந்த அறிவுரையை உன்னைப் போன்ற அடங்காப்பிடாரிப் பெண்களை நினைத்துக் கொண்டுதான் அவர் கூறியிருக்கிறார்.''

''ஆகா! அறிவுரைக்கு ஒன்றுமே குறைவில்லை. உலகில் மனைவியாக வேண்டாமென்று வெறுத்து ஒதுக்கும் அளவுக்குக் கிடைக்கக் கூடிய பொருளாயிற்றே அது! உங்களுக்குப் பகைவர்களும் இல்லை. நீங்கள் அவர்கள் முன் பீடுநடை நடக்கவும் வேண்டாம்.''

''நீ இப்படி முரண்டு பிடித்தால் கூறுமற் சந்நியாசம் கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை!''

''சந்நியாசம் கொள்கிற ஆளைப் பார். ஒரு பானை புளிக் குழம்பும், புளித்த தயிரும், பழைய சோறும் படுகிற பாட்டில் சந்நியாசமாம், சந்நியாசம்!''

''ஐயோ! மானம் போகிறதடி...... மெல்லப் பேசேன்.''

இந்த வேடிக்கைத் தம்பதிகள் இப்படி இரசமாகப் பேசிக் கொண்டிருக்கிற கட்டத்தில் அறக்கோட்டத்தின் வாயிற் கதவு பலமாகத் தட்டப் பட்டது. இருவரும் எழுந்திருந்து போய்க் கதவைத் திறந்தார்கள். அந்த அகாலத்தில் இருளில் வாயிலில் நின்று கொண்டிருந்தவர்களைப் பார்த்ததுமே அவர்கள் திகைப்பின் எல்லையை அடைந்தனர்.

மகாராணி வானவன்மாதேவியாரும், மற்றொரு பெண்ணும் வாயிலில் நின்று கொண்டிருந்தனர். பல்லக்கை இறக்கி விட்டு ஒய்ந்து போய் நிற்கும் நாலு போகிகளையும் (பல்லக்குத் தூக்கிப் போவோர்) அண்டராதித்தனும், கோதையும் கண்டனர்.

''தேவி! வர வேண்டும், வரவேண்டும். இந்த நேரத்தில் எதிர்பாராதவிதமாகத் தாங்கள் வந்தருளியது அறக்கோட்டத்துக்கே பெருமை'' என்று பரபரப்படைந்து கூறினான் அண்டராதித்தன். கோதை ஒன்றும் பேசத் தோன்றாமல் பயபக்தியோடு மகாராணியைக் கைகூப்பி வணங்கினாள். அவசரம் அவசர



மாக உள்ளே ஓடிப் போய் கைவிளக்கைப் பொருத்தி ஏற்றிக் கொண்டு வந்தா அண்டராதித்தன். அவ

விளக்கைமுன்னால்பிடித்துக்கொண்டு, மகாராணியையும் வண்ணமகளையும் உள்ளே அழைத்துச் சென்றான்.

கோதை ஓடிப் போய் மகாராணி அமர்வதற்கேற்ற ஆசனம் ஒன்றைத் தேடி எடுத்துக் கொண்டு வந்து போட்டாள். மகாராணி அமர்ந்து கொண்டார். அண்டராதித்தன் மகாராணி என்ன கூறப் போகிறார் என்பதைக் கேட்பதற்குச் சித்தமாகக் கைகட்டி வாய் பொத்திப் பவ்யமாக அருகில் நின்றான். புவன மோகினி தரையில் மகாராணிக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள். மருண்ட பார்வையோடு கோதை அண்டராதித்தனின் முதுகுக்குப் பின்னால்அடக்க ஒடுக்கமாகத் தோற்ற மளித்தாள். அவளுடைய கலகலப்பான சுபாவத்துக்கும், குறுகுறுப்பான பேச்சுக்கும் முற்றிலும் மாறாக இருந்தது. அவள் செயற்கையாக வருவித்துக்கொண்ட அந்த அடக்கம்.



“என்ன, ஐயா; அறக்கோட்டத்து மணியக்காரரே! பசியோடு உங்கள் அறக்கோட்டத்தைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறோம். எங்கள் வயிற்றை நிரப்புவதற்கு ஏதாவது வைத்திருக்கிறீரா?”

மகாராணி விளையாட்டுக்காகக் கேட்கிறார் என்று நினைத்துக் கொண்டான் அண்டராதித்தன்.

“தேவி! தாங்கள் உத்தரவிட்டால் இப்போதே அறுசுவை உண்டி தயாரித்து அளிக்கிறோம்.”

“தயாரிக்கவும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். இந்த வேளையல்லாத வேளையில் உன்னையும் உன் மனைவியையும் சிரமப்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை. கைவசம் என்ன உணவு இருந்தாலும் அது போதும்!”

“கைவசம் ஒன்றும் வகையாக இல்லை. ஒருகொடியில் அட்டிற்சாலை

யில் மடைப்பரிசாரகம் புரியும் பணிப் பெண்களை எழுப்பி வந்து அடுப்பு மூட்டச் சொல்லி விடுகிறேன்."

"அடுப்பு மூட்டச் சொல்வது இருக்கட்டும். கையில் என்ன உணவு இருந்தாலும் நாங்கள் உண்ணத் தயார். வகையாக வேண்டுமென்று இப்போது நாங்கள் எதிர்பார்க்கவில்லை."

மகாராணி விளையாட்டுக்காகக் கேட்கவில்லை, உண்மையாகவே கேட்கிறாரென்று அவளுக்கு அப்போது தான் விளங்கியது.

"தேவி! நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. பொறுத்திருந்து நாங்கள் தயாரிக்கும் அறுசுவை உணவை ஏற்றுக் கொண்டுதான் போகவேண்டும். வராதவர் வந்திருக்கிறீர்கள்" என்று கோதை பணிவான குரலில் முன்னால் வந்து வேண்டினாள். அவள் குரலில் ஆவல் கிளர்ந்து ஒலித்தது.



"நான் சாப்பிட வேண்டுமென்பதற்காகக் கேட்கவில்லை, பெண்ணே! எனக்கு அது முக்கியமுமில்லை. பல்லக்குச் சுமந்து கொண்டு வந்தவர்களின் பசியை முதலில் தீர்த்துவிட வேண்டும். அப்புறம் இந்தப் பெண் காலையிலிருந்து என்னிடம் சொல்லாமல் பட்டினி கிடக்கிறாள், இவள் பசியையும் தீர்க்க வேண்டும்!"

"நீரில் இட்ட பழைய சோறும், புளிக் குழம்பும்தான் இருப்பவை. அவை இந்த நேரத்தில் வாய்க்குச் சுவையாக இருக்காது. தயவு செய்து அடிசில் ஆக்கியே அளித்துவிட அனுமதிக்க வேண்டும்" என்று கெஞ்சினாள் கோதை. மகாராணி கேட்கவில்லை. இருந்த உணவே போதும் என்றார். அண்டராதித்தன் வாயிற்புறம் போய்ப் பல்லக்குத் தூக்கிகளை அழைத்து வந்து உட்கார்த்தினான்.

கோதை சோற்றைப் பிசைந்து ஒவ்வொருவருக்கும் இலையில்கொண்டு வந்து வைத்தாள். புவனமோகினிக்குக் கூட அதையே அளித்தாள் அவள். மகாராணிக்கு மட்டும் அந்தப் பழைய சோற்றைக் கொடுக்கவில்லை. பயந்து கூசிப் பேசாமல் இருந்து விட்டாள். அரண்மனையில் முக் கனிகளும், பாலும், தேனும், கூறு செய்யும், அறுசுவை உண்டிகளும் உண்ணும் மகாராணியிடம் இலையிட்டுக் குளிர்ந்த பழைய சோற்றையும், ஆறிப்போன புளிக்குழம்பையும் எப்படிக் கொடுப்பது? புதிதாகத் தயாரிக்கவும் மகாராணி சம்மதிக்க மாட்டேனென்கிறார்.

குழந்தைகள் உண்பதைக் கருணை ததும்பி வழிந்து அகமும் புறமும் துளும்ப இருந்து காணும் தாய் போல அவர்கள் உண்பதைப் பார்த்துக் கொண்டே வீற்றிருந்தார் மகாராணி. அவர் உள்ளம் நிறைந்தது.

எல்லோரும்உண்டு எழுந்தபின் கோதை சோறு பிசைந்த உண்கலத்தில் ஒரு சிறு தேங்காயளவு பழைய சோறு மீதம் இருந்தது. மகாராணி அதைப்பார்த்தார். கோதையை அருகில் கூப்பிட்டு, "பெண்ணே! அந்தச் சோற்றை ஒரு இலையில் திரட்டி வைத்து எடுத்துக் கொண்டு வா" என்று கூறினார்.

"தேவி...அது—" ஏதோ சொல்லித் தடுக்க முயன்றாள் கோதை.

"சொன்னால் சொன்னபடி எடுத்துக் கொண்டு வா"—என்று அழுத்தமான தொனியில் மகாராணி இடையிட்டுக் கூறியதால் கோதை மறுபேச்சுப் பேச வழியில்லை. அப்படியே இலையில் திரட்டி எடுத்துக் கொண்டு வந்தாள்.

மகாராணி தின்பண்டத்துக்காகக் கை நீட்டும் ஒரு செல்லக் குழந்தையைப் போல் இரு கைகளையும் நீட்டி ஆசையோடு அந்த இலையை வாங்கிக் கொண்டார். அடுத்த கணம் அவருடைய வலக்கை விரல்கள், இடது கையில் ஏந்திக் கொள்ளப் பட்ட இலையிலிருந்து சோற்றுத்திரளை அள்ளி வாய்க்குக் கொண்டுபோயின.

பல்லக்குத் தூக்கிகள், வண்ணமகள், கோதை, அண்டராதித்தன்-அத்தனை பேருக்கும் ஒரே திகைப்பு. பிடிவாதமாக அந்தச் சோறுதான் வேண்டுமென்று மகாராணி வற்புறுத்திக் கேட்டு வாங்கிச் சாப்பிடும்போது எப்படித் தடுக்க முடியும்?

எல்லோரும் இரக்கமும், பரிதாபமும் ததும்பும் விழிகளால் இலையை ஒரு கையால் ஏந்தி மற்றொரு கையால் உண்ணும் அந்தப் பேரரசியையே

இமையாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்? பாற்சோறு உண்கிறவன் பழைய சோறு உண்கிறேனே என்றுதானே வியக்கிறீர்கள்? பாற்சோறானால் என்ன? பழைய சோறானால் என்ன? பார்த்தால் இரண்டும் ஒரே நிறந் தான்"—சிரித்துக் கொண்டே அவர்களுக்குச் சொன்னார் மகாராணி.

"எதையும் இழக்கத் துணிகிற மனம் வேண்டும்"-என்று காந்தளூர் மணியம்பலத்தில் மகாராணி தனக்குத் தானே சொல்லிக் கொண்ட வாக்கியம் புவனமோகினிக்கு இப்போது நினைவு வந்தது.

சிறிது நேரம் அறக்கோட்டத்தில் இருந்து விட்டு, இரவே பயணத்தை மீண்டும் தொடங்கி அரண்மனைக்குப் போய் விட்டார்கள் அவர்கள்.

அத்தியாயம் 26

சதி உருவாகிறது!

கொடும்பாளூர் அரச மாளிகையின் ஒரு புறத்தே தனியாக அமர்ந்து, பல செய்திகளையும் பேசியபின் வட திசையரசர்கள் வாளை உருவி நீட்டிச் சூளுரை செய்து கொண்டிருந்த சமயத்தில் அந்த வீரன் வந்து அப்படிக் கூறியது பரபரப்பை உண்டாக்கி விட்டது.

"அரசே! அவசரமாக ஒரு ஒற்றன் தேடிக் கொண்டு வந்திருக்கிறான். அவனை இங்கே அனுப்பலாமா?"—என்று சோழனிடம் மட்டும் தான் கேட்டுத் தெரிந்து கொண்டு போக வந்தான் அவன். கொடும்பாளூர் மன்னன் தன் வாள் நுனியால் அடித்துத் தள்ளிய வண்டு வந்தவன் முகத்திலே போய் விழுந்ததனால் அவன் 'என்னவோ: ஏதோ' என்று எண்ணி ஒரு கணம் பொறி கலங்கிப் போய் விட்டான்.

"ஒற்றன் எங்கிருந்து வந்திருக்கிறானாம்?"—என்று சோழன் கேட்ட கேள்விக்குத் தன்னைச் சமாளித்துக் கொண்டு மறுமொழி சொல்லச் சிறிது நேரம் பிடித்தது அவனுக்கு.

"அந்த ஒற்றனை இங்கேயே அனுப்பிவை"-என்று வந்தவனுக்குக் கூறி அனுப்பினான் சோழன். ஒற்றன் கொண்டு வரும் செய்தி என்னவாக இருக்குமோ என்ற பரபரப்பு ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டது. ஒவ்வொருவருடைய கண்களும் தங்கள் முகத்தைத் தவிர மற்ற நான்கு பேருடைய முகங்களையும் பார்ப்பதில் ஆவல் காட்டின. எல்லோரும் எல்லோரையும் பார்த்து விட முயல்கின்ற அந்த நிலை ஒருவர் மனத்தையும், உணர்ச்சியையும், அறிய முற்படுவதில் மற்றவருக்கு எவ்வளவு துடிப்பு இருக்கிறது என்பதைக் காட்டியது. அந்தத் துடிப்பின் வேகத்துக்கு உச்ச நிலை உண்டாக்குகிறவனைப் போல் ஒற்றன் அவர்களுக்கு முன்னால் வந்து பணிவாக வணங்கிய படியே நின்றான்.

இப்போது எல்லோர் கண்களும் ஒற்றன் முகத்தை ஊடுருவின. சோழன் உரிமையையும், அதிகாரம் செய்யும் ஆற்றலையும் காட்டும் பாவனையில், "என்ன செய்தி கொண்டு வந்தாய்? விரைவில் சொல். எங்கள் ஆவலை வளர்க்காதே"— என்று ஒற்றனை அதட்டினான். நடுங்கும் குரலில் ஒற்றன் கூறத்தொடங்கினான்:

"வேந்தர் வேந்தே! தென்பாண்டி நாட்டின் வடக்கு எல்லைப் பகுதிகளில் முன்பு போல் இப்போது எங்களால் கலவரமும், குழப்பமும் செய்ய முடியவில்லை. சுரவந்புரத்து வீரர்கள் எல்லைப்புறப் பகுதிகளில் விழிப்புடன் காத்து நிற்கிறார்கள். முத்துக் குளிக்கும் துறையைச் சுற்றித் தேவையான படை வீரர்களைக்காவல் வைத்துக் கொண்டு, முத்துக் குளிப்பைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். 'நாம் படையெடுக்கப் போகிறோம்'— என்ற செய்தியைப் பரவ விட்டபோது தொடக்கத்தில் அங்கே யிருந்த பரபரப்பு இப்போது இல்லை. மகாமண்டலேசுவரரான இடையாற்று மங்கலம் நம்பி அரண்மனையிலே வந்து தங்கியிருந்து எல்லாக் காரியங்களையும் தம்முடைய நேரடி மேற்பார்வையில் செய்கின்றாராம். போர்நேரிட்டால் ஈழ நாட்டுப் படைகளும், சேரநாட்டுப் படைகளும் தென்பாண்டி நாட்டுக்கு உதவியாக வந்து சேர்ந்து கொள்ளலாமென்று ஒரு தகவல் காதில் விழுகிறது. இதோ அந்தச் செய்திக்கு ஆதாரமாக ஒரு ஓலையும் கைப்பற்றினோம்..."—என்று சொல்லிக் கொண்டே தான் கொணர்ந்திருந்த ஓலையை எடுத்துக் கொடுத்தான், ஒற்றன்.



சமீபகாலம் வரை பம்பாய் கிராமத் தொழில் போர்டு காரியதரிசியாகப் பணியாற்றி வந்த ஸ்ரீ வைகுண்டம் கிடாம்பி ஸ்ரீ எஸ். எஸ். ராஜ கோபாலாச்சாரியாருக்கு 6-1-59ல் ஷஷ்டி அப்த பூர்த்தி பம்பாயில் சிறப்பாக நடந்தேறியது.

சோழன் அதை வாங்கி விரித்தான். மற்ற நால்வரும் ஓடி வந்து அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்தத் திருமுகவோலை இடையாற்று மங்கலம் நம்பியால் கரவந்தபுரத்துச் சிற்றரசனுக்கு அனுப்பப்பட்டதாகும். மிக மிக முக்கியமான இரகசிய ஓலை என்பதைக் காட்டும் அரசாங்க இலச்சினைகளெல்லாம் அதில் இருந்தன. "வடதிசையரசர் படையெடுப்பு நேர்ந்தாலும் அதை நினைத்து அதிகம் கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லையென்றும் ஈழப் பெரும்படையும், மலைநாட்டுச் சேரர் படையும் தங்களுக்கு உதவி புரியுமென்றும்"—மகாமண்டலேசுவரர் கரவந்தபுரத்துப் பெரும்பெயர்ச் சாத்தனுக்குப் பரம இரகசியமாக எழுதியிருந்தார் அந்த ஓலையை.

"கரவந்தபுரத்துத் தூதனிடமிருந்து கைப்பற்றியதென்று முன்பே ஒரு செய்தித் திருமுகத்தை நம் ஆட்கள் அனுப்பியிருந்தார்கள். அதில் கண்ட செய்திகளுக்கும், இதில் காணும் செய்திகளுக்கும் முழு அளவில் முரண்பாடு இருக்கிறதே? நாம் படையெடுக்கப் போகிறோமென்ற செய்தியைக் கேட்டு அவர்கள் பீதியும் பரபரப்பும் அடைந்திருப்பதை அந்த ஓலையிலிருந்து அனுமானித்தோம். ஆனால் இப்போது கிடைத்திருக்கும் இந்த ஓலையிலோ போரைப் பற்றியே கவலைப்படாமல் பாராமுகமாக இருப்பது போலத் தெரிகிறது. இதன் மர்மம் என்னவாக இருக்கும்?"—

சோழகோப்பரகேசரி பராந்தகன் அந்த ஓலையைப் படித்துவிட்டு, முகத்தில் சிந்தனைக் குறியுடன் மற்றவர்களைப் பார்த்து இப்படிக் கேட்டான்:

"எனக்கு ஒரு சந்தேகம்: இவ்வளவு அந்தரங்கமான அரசாங்கச் செய்தி அடங்கிய திருமுகத்தை நம் ஒற்றர் கையில்சிக்கி விடுகிறஅளவு சாதாரணமான முறையில் மகாமண்டலேசுவரர் எப்படிக்கொடுத்து அனுப்பினார்? நாம் சிந்திக்கவேண்டிய இடம் இதுதான்!" என்று கொடும்பாளூரான் தன் சந்தேகத்தைத் தெரிவித்தான். உடனே ஒற்றன் குறுக்கிட்டுப் பதில் சொன்னான்:- "அரசே! முன்பு கைப்பற்றிய திருமுகத்தையாவது அதிகம் சிரமப்பட்டு அந்தத் தூதனைப் பாழ் மண்டபத்து இருளில் நடுக் காட்டில் அடித்துப் போட்டு விட்டுக் கைப்பற்றினோம். ஆனால் இரண்டாவது திருமுகத்தைக் கொண்டு வந்த தூதன் சரியான பயந்தான்கொள்ளிப் பயல் போலிருக்கிறது. நடுவழியில் நாங்கள் அவனுடைய குதிரையை மறித்துக் கொண்டதுமே, "ஐயோ! என்னை விட்டு விடுங்கள். ஒன்றும் செய்யாதீர்கள். நான் என்னிடம் இருக்கும் அரசாங்க ஓலையைக் கொடுத்து விடுகிறேன்." என்று அவனாகவே ஓலையை எடுத்துக் கொடுத்து விட்டு ஓடிப் போய் விட்டான்."-

"யார் யார் சேர்ந்து கொண்டு அவனை வழி மறித்தீர்கள்? எந்த இடத்தில் . வழிமறித்தீர்கள்?"-கொடும்பாளூரான் அந்த ஒற்றனைக் குறுக்குக் கேள்வி கேட்டு மடக்கினான்.

"கரவந்தபுரத்துக்கும் அரண்மனைக்கும் செய்தித் தொடர்பு தொடங்கிய நாளிலிருந்து நம் ஆட்களாகிய செம்பியன், இரும்பொறை, முத்தரையன் ஆகியோரும், நானும், கரவந்தபுரம், கோற்கை ஆகிய பகுதிகளிலும் இவற்றுக்கு நடுவழியிலுள்ள வனாந்தரப் பிரதேசங்களிலும் ஓயாமல் சுற்றிக் கொண்டே இருக்கிறோம். தெற்கேயிருந்த கரவந்தபுரத்துக்கு வரும்வழியில்மேற்குமலைச்சரிவிலுள்ள காடுகள்தான் நம் திட்டங்களை மறைந்திருந்து செய்ய ஏற்ற இடமென்று தீர்மானித்துக் கொண்டு பெரும் பகுதி நேரம் அங்கேயே இருக்கிறோம். நம்முடைய மற்ற ஆட்கள் பொதிய மலைப் பகுதிகளிலும் பொருநை நதிக் கரையோரங்களிலுள்ள சிற்றூர்களிலும் தனித்தனிக் குழுவாகப் பிரிந்து மறைந்திருக்கிறார்கள்."

"போதும்! நீ போய் வெளியே இரு. நாங்கள் மறுபடியும் கூப்பிட்டு அனுப்பினால் மட்டும் உள்ளே வா."

சோழனுடைய குரல் கடுமையாகவும், கண்டிப்பாகவும் இருந்தது. அந்த ஒற்றன் வணங்கி விட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றான். அவர்கள் ஐந்து பேரும் தனிமையில் மறுபடியும் ஒன்றுபட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தார்கள். சற்றுமுன் வீராவேசமாக வாட்களை உருவி உயர்த்திச் சபதமும், உடன்படிக்கையும் செய்து கொண்டபோது இருந்த விருப்பு இப்போது அவர்களிடம் இல்லை. சோழன் கேட்டான்: "கொடும்பாளூர் மன்னரே! உங்களுக்கு என்ன தோன்றுகிறது? இலங்கை மன்னனும், சேரனும் அவர்களுக்குப் படை உதவி செய்வார்களென்று நம்புகிறீர்களா?"

"நம்பாமல் எப்படி இருக்க முடியும்? குமார பாண்டியனுக்குச் சேரன் தாய்வழிப் பாட்டன் முறையினன். ஈழ நாட்டுக் காசிபன் குமாரபாண்டியனைத் தன் உயிரினும் இனிய நண்பனாகக் கருதி வருகிறான். இராசசிம்மனுக்கும், காசிப மன்னனுக்கும் இந்தக் கெழுதகைமை நட்பு எப்போது, எதன் மூலம் ஏற்பட்டதென்றே தெரியவில்லை. தென்பாண்டி நாட்டு அரசியல் சூழ்நிலைகளில் துன்பங்களும், தோல்விகளும் ஏற்படும் போதெல்லாம் இராசசிம்மனைத் தன்னிடம் வரவழைத்து இருக்கச் செய்து கொள்கிறான் ஈழ நாட்டு மன்னன். ஈழ மண்டலப் பெரும் படையின் தலைவனாகிய சக்கசேனாபதி ஒரு பழம் புலி. கடற்போரிலும், தரைப்போரிலும் பலமுறை வெற்றி பெற்ற அனுபவமுள்ளவன். ஆகவே இவர்கள் எல்லோரும் ஒன்றுசேருவதாயிருந்தால் அந்த ஒற்றுமையின் விளைவைப் பற்றி நாம் சிந்தித்தே ஆக வேண்டியிருக்கிறது"—என்று மற்ற நான்கு பேர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே சொன்னான் கொடும்பாளூர் மன்னன்.

"இந்த ஒற்றுமையே ஏற்பட முடியாதபடி இதைத் தகர்ப்பதற்கு நாம் முயற்சி செய்தால் என்ன?"—அரசுருடையானின் கேள்வி இது.

"நமக்குள் நம் நன்மைக்காக ஒற்றுமை இருக்க வேண்டுமென்று நினைக்கிற ஒவ்வொரு கூட்டமும், ஒவ்வொரு இனமும், அடுத்தவர்கள் அப்படி ஒற்றுமையாக இருக்க விடாமல் செய்யவே முயல்கிறது. வடக்கே நமக்குள் பெருங் கூட்டணி ஒன்று அமைத்து நாம் உடன்படிக்கை செய்து கொள்கிறமாதிரித் தெற்கேயும் செய்ய நினைப்பார்கள்." (தொடரும்)

படித்துப் பாருங்கள்

வள்ளுவர் தந்த இன்பம்

திருக்குறளின் எந்தப் பகுதியானாலும், அதற்கு எத்தனை பேர்கள் உரை எழுதினாலும் அதில் ஒரு புதிய கருத்து நயம் பிறந்து கொண்டேதான் இருக்கிறது. அறத்துப் பால், பொருட்பால், இரண்டிலும் சிந்தனையாற்றல் மிகுந்த அறிஞர் திருவள்ளுவரைப் பார்க்கிறோம். காமத்துப் பாலிலோ வள்ளுவரே ஒரு கவிஞராக மாறி விடுகிறார்.

'வள்ளுவர் தந்த இன்பம்' என்னும் இந்த நூலில் காமத்துப்பாலின் இருபத்தைந்து அதிகாரங்களையும் சுவைபட விளக்கியிருக்கிறார் செட்டிநாட்டுத் தமிழறிஞர் ராய. சொ. தேவையான இடங்களில் கம்பராமாயணம், சிலப்பதிகாரம், கலிங்கத்துப் பரணிபோன்ற பிறஇலக்கிய மேற்கோள்களும் காட்டப்பட்டிருக்கின்றன. தெளிந்த மரபை யொட்டிய தமிழ் நடை நூலுக்கு அணி செய்கிறது. ஒவ்வொரு அதிகாரமும் ஒரு தனிக் கட்டுரை போல் அழகாக எழுதப்பட்டிருக்கிறது. எழுதியவர்: ராய. சொக்கலிங்கன்; பிரசுரம்: வள்ளுவர் பண்ணை, பிராட்வே, சென்னை-1 விலை: ரு 2-50.

வான்வழி வையை

பரிபாடல் என்பது சங்கம் மருவிய எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. அந்நூல் முழுதும் இப்போது கிடைக்கவில்லை. கிடைத்த பகுதியை டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் முதலில் அச்சிட்டு வெளியிட்டார்கள். அந்த நூலில் முருகக் கடவுளைப் பற்றியும், மதுரையைப் பற்றியும் வையை நதியைப் பற்றியும் பாடல்கள் இருக்கின்றன. அவற்றில் வையை நதியைப் பற்றிய பாடல்களை ஆராய்ந்து இந்நூலாசிரியர் மலயா வானொலியில் ஆற்றிய சொற்பொழிவுகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. பரிபாடல் நயத்தை விளக்கி ஆராயும் ஆறு அருமையான கட்டுரைகளை இதனுள் காண்கிறோம். எழுதியவர்: முத்துராசாக்கண்ணனார் எம்.ஏ., பிரசுரம்: வள்ளுவர் பண்ணை, பிராட்வே, சென்னை-1; விலை : 2-00.

சகோதர பாசம்:

நூற்றுநாலு பக்கங்களைக் கொண்ட இந்தச் சிறுநாவல் சர்வசாதாரணமான குடும்பச் சூழ்நிலைகளை அழகுறச் சித்திரிக்க முயன்றிருக்கிறது. குடும்பச் சூழ்நிலைகளும், அது காரணமாக விளையும் குழப்பங்களுமே நாவலுக்கு மூலவித்து. தத்தாத்திரேயர், விசாலம், நீலகண்டன், ராஜம், மார்க்கன் என்று கதையில் வரும் பாத்திரங்களில் யாருமே மனத்தில் தங்கவில்லை. ஆனாலும் பொழுதுபோக்காகப் படித்துப் பார்ப்பதற்குச் சுவையான நாவல். வெளிப்படையான—மர்மச் சுழிப்புக்களில்லாத கதை. சரளமான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

எழுதியவர் த.கா. சேனாபதி; அல்லயன்ஸ் கம்பெனி. சென்னை-4 விலை ரு. 1—40.

ஒருபிடி சோறு

நாச்மிக நோக்கத்தோடு பார்த்தால், எதையும், ஒளிவுமறைவின்றிச் சொல்லி உலகத்தைத்திருத்துவதுதான் இலக்கியம். ஆனால் எதிர் மறையான குணங்களைக் கொண்டுதான் கதைகளுக்கு வலுத் தேட வேண்டுமென்பதில்லை. மறைந்துச் சொல்ல வேண்டிய சில இடங்களைச் சொற்களை அடிக்கடி எழுதினால் மட்டும் தனித்தன்மை வந்து விடும் என்று சொல்வதற்கில்லை. அது இல்லாமலும் இவரிடம் தனித்தன்மை இருக்க முடியும். ஆசிரியர் ஜெயகாந்தனிடம் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும் அழகிய பார்வையும், கவிதைத் துடிப்புள்ள சொல்லோட்டமும் நன்றாக அமைந்துள்ளன. 'ஒரு பிடி சோறு' என்

னும் இந்தச் சிறுகதைத் தொகுதியில் பதினெரு கதைகள் இருக்கின்றன. தி. ஜ. ர. முன்னுரை எழுதியிருக்கிறார்.

'அச்சாபீஸில் யார் யாருக்கெல்லாமோ கல்யாணப் பத்திரிகை அடித்துக் கொடுக்கும் கலியாணமாகாத 'டிரெடில்மேன்' எவரோ ஒருவருடைய கல்யாணப் பத்திரிகையில் மாப்பிள்ளையின் ஸ்தானத்தில் தன் பெயரைக் 'கம்போஸ்' செய்து திருட்டுத் திருப்தி அடைவதையும், முடிவில் 'ஹெரன்யா' வந்து அவனுக்குக் கல்யாணமே ஆகாமற் போவதையும் சித்திரிக்கும் 'டிரெடில்'— என்னும் சிறுகதை மறக்க முடியாதது. ஆழமான உணர்ச்சியுள்ளது. 'ரிக்ஷாக்காரன் பாஷை' என்ற கதையில் நல்ல 'குத்தல்' இருக்கிறது. மவுண்ட் ரோடு மைக்கேல் ('எது எப்போது'-என்ற கதையில்) மூலமாக வயிற்றுப் பசிக்கு அப்பால்தான் 'மதப் பிரசாரம்' என்று குத்திக் காட்டுகிறார். ஆசிரியரின் எல்லாக் கதைகளுமே படிக்க வேண்டியவை. வாழ்க்கை உணர்ச்சிகளின் பலவித இராகத் தொனிகளில் ஏழைமை, நம்பிக்கை வறட்சி முதலிய துன்பங்களே ஜெயகாந்தனுடைய கதைகளில் ஒலிக்கின்றன. மற்ற ஒலிகளும் ஒலிக்கலாமே! சில இடங்களில் சொல்லடுக்கு அற்புதமாக இருக்கிறது. சில இடங்களில் அதுவே கதைக்குத் தடை போடுகிறது.

என்றாலும், விரும்பிப் படிக்க ஏற்ற ஒரு தனித் தன்மையை, உண்மையின் குரல்களை, இந்தக் கதைகளின் மூலத் தொனியில் கேட்கிறோம்.

எழுதியவர்: ஜெயகாந்தன். பிரசுரம்: புத்தகப் பூங்கா. 29. ஹாரிங்டன் சாலை, சென்னை—30. விலை ரூ. 2-50.

கவியின் மகள்

நாடகமாக எழுதப்பட்டிருக்கும் இந்தச் சரித்திரக் கதை பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதென்பதை ஆசிரியரே முன்னுரையில் சொல்லியிருக்கிறார். சுந்தரபாண்டியன், பரகேசரி என்று நல்ல சரித்திரப் பெயர்களைத் தேடிக் கொடுத்திருக்கிறார். இலக்கண வழுவில்லாத உரை நடையில் உரையாடல்களை அழகாக அமைத்திருக்கிறார்.

பதினேழு காட்சிகள் உள்ள இந்த நாடகத்தைப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் மேடைநாடகமாக நடிக்கலாம். அதற்கேற்ற அழகான கதை இது. சில இடங்களில் பாத்திரங்களின் பேச்சு நீளமாகவும் செயற்கைக் கருத்தோட்டத்துடனும் இருக்கிறது. அங்கெல்லாம் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். மற்றப்படி நல்ல நாடகம். எழுதியவர்: தே. வீரராகவன். அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4; விலை: 75 காசு.

World Teachers on Education

கோவையில் திரு டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியாரால் 1930ல் ஆரம்பிக்கப்பட்டு இப்போது 1100 மாணுக்கர்களுடனும், ஆறு ஹாஸ்டல்களுடனும் பல பிரிவுகளைக் கொண்ட ஆதாரக் கல்வி போதனை முறைப் பள்ளிகளுடனும் விரிவாகப் பெருகி வளர்ந்து விட்ட ராமகிருஷ்ண வித்தியாலயத்தின் வெள்ளிவிழா வெளியீடு இப் புத்தகம். வெள்ளி விழா 1955 ல் நடந்து விட்டது. இது சம்பந்தப்பட்ட வெளியீடு மூன்று வருஷங்களுக்குப் பிறகு வருகிறது. இதனால்தானோ என்னமோ இந்த விழாவைப் பற்றியும் ஸ்தாபனத்தைப் பற்றியும் விரிவாக அதிகம் சொல்லப்படவில்லை. ஆனால் உலகப் பெரியார்களும் அறிஞர்களும் சொல்லிய சிந்தனை மிகுந்த கருத்துக் கொத்துகளிலிருந்து கல்வி சம்பந்தமாகப் பல மலர்களைப் பறித்துத் தொகுத்துக் கொடுக்கிறது இந் நூல். உபநிடதம், பகவத்கீதை, புத்தர் வாக்குகள், திருக்குறள் வாசகங்கள், ஏசுநாதர் பொன் மொழிகள், ராமகிருஷ்ணர், சாரதாமணி தேவியார், விவேகானந்தர், காந்திஜி அருளிய நன்மொழிகள், பல பொக்கிஷங்களிலிருந்து மணிவாசகங்கள் பொறுக்கப்பட்டு வகைப்படுத்தி இந் நூலில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தொகுப்பாளர்கள்: டி. எஸ். அவினாசிலிங்கமும் கே. ஸ்வாமிநாதனும். கிடைக்குமிடம்: பி. ஜீ. பால் அண்டு கம்பெனி, சென்னை 1. விலை ரூபாய் 4.

திருச்சி உலகநாதன்

4. உச்சிப் பிள்ளையார் உருட்டிவிட்டார்!

உலகநாதன் அந்தப் பெரியவர் கூறிய 'நாஷ்டா' என்ற வார்த்தையைக் கேட்டுத் திகைத்தான் அல்லவா? அந்த வார்த்தையின் பொருள் அவனுக்கு விளங்கவில்லை. அவன் காலையில் சாப்பிடவில்லை யென்பது உண்மை. அவர் கேட்ட வார்த்தையின் பொருளும் அதுதான்.

"நான் கூலிக்காரன் இல்லை, சார்! பசிக்கிறது. பாழ்வயிற்றுக்காக இதுதான் முதல் சுமை" என்றான்.

பையன் உச்சரித்துள்ள வார்த்தைகள், அவர் மனசிலே இலேசத்தை உண்டுபண்ணின. உண்மையாகவே பயல் கூலிக்காரன் இல்லை, வீட்டில் கோபித்துக் கொண்டு ஓடிவந்தவன் என்று அவர் முடிவு கட்டினார். மிச்சம் பிடிக்க எண்ணியதை விட அதிகமான கூலி அவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்.

படுக்கையைக் கொண்டு வந்து ஓட்டல் அறையின் முன்னே வைத்தான் உலகநாதன். மீண்டும் சுமை எடுத்து மாடிக்குப் போக வேண்டும். படிகள் ஏறும்போது அவன் பட்ட பாடு? பெரிய கஷ்டமாக இருந்தது.

மாடி அறைக்குள் படுக்கையைக் கொண்டு வந்து வைத்ததும் பையனை ஏற இறங்கப் பார்த்தார் அந்தப் பெரியவர். அவர் பார்வையில் குறும்புத்தனம் இருந்தது. உலகநாதனுக்கு வெட்கம் வந்தது. அவர் சிரிக்க, இவன் சிரிக்க இருவர் கண்களும் ஒரு கணம் சந்தித்தன. அவர் அவனுக்குப் புத்திமதிகள் சொன்னார். 'ஏண்டா! இந்த வயசிலேயே கெட்டுப் போகிறாய்? மரியாதையாக வீட்டுக்குப் போ! பிழைக்கிற வயசும் இல்லை; அப்படிப்பட்ட பையனும் இல்லை. கெட்டுப் போகாதே. உனக்குக் கூலி எவ்வளவு வேண்டும்?" என்றார்.

சுகி

"எனக்குத்தெரியாது, சார்! நீங்களாகக் கொடுங்கள்."

இந்தச் சமயத்தில் ஓட்டல் வேலையாள் ஒருவன் வந்து, "சார்! வெந்நீர் போடணுமா? டிபன் கொண்டு வரணுமா?" என்று கேட்டான்.

"இந்தப் பையனுக்கு முதலில் டிபன் கொடுக்கச் சொல். இந்தாடா, பயலே! இரண்டணா" என்று கொடுத்தார். அவர் சிக்கனம் செய்யப் போக அதிகமாகச் செலவு செய்தார். ஆனாலும் ஒருவருடைய பசியைப் போக்குகிறோம் என்ற மகிழ்ச்சி அவருக்கு இருந்தது.

கீழே வந்தான் உலகநாதன். மேஜையில் உட்கார்ந்தான். அவனுக்கு இரண்டு இட்டிலி வந்தது, சாம்பாரில் இட்டிலி மிதந்தது. மொழுமொழுவென்று வெங்காயங்கள். அப்பால் சலவைச் சட்டினி கொண்டு வந்து போட்டார்கள். காப்பியும் கொடுத்தார்கள். 'ஆஹா! இங்கே எவ்வளவு அன்பாகக் கொடுக்கிறார்கள்?' என்று எண்ணினான் அவன். காசு கொடுத்தால் ஹோட்டலில் அன்புக்கு இடம் உண்டு. இனம் கேட்டால் உதையல்லவா கொடுப்பார்கள்? உலகநாதன் இதற்கு முன்பு ஒரு முறை ஓட்டலில் உண்டிருக்கிறான். அவனுடைய சித்தப்பா ஓட்டலுக்கு அழைத்துப் போய்ப் பட்சணங்கள் வாங்கிக் கொடுத்தது நினைவில் வந்தது. அவனுக்கு நல்ல சமாசாரங்கள் வரும்போதெல்லாம் சித்தப்பாவின் நினைவு வரும். பொல்லாத காரியங்கள் வரும்போது சித்தியின் உருவம் முளைக்கும்.

இட்டிலி, காப்பி சாப்பிட்ட பின்னர் முன்பு கொண்டு வந்து விட்ட வேலையாள் "போகலாம். அவ்வளவுதான். ரூம் என் பதினாறுக்குக் கணக்கு எழுதிக் கொள்ளுங்கள்" என்றான்.

உலகநாதன் ஒரு வேளை பசிக்குத் தானாகச் சம்பாதித்து விட்டான். உண்ட பின்னர் அவனுக்கு உலகமே அலட்சியமாகத் தோன்றியது. இனிமேல் இந்த மாதிரியே பிழைப்பு நடத்தி விடலாம்; சம்பாதிக்கமுடியும் என்ற தைரியம் பிறந்தது. தெம்பாக இருந்தது உடலுக்கு. இந்த எண்ணத்தில் மெதுவாக மலைக் கோட்டையை நோக்கி நடந்தான். அவன் பைக்குள் கூலி

யாகக் கிடைத்த இரண்டணா நாணயம் வேறு கிடந்தது.

புத்தகக் கடைகள் அவ்வளவு அதிகமாக இருப்பதை அவன் பார்க்கவில்லை. விதம் விதமான ஆணிமணிகள் இருக்கும் கடைகளைப் பார்த்தான். இவ்வளவும் வாங்கினால் என்ன விலையாகும் என்று திட்டங்கள் போட்டுப் பார்த்தான். கணக்கு அவன் சிறிய மூளைக்குப் பிடிபடவில்லை. பழக் கடைகளிலிருந்து அழுகிய நாற்றம் வந்தது; அதற்கு அடுத்த பக்கமிருந்து மஞ்சள் தாழம்பூவின் கமகமவென்ற வாசனையும் வந்தது. பன்னீர் சந்தனக் கடையிலிருந்து ஊதுபத்தியின் புகை மயக்கமூட்டிக் கொண்டிருந்தது. பூமாலைகள், செண்டுகள் வரிசை வரிசையாகக் கட்டியிருப்பதை நின்று வேடிக்கை பார்த்தான். அவன் மதவக்குறிச்சி கிராமத்துப் பிள்ளை; நகரத்து நாகரிகம் ஏதும் பாராதவன். திருச்சிக்கு வந்து மாதம் மூன்று ஆயிற்று. இன்னும் அவனைத் திருச்சிக் கடைவீதியைப் பார்க்கும்படி அவன் சித்தி விடவில்லை. இன்று அவன் பார்க்கிற பொருள்கள் அனைத்தும் வேடிக்கையாகவும், புதுமையாகவும் காட்சியளித்தன.

புஷ்பங்களின் வாசனையை நுகர்ந்துகொண்டே அடிவாரத்துப் பிள்ளையார் கோவிலை வலம் வந்தான். என்ன ஆச்சரியம்! அவனுடைய கிராமத்துப் பிள்ளையாரும் இப்படியே இருந்தார்! இதைவிடக் கொஞ்சம் மெலிவாக இருந்தார். இங்கே இவர் நகைகள் போட்டுக்கொண்டிருந்தார். வெள்ளியங்கியும், மாலைக்கு மேல் மாலையும். மக்களைப் போல் கடவுளும் பணக்காரர் என்று எண்ணினான். அடிவாரத்துக் கோவிலில் கூட்டம் இல்லை. மத்தியான நேரம். ஆனால் 'குருகுரு'வென நகர்ந்து வந்து படிகள் ஒவ்வொன்றும் அவனை மேலே மேலே அழைத்தது. தாவித் தாவிச் சிறு பிள்ளைக்குள்ள குறும்போடு ஏறினான். ஏறி நின்றதும் ஏறிய படிகளை ஒவ்வொன்றாக எண்ணினான்.

அவனுக்குள்ள ஆசை அதிகமாயிற்று. படிகள் முடிந்து, தெரு வரவே இன்னும் ஆச்சரியம் எழுந்தது. அதைவிட யானையின் உருவம் பிரும்மாண்டமாக இருந்தது. அது கட்டுக்கட்டாக காணற்புல்லை அள்ளித் தின்று கொண்டிருந்தது. தின்னும்போதும் அது ஆடி அசைந்து தின்கிறது. காது எவ்வளவு அகலம்; யாரோ பழங்கள் கொடுத்தார்கள். ஒருவர் முழுத் தேங்காயே கொடுத்தார். இன்னுஞ் சிலர் காசு கொடுத்தார்கள். யானையின் மேல் ஒருவர் குழந்தையை ஏற்றி வைக்கச் சொன்னார். அதற்கும் காசு கொடுத்தார். யானையைப் பார்க்க மட்டும் காசு கேட்கவில்லை; இதனால் உலகநாதன் திருப்தி அடைந்தான். தன் கையிலுள்ள காசைக் கொடுத்து ஒருமுறை




யானையைத் தொட்டுப் பார்ப்பதற்கு ஆசை கொண்டான்.

"டேய், தள்ளிப்போடா!" என்று பாகன் கத்தினான்,

"யானைக்கு எவ்வளவு கொடுக்கணும்?" என்று கேட்டான்.

"அரையணாவுக்குக் குறைஞ்சு யானை வாங்காது. உன்னிடம் காசு இருந்தால் கிட்டே வா. இல்லாவிட்டால் ஓடிப் போய்விடு."

"பாக்கி கொடு" என்று அவன் காசைக் கொடுத்தபோது யானையின் துதிக்கை வந்து அதை எட்டிப் பிடித்துக் கொண்டது. மறுகணம் 'கோ' வென்று கத்தி விட்டான்.



யானைப் பாகன் காசை வாங்கிக் கொண்டான். ஒன்றரையணா பாக்கியைக் கொடுக்க அருகாகக் கூப்பிட்டும் உலகநாதன் அருகில் வரவில்லை. பாகன் ஒன்றரையணாவை எறிந்தபோது எட்டி நின்றபடியே அவன் அவற்றைப் பொறுக்கிக் கொண்டான். இதற்குள்ளாக அயலூர் கோஷ்டி ஒன்று 'மலைக்குமேலே போக இன்னும் படியேறிப் போக வேண்டுமா?' என்று கேட்டுக் கொண்டு வந்தது.

பாகன் 'மேலே போங்கள்' என்று வடக்கே படிகளைச் சுட்டிக் காட்டினான்.

தான் வந்த காரியம் நினைப்பில் வந்து, படி ஏற ஆரம்பித்தான் உலகநாதன். படிகள், படிகள், ஒரே படிகள். மேலே

மேலே போய்க் கொண்டிருந்தன. நின்று ஒருமுறை எண்ணினான். யானையைப் பார்த்ததில் எண்ணிய படிகள் மறந்து போய் விட்டன. இறங்கும்போது எண்ணிக் கொள்ளலாம் என்று தீர்மானம் செய்தான். தாவி மேலே ஏறிப் போனான்.

மேலே நூற்றுக்கால் மண்டபத்தில் ஏதோ பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. மக்கள் திரளாகக் குழுமியிருந்தனர். அவ்வளவு அகலமான மண்டபம் மேலே இருப்பதைப் பார்த்தபோது அவன் அதிசயப்பட்டான். தரையில் தான் மண்டபங்களைப் பார்த்திருக்கிறான். மலைக்கு மேலே அவன் அகன்ற மண்டபங்களைப் பார்த்ததில்லை.

மீண்டும் படிகள்; படிகள். மேலே ஏறிப்போனபோது, இப்பாதை கோவிலுக்குப் பிரிகிறது என்று யாரோ சொன்னார்கள். அவன் எண்ணம் முழுவதும் மலை உச்சியிலேபோய் நிற்க வேண்டும் என்பதே. ஆகவே கோவில் பாதையை விட்டு உச்சிக்குப் போகும் பாதையைப் பிடித்தான். அங்கே நின்ற கோவில் ஆள் "காலணா போட்டால்தான் போகலாம்" என்றபோது உலகநாதன் திடுக்கிட்டான்.

தன்னிடம் காலணா இல்லாது போனால்?...படியேறி வந்தும் பார்க்க முடியாது; மலையுச்சியைப் பார்க்கவும் பணம் வேண்டும். அவனுக்கு வருத்தமே வந்தது. முழுக்க இரண்டணா எடுத்துக் கொள்ளாமல் பாக்கி கொடுத்த பாகனைப் பாராட்டினான். காலணாவை உண்டியலில் போட்டான். 'ணங்'கென்று சத்தம் கேட்டது. இன்னொரு காலணா போட்டு அதே சத்தம் கேட்க ஆசை பிறந்தது. ஆனால் காசை வீணாகப் போடுவதற்கு மனம் வரவில்லை. மிச்சமுள்ள காசைப் பத்திரமாக வைத்திருக்க ஆசைப்பட்டான். அதற்குள் இன்னொருவர் வந்து காலணாவைப் போட்டார். அந்தச் சத்தம் அவ்வளவு இனிமையாக இல்லை; பிறர் காசு அல்லவா?


மேலே உச்சிப் பிள்ளையாருக்குப் போகும் பாதையிலே கண்டாமணியின் 'கணீர் கணீர்' என்ற ஓசை எழுந்தது. மணி பன்னிரண்டு அடித்து. அதன் ஓசையைச் செவியாரத் தேக்கியும், காதை விரல் நுனியால் பொத்தியும் எடுத்தும் அனுபவித்தான். காலணா போட்டுவந்த சமயம் அதுவும் பன்னிரண்டு மணி யடித்ததே என்பதில் மெத்த மகிழ்ச்சி. அதற்குள்ளே யாரோ மணியடித்தாயிற்று. இறங்க வேண்டும் என்று கத்தினார்கள்.

'ஐயோ! உச்சிக்குப் போய்ப் பார்க்காமல் இறங்குவதா? இதற்காகவா வந்தது?' ஓடோடிப் போனான். மேலே படிகள் அவ்வளவு சரிவர 'அமையவில்லை. பாறையிலே படிபடியாகச் செதுக்கி யிருந்தார்கள். கீழே நின்ற கோவில் சிப்பந்தி, 'நேரம் ஆகிவிட்டது. இறங்குங்கள்' என்று கத்தினான். உலகநாதன் அவசரம் அவசரமாக மேலே ஓடிக் கொண்டிருந்தபோது யாரோ உரித்தெறிந்த வாழைப்பழத் தோல் படியில் கிடந்தது. அதைக் கவனிக்கவில்லை. கால் வைத்தான்

மறுகணம் ஏறிப் போன வேகத்தை விட அதிக வேகமாகக் கீழே உருளத் தொடங்கினான். மலைக்கோட்டையில் உச்சிப் பிள்ளையார் கோவில் படியிலிருந்து வட பக்கம் உருண்டால், இருநூறு அடி உயரத்திலிருந்து ஆண்டார் தெருவுக்குள் விழ வேண்டும். அவ்வளவு கிடுகிடு பள்ளம்-பாதாளம். அவன் உருண்டு கொண்டிருந்தான். மிகவும் வேகமாகத் தலைகுப்புறப் படிகளிலிருந்து பாறையில் உருண்டான். உலகநாதன் வேகமாக உருண்டு கொண்டே யிருந்தான். (தொடரும்)

ஒன்றும் தெரியாதவள்

ஸ்ரீரங்கம் நரசிம்மன்



மாதுங்கா ஸ்டேஷனில் மின்சார வண்டிக்காகக் காத்துக் கொண்டிருந்தான் செல்லப்பா. "நமஸ்தேஜி!" என்று கூறியவாறு அவனிடம் வந்தார் நேட்வர்லால். அவர் ஒரு பெரிய பணக்காரர். பம்பாயில் நான்கு கட்டிடங்களுக்குக் குறையாமல் அவருக்கு உண்டு. ஒரு கட்டிடம் என்பது மூன்று அடுக்குகள் கொண்டது. அடுக்கு ஒன்றுக்குச் சுமார் ஆறு குடித்தனங்கள்! செல்லப்பாவுக்கும் அவருக்கும் அவ்வளவு பழக்கம் கிடையாது. ஒரு சமயம் அவரை ஒரு சிறு விபத்திலிருந்து தப்புவித்தான். அது முதல் அவனைக் காணும் பொழுதெல்லாம் உபசாரத்துக்காகவாவது நாலு வார்த்தை பேசாமல் போக மாட்டார். செல்லப்பாகூட அடிக்கடி நினைத்துக் கொள்வான்: "மனுஷன் இவ்வளவெல்லாம் பேசுகிறானே; 'குடியிருக்க இடம் தருகிறேன், வா...' என்று சொல்லுகிறானா பார்!" என்று முணுமுணுப்பான். ஜாடையாகத் தான் இருக்கும் இடம் அவ்வளவு வசதியாயில்லையென்றும் வேறு இடத்தில் அறைகள் கிடைத்தால் சௌகரியமாயிருக்குமென்றும் தெரிவித்திருக்கிறான். ஆனால், நேட்வர்லால் அதைக் கவனிக்காதவர் போலவே பேசுவார். எனவே அவரைக் காணும் பொழுதெல்லாம் உள்ளூறக்குமைந்து கொண்டே பதில் அளிப்பான்.

பதிலுக்குத் தன் வணக்கத்தையும் தெரிவித்து விட்டு, "என்ன சேட்ஜீ!... என்ன விஷயம்?" என்றான்.

"உங்களுக்கு வேறிடம் கிடைத்தால் சௌகரியமாயிருக்குமென்று சொன்னீர்களில்லையா?..." என்றார்.

"ஆமாம்!"

"கொலாபாவில் இருந்தால் பரவாயில்லையா?"

"பரவாயில்லையாவாவது ..நான் வேலை செய்யும் கம்பெனியே அங்குதானே இருக்கிறது!.... இங்கிருந்து வி. டி.க்குப் போய் அங்கிருந்து பஸ்ஸில் போகும் செலவும் சிரமமும் மிச்சமாயிற்றே?...அங்கு ஏதாவது இடம் கிடைக்கும் போலிருக்கிறதா?" என்றான் செல்லப்பா சிறிது ஆர்வத்துடன். நேட்வர்லால் இலேசாக ஒரு புன்னகை செய்தார். பிறகு "நானே அங்கு ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறேன். இப்பொழுதுதான் எல்லா வேலைகளும் பூர்த்தியாயின. ....உங்களுக்கென்று ஒரு 'போர்ஷன்' ஒதுக்கி வைத்திருக்கிறேன்" என்றார்.

"வாடகை?" என்றான் செல்லப்பா.

"நீங்கள் எதுவும் தர வேண்டாம். பம்பாயில் இருக்கும்வரையில் அதை உங்கள் இடமாகவே பாவித்துக் கொள்ளலாம்!..... நாளைக்கு என்னை வந்து பாருங்கள். சாவி தருகிறேன்!" என்று கூறி நேட்வர்லால் அவன் தோளில் மெல்லத் தட்டிக் கொடுத்தார். அதற்குள் வி.டி.க்குப் போகும் மின்சார வண்டி வந்து நிற்கவே, உள்ளே நுழைவதற்குத் துளியும் இடமின்றி மனிதப் பிராணிகளால் அடைந்து கிடந்த ஏதோ ஒரு பெட்டிக்குள் செல்லப்பா எப்படியோ ஒட்டிக் கொண்டான். நேட்வர்லால்

எதிர்த் திசையில் போகும் வண்டிக்காகக் காத்திருந்தவராதலால் பிளாட்பாரத்திலேயே தங்கியிருந்து விட்டார்.

தாதர் வந்ததும் சிலர் இறங்கவே, செல்லப்பா, ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு சற்று முன்பு நேட்வர்லாலுடன் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் உண்மைதானென்று நினைத்துப் பார்க்கத் தொடங்கினான். ஒரு வாரத்துக்கு முன்பு அவனே ஒரு இடத்தைப் பார்த்து விட்டு வந்திருந்தான். இப்பொழுது இருக்கும் இடத்தை விடப் பதினைந்து ரூபாய் வாடகை அதிகம். அத்துடன் ஆயிரம் ரூபாய் 'பகிடி!' (பகிடி - பம்பாயில் வீடு பிடிப்பதற்குக் கொடுக்கப்படும் முன் பணம்.)

பகிடி கொடுத்தாவது அந்த இடத்துக்குப் போய் விடுவது என்று தான் அவன் முடிவு செய்திருந்தான். அப்படி இருந்தவனுக்கு நேட்வர்லால் கூறியது எவ்வளவு பரவசத்தைக் கொடுத்திருக்குமென்று சொல்லத் தேவையில்லை. ஏதேதோ இன்பக் கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தது அவனுடைய மனம். "மனிதர்களைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே!......மனுஷன் அன்பைக் காட்டுவதிலும் எவ்வளவு அழுத்தமாயிருந்திருக்கிறான்!" என்று நினைத்தவாறு நேட்வர்லாலுக்கு மானசிகமாகத் தன் நன்றியைச் செலுத்தினான் செல்லப்பா.

அந்த மகிழ்ச்சியில் காரியாலயத்தை அடையு முன் வழியில் சந்தித்த நாலைந்து நண்பர்களை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய ஹோட்டலுக்குச் சென்று ஒருசிறு 'பார்ட்டி'யே கொடுத்து விட்டான். அவனுக்கு ஏற்பட்டிருக்கும் அதிர்ஷ்டத்தைக் கண்டு இரண்டொரு நண்பர்கள் பொறுமைப் படாமலுமில்லை. நண்பர்களின் மத்தியில் அன்று அவன் ஒரு வெற்றி வீரனாகவே திகழ்ந்தான். "இப்பொழுது நீ இருக்கும் இடத்தை எப்படியாவது எனக்கு அமர்த்திக் கொடு, அப்பா !..." என்று போட்டி போடத் தொடங்கி விட்டனர்.

காரியாலயத்தில் தன் இடத்துக்கு வந்து அமர்ந்ததும், செல்லப்பா அன்றையத் தபால்களை எடுத்துப் பிரிக்கத் தொடங்கினான். முதலில் தனக்கு ஏதாவது இருக்கிறதாவென்று பார்த்தான்.

அதில் ஒரு கடிதம் இருந்தது. அவசரம் அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். அவனைச் சுற்றியுள்ள அவ்வளவு பொருள்களும், அந்தக் கட்டிடமும் 'விர்' என்று தட்டாமாலையாகச் சுழன்று சுழன்று வந்தன !

அந்தக் கடிதம் ஒரு மாற்றல் உத்தரவு!

அவனைச் சென்னைக் காரியாலயத்துக்குச் சென்று வேலையை ஒப்புக்கொள்ளும்படி தில்லி தலைமைக் காரியாலயத்திலிருந்து அறிவித்திருந்தார்கள்.

தன்னைச் சென்னைக்கு மாற்ற மாட்டார்களா வென்று ஒரு சமயம் அவன் ஏங்கியவன்தான். இரண்டொரு சமயம் தானாகவே விண்ணப்பித்துக் கொண்டும் பார்த்தான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாகப் பம்பாய் வாழ்க்கை அவன் மனத்தைக் கவர்ந்து விடவே, அவன் அதற்கு அடிமையாகி விட்டான். பணக் கஷ்டம், இடக் கஷ்டம் எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு 'பம்பாய் வாழ்க்கை' என்றும் பெருமையாக எண்ணத் தொடங்கி விட்டான்.

இப்பொழுது இடக் கஷ்டமும் தீர்ந்து, அதனால் கொஞ்சம் பணமும் மிச்சம் என்ற நிலை ஏற்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் இப்படி ஒரு உத்தரவு காத்திருந்தால் !.....தலையைப் பிய்த்துக் கொண்டு 'ஓ' வென்று கதற வேண்டும்போல் அவனுள்ளே ஒரு வெறி பிறந்தது. "நான்ஸென்ஸ் !" என்று இரைந்து கத்தியவாறு கையில் இருந்த காகிதத்தைக் கசக்கி வீசியெறிந்தான்.

"என்னப்பா விஷயம் ?" என்று கேட்டவாறு நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். பிறகு அவர்களாகவே அவன் கசக்கியெறிந்த கடிதத்தை எடுத்துப் பிரித்துப் படித்து விட்டுச் செல்லப்பாவைப் பரிதாபமாகப் பார்த்தார்கள். அந்தப் பார்வையே அவன் ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.

சட்டென்று எழுந்து வெகுவேகமாக நிர்வாகியின் அறைக்குச் சென்றான். அவர் இன்னும் வரவில்லை! திரும்பவும் இடத்துக்கு வந்து உட்கார்ந்து கொண்டு அவருடைய வருகையை எதிர்பார்த்து வழியிலேயே விழியைக் காவல் போட்டிருந்தான். ஆனால், அன்று முழுவதுமே அவர் வரவில்லை !

அன்று மாலை வரை நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தான் செல்லப்பா. அவனை அண்டியவர்களிடமெல்லாம் எரிந்து எரிந்து விழுந்தான். பம்பாயைவிட்டுப் போகவேண்டுமேயென்று நினைக்கும்பொழுது அவனுக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தன. அதுவும் அவன் கேட்டுக்கொண்டபோது செவி சாய்க்காமல் இருந்து விட்டு, இப்பொழுது திடீரென்று அவர்களாகப் 'போ' என்று அனுப்பிய உத்தரவைக் காணும் போது, அவனுக்கு அந்தக் காரியாலயத்தையே தீர்த்துக் கட்டி விடலாமா என்று தோன்றியது.

மாலையில் காரியாலயத்தை விட்டு வெளியே வந்ததும் நேராக நிர்வாகியின் வீட்டுக்குச் சென்றான். நிர்வாகி ஒரு தமிழர். சத்தியம் என்று பெயர். மிக

வும் நல்ல மனிதர். செல்லப்பாவைக் கண்டதும், "வாங்க, மிஸ்டர் செல்லப்பா!..." என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றார். செல்லப்பா வாய் திறந்து எதுவும் பேசாமல் தனக்கு வந்திருந்த மாற்றல் உத்தரவை எடுத்து அவரிடம் நீட்டினான். சத்தியம் அதை வாங்கிப் படித்துவிட்டு, "கன்கிராஜுலேஷன்ஸ்!" என்று தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

"என்ன சார் இது? நான் கேட்டுக் கொண்ட போதெல்லாம் சும்மாயிருந்து விட்டு இப்பொழுது...?...." என்றான் வருத்தத்துடன்.

"இப்பொழுதும் நீங்கள் கேட்டுக் கொண்டதுதானே?"

"இப்பொழுது நான் எங்கே சார் கேட்டுக் கொண்டேன்?"

"நீங்கள் கேட்டால் என்ன, உங்கள் மனைவி கேட்டுக் கொண்டால் என்ன?" என்றார் சத்தியம் மெல்லச் சிரித்தபடியே. அவருடைய வார்த்தை செல்லப்பாவைத் தூக்கிவாரிப் போட்டது. "என்னது! என் மனைவி கேட்டுக் கொண்டாளா?" என்றான்.

"ம்....! உங்கள் மனைவி, என் மனைவியிடம் இரண்டொரு முறை ராமமந்திரத்தில் சந்திக்கும்பொழுது சொன்னாளாம். என் மனைவியும் என்னைத் துளைத்தெடுத்து விட்டாள். பிறகுதான் நான் டில்லிக்கு அழுத்தமாகச் சிபாரிசு செய்து எழுதினேன்!" என்றார்.

காலையில் கடிதம் வந்தபொழுது, ஏற்பட்ட அதிர்ச்சியை விடப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது, இப்பொழுது சத்தியம் கூறியது.

'சகுந்தலா ஏன் அப்படிக் கேட்டுக் கொண்டாள்?....'

சகுந்தலா, செல்லப்பாவின் மனைவி. நல்ல அழகி. பரம சாது. அவளிடம் பழகிய எல்லோருமே அப்படித்தான் சொல்வார்கள். செல்லப்பாவின் அபிப்பிராயமும் அதுதான்.

"இப்படி ஒன்றும் தெரியாமல் இருக்கிறாயே!...." என்று அடிக்கடி அவளிடமே கூறுவான். ஆனால், அவளிடம் காணப்பட்ட அந்தக் குழந்தைத் தன்மைக்காகவே அவளை அளவுக்கு மீறி அவன் நேசித்தான்.

அப்படிப்பட்டவள் அவனிடம் கூடச் சொல்லாமல் ஏன் அப்படிக் கேட்டுக் கொண்டாள்?.....

சத்தியத்தின் வீட்டை விட்டுக் கிளம்பிய செல்லப்பா பலவிதமாக யோசித்தவாறு கிங்ஸ் சர்க்கிளிலுள்ள பூங்காவில் வந்து சிறிது உட்கார்ந்தான்.

'இந்தப் பம்பாய் மனிதர்களும், வாழ்க்கையும் அவளுக்கும் பிடித்திருந்தனவே! அப்படியிருக்கையில், ஏன் இப்படிக் கேட்டுக் கொண்டாள்? அதுவும் தன்னிடம் ஏன் சொல்லவில்லை?'

வெகு நேரம் மூளையைக் குழப்பிக் கொண்டபிறகு ஒரு காரணம் புலப்பட்டது. ஒரு வேளை அப்படி இருக்குமோ?...

தன்மீது சந்தேகம்!

திலக் ரஸ்தாவில், செல்லப்பா குடியிருந்த கட்டிடத்துக்கு கீழ்த்தளத்தின் ஒரு பகுதியில் ஆச்சலா என்றொரு மராத்திப் பெண் இருந்தாள். பி.ஏ. படித்தவள். அதிரூபவதி. ரொம்பவும் சகஜமாக எல்லோருடனும் சிரித்துப் பேசிப் பழகக் கூடியவள். செல்லப்பா வேலையாயிருந்த கம்பெனியிலேயே அவளும் வேலையாயிருந்தாள்.



காலையில் வேலைக்குப் போகும் பொழுதும், மாலையில் வீடு திரும்பும்பொழுதும் செல்லப்பாவுடனேயே போய் வருவாள். மற்றெல்லோரையும் விட அவனிடம் இன்னும் கொஞ்சம் தாராளமாகப் பழகுவாள்.

அதனால் ஒரு வேளை?...

அப்படித்தான் இருக்க வேண்டும்!

இந்த முடிவுக்கு வந்ததும் அவன் மனம் அதிக வேதனையை அடைந்தது. 'ஐந்து வருஷ காலமாகப் பழகியும் சகுந்தலா தன்னை இன்னும் புரிந்து கொள்ளவில்லையே!' என்ற அவனுடைய வருத்தம் கொஞ்சம் கொஞ்சமாக எரிச்சலாக மாறி விட்டது.

"நம்மிடம் அவள் கொள்ளும் சந்தேகத்தை அவளிடம் நாம் ஏன் கொள்ளக்

கூடாது?... பாலாஜியிடம் அவள் மட்டும் அவ்வளவு நெருங்கிப் பழகலாமோ?... ...என்னதான் உறவினர் ஆனாலும் பழகுவதற்கு ஒரு எல்லை கிடையாதா? ...அவனைக் கண்ட மாத்திரத்திலேயே அவள் பேச்சும் போக்கும் அலாதியாக மாறி வருகிறதே!..." என்று மனம் போனபடி எண்ணியவாறு உட்கார்ந்திருந்தான். இலேசாகக் குளிர் ஆரம்பிக்கவே, எழுந்து வீட்டை நோக்கி நடக்கலானான்.

பாலாஜி சகுந்தலாவின் மாமா பிள்ளை. ஒரு வருஷத்துக்கு முன்பு உத்தியோகம் தேடிப் பம்பாய்க்கு வந்தான். வந்தவன் முதலில் சகுந்தலாவின் வீட்டில் தான் தங்கினான். இரண்டு மூன்று மாதங்கள் கழித்துத்தான், வேறு தனி அறை பார்த்துக் கொண்டு போனான். ஆனாலும், தினசரி காலை மாலை இரண்டு வேளைகளிலும் செல்லப்பாவின் வீட்டுக்கு வந்து சகுந்தலாவிடம் ஏதாவது பேசாமல் போக மாட்டான். கொஞ்சம் சுவாதீனமாகவே பழகுவான். இவ்வளவு நாட்களாக அதைப் பெரிதாக நினைக்காத செல்லப்பாவின் உள்ளத்தில் இப்பொழுது சந்தேகம் தோன்றியது.

வீட்டை அடைந்ததும் சகுந்தலாவிடம் எதுவும் பேசாமல் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். சாதாரணமாக வீட்டுக்குத் திரும்பியதும் கலகலப்பாக இருப்பவன் ஒரு மாதிரியாக இருக்கவே, "என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?" என்று வியப்புடன் கேட்டாள் சகுந்தலா.

"ஒன்றுமில்லையே!" என்றான்.

"எதுவும் பேசாமல் இருக்கிறீர்களே?"

"பேசப் பிடித்தால் தானே!"

இந்த வார்த்தையைக் கேட்டதும் அப்படியே பிரமித்துப் போய் நின்றுவிட்டாள் சகுந்தலா. பிறகு "ஏன்?" என்றாள் மெதுவாக.

"புருஷனை நம்பாத மனைவியிடம் எந்தப் புருஷனால் மனம் விட்டுப் பேசுவதற்கு முடியும்?"

"அப்படியென்றால்?..."

"உனக்கு என்னிடத்தில் ஏதோ அவநம்பிக்கை என்று அர்த்தம்!"

"அப்படி யார் சொன்னது?"

"ஒருவர் சொல்வானேன்?......அப்படியே யாராவது சொன்னாலும் நம்புவேனா?...உன் செய்கையே அதை நிரூபித்து விட்டதே!"

"நான் அப்படி என்ன செய்தேன்?"

"சத்தியத்தின் மனைவியிடம் போய் இந்த ஊரை விட்டு மாற்றும்படி ஏற்பாடு செய்யக் கேட்டுக் கொண்டாயே, அது ஏன்?...தவறான மார்க்கத்தில் நான் போய்விடாதபடி என்னைக் காப்பாற்றுவதாகத் தானே?" இந்தக் கேள்வியைச் சிறிது கடுமையாகவே கேட்டான் செல்லப்பா. கண நேரம் செயலற்று நின்று கொண்டிருந்தாள் சகுந்தலா. பிறகு மெதுவான குரலில், "உங்களைக் காப்பாற்றுவதற்காக என்று யார் சொன்னது?" என்றாள்.

"பின்னே?"

"என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குத்தான்!" என்றாள் சகுந்தலா. ஒன்றும் புரியாதவகையில் அவளைப் பார்த்தான் செல்லப்பா.

"உங்களுக்குப் புரியாது. பாலாஜி இங்கு அடிக்கடி வருகிறான். ரொம்பவும் சுவாதீனமாகப் பழகுகிறான். பார்ப்பதற்கும் அழகாயிருக்கிறான்...." என்று கூறிச் சிறிது நிறுத்தினாள்.

"இருக்கட்டுமே! எந்தச் சூழ்நிலையில் யாருடன் பழகினால் என்ன?...ஒரு பெண்ணுக்குத் தன் மனத்தில் அல்லவா உறுதி வேண்டும்!" என்று பெரும்போக்காகப் பதில் சொன்னான் செல்லப்பா.

"அந்த உறுதி என்னிடம் உண்டு!"

"பின்னே?"

"உங்களுக்கு என்னிடம் எந்தவிதமான சந்தேகமும் ஏற்பட்டுவிடக் கூடாதே என்றுதான்....புருஷர்கள் மனசே ஒரு தினுசு. ஏதாவது ஒரு சின்ன விஷயத்திலிருந்து பெரிய ஆராய்ச்சி சந்தேகங்கள் எல்லாம் பிறக்கும். அந்த விதமான சந்தேகப் பேயிடமிருந்து என்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகத்தான். அவனை இங்கு வராதே என்று எப்படிச் சொல்ல முடியும்?" என்றாள். இமை கொட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த செல்லப்பாவால், 'உன்னை நான் சந்தேகிப்பேனா?' என்று ஒப்புக்காகக் கூட ஒரு வார்த்தை கூற முடியவில்லை.

"அப்படிப் பார்க்கிறீர்களே?" என்றாள் சகுந்தலா.

"எப்படிப் பார்த்தால்தான் என்ன? என்னை நீ புரிந்துகொண்ட அளவுக்கு உன்னை நான் புரிந்துகொள்ள முடியவில்லை! உன்னைச் 'சாது' என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சகுந்தலா! நீ மிகவும் கெட்டிக்காரி!" என்று கூறியவாறு அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினான் செல்லப்பா



வேண்டாத வேதனை!

— சரவணன்

அந்த ஸ்தாபனத்திலே, மற்றெல்லாச் சிப்பந்திகளைக் காட்டிலும் அதிகமான செல்வாக்கைப் பெற்றிருந்தவர் வேதாந்தம். அவரைவிட பழைய அனுபவம் அதிகம் பெற்றவர்களுக்கெல்லாம் மேலாக நம்பிக்கையும் பிரியமும் பெற்றிருந்தார் வேதாந்தம், தம் எஜமானர் ஸ்ரீகண்டனிடம். குறிப்பாக, அந்த காரியாலயத்தில் வேதாந்தம் சேர்வதற்கு ஆறு வருஷங்களுக்கு முன்பு வேலைக்கு அமர்ந்த குமாரசாமிக்குத்தான் நியாயமாக, இந்தக் கௌரவம் கிடைத்திருக்க வேண்டும் என்பது அந்தக் காரியாலயத்தில் வேலை பார்த்துவரும் பலருடைய அபிப்பிராயம்.

ஆயினும் எப்படியோ குமாரசாமிக்குக் கிடைத்திருக்க வேண்டிய கௌரவமும் அந்தஸ்தும் வேதாந்தத்துக்குக் கிட்டின. இதற்குப் பல காரணங்கள் கற்பித்துக் கூறப்பட்டன.

"மிஸ்டர் வேதாந்தம்! ஒரு கல்யாணத்துக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னீர்களே! என் காரை எடுத்துக் கொண்டு போய் வாருங்கள்!" என்பார் ஸ்ரீகண்டன்.

இதைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்து வேலை பார்க்கும் குமாரசாமியின் உள்ளம் குமையும். அன்றொரு நாள் பஸ் நிற்குமிடத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தார் குமாரசாமி. அப்போது அவ்வழியே காரில் போய்க்கொண்டிருந்தார் ஸ்ரீகண்டன். குமாரசாமி பஸ்ஸுக்குக் காத்திருப்பதையும் கவனித்தார். அவர் குமாரசாமியின் வீட்டைக் கடந்துதான் தம் பங்களாவுக்குச் செல்ல வேண்டும். விருப்பம் இருந்திருந்தால் அவரைக் காரில் ஏற்றிக் கொண்டு போயிருக்கலாம்! அதே ஸ்ரீகண்டன், வேதாந்தத்துக்குத் தம் காரில் போக அனுமதி கொடுக்கிறார்! ஏன் மனம் குமையாது?

ஒரு வாரம் ஸ்ரீகண்டன் வெளியூர் செல்ல நேர்ந்தது. அப்போது வேதாந்தத்தையே காரியாலயத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு ஏற்பாடு செய்து விட்டுச் சென்றார்.

வேதாந்தம் மிக்க ஜரூர் காட்டினார், காரியாலயத்தில். குமாரசாமியின் பாடு பெரும் தர்மசங்கடமாக இருந்தது. ஸ்ரீகண்டனிடம் கேட்க வேண்டிய ஆலோசனைகளையெல்லாம் இப்போது அவர் இல்லாததால், வேதாந்தத்தைக் கேட்கும்படி நேரிட்டது. அது அவருக்கு வெறுப்பையளித்தது. எஜமானர் வேதாந்தத்துக்குக் கௌரவம் கொடுத்து நடத்தினாலும், குமாரசாமியின் மனத்திலே, வேதாந்தம் தம்மைவிட மட்டமானவன் என்ற எண்ணம் விழுந்து விட்டதால் அவரைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

மேலும் அன்று ஒரு சம்பவம் நிகழ்ந்து விட்டது. வேதாந்தம் குமாரசாமியை அழைத்து, பாங்கிக்குச் சென்று ஐயாயிரம் ரூபாய் மாற்றிக் கொண்டு வரும்படி கூறினார். தொகை அதிகமாக இருக்கவே, ஒரு வாடகைக் கார் வைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார் குமாரசாமி.

அதற்காக வேதாந்தம், "ஸார்! நீங்கள் பஸ்ஸில் வந்திருக்கலாம். டாக்ஸிச் செலவு அனாவசியம் என்று தோன்றுகிறது" என்றார் குத்தலாக.

பொங்கி வந்தது கோபம் குமாரசாமிக்கு. எனினும் நிலைமையைக் கருதிப் பேசாமல் இருந்து விட்டார். ஆனால் அவரது மனம் மட்டும், 'நீ டிபன் சாப்பிட முதலாளியின் காரை எடுத்துக் கொண்டு மூன்று மைல் தூரத்திலுள்ள மூர்த்தி லஞ்சுஹோமுக்குச் செல்வது மிகவும் அவசியம்; நான் காரியாலயத்தின் பணத்தை ஜாக்கிரதையுடன் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் வாடகைக் காரில் வருவது அநாவசியமா?' என்று எண்ணியது.

அன்றிரவு வீட்டுக்கு வந்த குமாரசாமியின் மனம் தவித்துத் தத்தளித்தது. 'தம்மைவிட வயதிலும் அனுபவத்திலும் சிறியவனும், தமக்குப் பின் வேலைக்கு வந்தவனுமான வேதாந்தத்தின் கட்டளைக்குப் பணிவதா? சீ! என்ன கேவலம்! இந்த வேலை வேண்டவே வேண்டாம். இதை விடப் பத்து ரூபாய் குறைவான வேலை கிடைத்தாலும் போதும்.' - இவ்வித முடிவுக்கு வந்து விட்டார் குமாரசாமி.

மறு நாள் தம் வேலையை ராஜினாமா செய்து விட்டார் குமாரசாமி. உடனே வேறு வேலையும் கிடைத்துவிட்டது. ஒரு

நண்பரின் பொர்சிஜல். சம்பளம் இருபத்தைந்து ரூபாய் குறைவுதான். எனினும், புது எஜமானர் அவரை மிகவும் கௌரவமாய் நடத்தினர்.

என்ன காரணத்தினலோ, குமாரசாமியை எஜமானருக்குப் பிடித்துவிட்டது. வேலைக்கு அமர்ந்த சொற்ப காலத்தில் எஜமானரின் நம்பிக்கையையும் நல்ல அபிப்பிராயத்தையும் சம்பாதித்து விட்டார் குமாரசாமி. எந்த விஷயத்திலும் குமாரசாமியின் ஆலோசனைதான் எஜமானருக்குத் தேவைப்பட்டது.

எஜமானர் லட்சக்கணக்கில் பணத்தை நம்பிக் குமாரசாமியின் பொறுப்பில் விட்டார். காரியாலயத்தில் எல்லா அதிகாரங்களையும் அவருக்கே பூரணமாக வழங்கி விட்டார்.

அதனல் தாபமடைந்த சிலர் அந்தக் காரியாலயத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு இத்தனை அதிகாரங்களும் பெருமையும் குமாரசாமிக்கு ஏற்பட்டது பொறுக்கவில்லை. முக்கியமாக, அதே காரியாலயத்தில் பதினைந்து ஆண்டுகளாக, உழைக்கும் ஜயநாதனுக்கு வயிறு பற்றியெரிந்தது. ஒரு நாள் குமாரசாமி ஜயநாதனை ஒரு குறிப்பிட்ட வேலை செய்யும்படி ஏவினர்.

அவருக்குக் கோபம் வந்து விட்டது. "அதிகாரியின் உத்தரவு கிடைத்தால் தான் செய்வேன். நீர் யார் எனக்குக் கட்டளையிட?" என்றார் துடுக்குடன்.

"அதிகாரியின் கட்டளைதான் இது."

"அப்படியானல் நான் அவரையே கேட்கிறேன்!" என்று கூறிவிட்டு, 'விடு விடு' என்று அதிகாரியின் அறைக்குச் சென்றார் ஜயநாதன்.

"சார்! எனக்கு நீங்கள்தான் எஜமானர்; குமாரசாமியல்ல. உங்கள் கட்டளைக்குப் பணியக் காத்திருக்கிறேன். ஆனல் குமாரசாமியின்..." என்று படபடவென்று பொரிந்து தள்ளினர் ஜயநாதன்.

எஜமானர் நகைத்தபடியே, "மிஸ்டர் ஜயநாதன்! உங்கள் போக்கை நானும் சில காலமாய்க் கவனித்துத்தான் வருகிறேன். குமாரசாமியின் மீது நீங்கள் அசூயை கொண்டு விட்டீர்கள். அதற்கு அர்த்தமே இல்லை. உலகத்தில் சிலருக்குச் சிலர் மீது விசேஷமான நம்பிக்கையும் நல்லெண்ணமும் பிறக்கின்றன, அவர்களைப் பார்த்துப் பழகியவுடன். அதனல் மற்றவர்கள் மீது அவர்களுக்குத் தவறான அபிப்பிராயம் என்று கொள்வது பிசகு. வேலையில் மூத்தவன் இளையவன் என்று பாகுபாடு ஏற்படக் காரணமே யில்லை. மனோபாவம்தான் காரணம். குமாரசாமி என் மனத்துக்கு திருப்திகரமாய் நடந்து, என் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் சம்பாதித்துக் கொண்டார். காரியாலய அலுவல்களை மேற்பார்வை யிடுமாறு நான் அவருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். அவர் கட்டளைதான் என் கட்டளை என்று நீங்கள் ஏற்று நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் வேலையை விட்டு விலகிக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை!" என்றார்.

இந்தச் சொற்கள் குமாரசாமியின் மனத்தில் மகிழ்ச்சியை யல்லவா ஏற்படுத்தி யிருக்க வேண்டும்? இல்லை! அதற்கு மாறகச் 'சுருக்'கென்று தைத்தது! தம் பழைய அனுபவங்கள் என்னத்திலே ஊற்றெடுத்தன.



பொறாமைக்கும் அசூயைக்கும் மனத்தில் லவலேசமும் இடமளிக்காமல், தன் கடமையை ஒழுங்காகச் செய்பவன் தான் சிறந்த காரியவாதி!'

இந்தத் தத்துவத்தைப் புரிந்து கொண்ட குமாரசாமி, "நான் ஒரு முட்டாள்!" என்று கூவினர் சூழ் நிலையை மறந்து.

"என்ன, இது? என்னமோ 'நான் முட்டாள்' என்று கத்துகிறீர்களே?" என்று கேட்டுக் குமாரசாமியின் மனைவி அவரை எழுப்பினள்.

கண் விழித்த குமாரசாமி மிரள மிரள விழித்தார்.

"ஒன்றுமில்லை, பங்கஜம்! ஏதோ அசட்டுக் கனவு! சரி! மேஜை மீது ஒரு ராஜிநாமாக் கடிதம் எழுதி வைத்திருக்கிறேன். அதைக் கிழித்துப் போடு!" என்று கூறி விட்டு, மீண்டும் படுத்தார்.


நாகரீகபெண்கள்
நம்பிக்கையுடன்
அணிவது
TRAYONs
"டிரேயான்ஸ்"
ரேயான் நூல்களினால்
நெய்யப்பட்ட
ஆடைகளையே
இந்தியாவில் முதல் முதலாக சிறந்த சோபன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "டிரேயான்ஸ்" ரேயான் நூல்கள்.
"டிரேயான்ஸ்" ரேயான் நூலின் விசேட குணங்கள் - விலைமலிவு - நீண்டகால உழைப்பு - பகட்டான உடைகளுக்கு ஏற்றது.
"டிரேயான்ஸ்" ரேயான் நூல்கள் 120, 150. டினேயர்களில் தயாரிக்கப்பட்டு எங்களால் விநியோகிக்கப்படுகிறது.
ரேயான் டிரேடர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
61, செம்புதாஸ் தெரு, சென்னை-1
தந்தி: "CELYARN"
கிளைகள்:
போன்: 253
தந்தி: "CELYARN"
68/416, மெயின் ரோட்
செவ்வாய்ப்பேட்டை
சேலம்
போன் 598
தந்தி: "CELYARN"
114 A, தெற்குமாசி வீதி
மதுரை
தந்தி: "RAYONS"
அவிநாசி ரோட்
கோவை

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

89. பாம்பு விஷம்

சேலம் ஜில்லாவைச் சேர்ந்த நண்பர் ஒருவர். ஒரு கிராமாதிகாரி. 'கிராம முனிசீப்' என்றால் சிலருக்கு நன்றாய்ப் புரியும். குக்கிராமமொன்றில் கிராம முனிசீப்தான் மகா மகா பெரிய மனிதர். உயர்ந்த அதிகாரி. சிறந்த அறிஞர், கலைஞர் என்றெல்லாம் மதிக்கப்படுபவர். எந்த வீட்டில் என்ன சம்பவமானாலும் சரி; முனிசீப் ஐயாவிடம் தெரிவிக்காமல் இருக்க மாட்டார்கள். ஒவ்வொன்றிலும் தன் மூலமாக எதிர்பார்க்கும் உதவியை இந்த முனிசீப் ஐயாவும் செய்யாமல் இருக்கமாட்டார்.

குறிப்பிட்ட இந்நண்பர் தமது கிராம வாசிகளுக்குத் தேவையான வைத்திய வசதிகளைச் சக்திக்கு இயன்ற வரையில் செய்து வருபவர். கல்கியின் நாட்டு வைத்தியக் கட்டுரைகள் இத்துறையில் இவருக்குப் பேருதவியா யிருந்துள்ளன. இதற்காக நண்பர் தமது 'நன்றிகளை'த் தெரிவித்து விட்டு, பாம்பு விஷத்துக்குச் சிறந்த மருந்து - கைகண்டது - தவறாமல் குணப்படுத்துவதொன்றை எழுதும்படி கேட்டிருந்தார்....இல்லை, இல்லை, பணித்திருந்தார். இவர் ஊரில் பாம்புக்கடிகள் அடிக்கடி ஏற்படுவதா யிருக்கலாம். "பணம் சம்பாதிப்பதற்கல்ல. பரோபகாரமாகத் தொண்டு புரியத்தான்" என்றும் எழுதினார்.

பாம்புக் கடிக்கு வைத்தியஞ் செய்பவனானாலுஞ் சரி - பிரதிபலனாக ஒரு சல்லிக் காசுகூட வாங்க மாட்டான். இது நம் நாட்டு மரபு. ஆகவே இந்நண்பர் அளித்துள்ள உறுதிக்கு அவசியமே இல்லை.

பாம்பு கடித்தது என்று சிகிச்சைக்கு வந்தால், ஏதோ இந்த மருந்தைக் கொடுங்கள் என்றால் போதுமா? கட்டாயமாக இதனால் விஷம் நீங்கும் என்ற நிச்சயத்தோடு - பலன் தரும் மருந்தைத் தானே கொடுக்க வேணும்? ஜுரமா? அதிசாரமா? 'இரண்டு நாட்கள் அல்லது 2 வேளை கொடுத்தோம். குணமில்லை. வேறு வைத்தியனிடம் செல்லலாம்' என்பது போன்ற முயற்சிகளுக்கு இடமளிக்காதல்லவா இந்த 'ஸர்ப்ப விஷம்' என்னும் 'கேஸ்'. ஆகவே, "ஐயா! இதில் சாஸ்திரத்தைப் படித்து, பாட்சையில் தெரிவதைத் தவிர சிறிதுகூட எனக்கு அநுபவம் ஏற்பட வாய்ப்பு உண்டானதில்லை. ஏட்டுச்சுரைக்காயை எப்படி உங்களுக்கு உதவி புரிவது? ஆனாலும் இவ்விஷயமாகப் பிறரையும் கலந்து உபயோககரமான முறை ஏதாவது ஏற்படுமானால் கல்கியின் வாயிலாகத் தெரிவிக்கிறேன்" என்று நண்பருக்குப் பதில் எழுதி யிருந்தேன்.

இப்போது இவ்விஷயமாகத் தெரிவிக்கக் கணிசமான நம்பிக்கையுள்ள விவரங்கள் கிடைத்திருப்பதால் அதைத் தெரிவிக்கும் அவசியம் ஏற்பட்டது.

சர்ப்பங்களில் எல்லாமே விஷமுள்ளவையல்ல. விஷமில்லாத பாம்புகளும் உண்டு. 'அவை கடித்தால் விஷமே இருக்காதே! சிகிச்சை எதற்கு?' என்று கேட்கலாம். ஆனால் பாம்பு கடித்தது என்றதுமே 'தாம் பிழைக்கப் போவதில்லை' என்ற எண்ணம் அல்லவா கடிக்கப்பட்டவனுக்கு உண்டாகிறது? ஏன்? சொல்லப் போனால் கடித்தே இருக்காது. இன்னும் சொல்லப் போனால் பாம்பே இருக்காது. இருட்டில் ஒரு கயிற்றை மிதித்திருப்பார்...பாம்பு என்று பயந்து கூச்சலிட்டுத் தம்மைக் கடித்திருக்குமோ - கடிக்காமல் இருக்குமா? கடித்துத்தானிருக்கும் என்பது போன்ற எண்ணங்களை இமைக்கும் நேரத்தில் ஓட்டிவிட்டுத் தம்மை அந்தப் பாம்பு கடித்து விட்டதாகவே எண்ணி விடுவார். கூச்சலைக் கேட்ட உற்றார் உறவினர் விளக்கு, தடி, தாம்புகளுடன் வரும் முன்பே மனுஷ்யர் மூர்ச்சை போட்டு விழுந்திருப்பார். பார்க்கப் போனால் சர்ப்ப விஷத்தின் குறிகள் யாவும் அவனிடம் காணப்படும். இதை என்னவென்பது? மனப்பிராந்தி. இவ்வினத்தைச் சேர்ந்த சில விஷக்கடி கேஸ்களும் வரலாமே!

கடித்துள்ள இடத்துக் காயத்தைப் பார்த்தே இது விஷமுள்ள பாம்பின் கடி, இது விஷமில்லாத பாம்பின் கடி என்று சொல்லி விடலாம். விஷமில்லாத கடி என்று கருதிச் சிகிச்சை செய்யாமல் இருப்பதற்கு மனம் வருமா? அல்லது தைரியம்தான் வருமா?

விஷமுள்ள பாம்புங்கூடச் சில சமயம் தனக்குள்ள ஆகாரமென்று எண்ணி ஒருவரின் கால் விரலைத் தொட்டிருக்கலாம். இதையும் கடிவாய்க் காயத்தைக் கண்டு தெரிந்து கொள்ளலாம். சாஸ்திரம் வரை இவை யாவும் கணகச்சிதமாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. இக்கடியில் விஷமில்லை. ஆகவே சிகிச்சை வேண்டாமென்று எந்த வைத்தியன் தான் சொல்லத் துணிவான்? 'விஷமில்



மதுரை ஜில்லா பளு தூக்குவோர் சங்கத்தின் ஆதரவில் உடலழகுப் போட்டி சமீபத்தில் நடைபெற்றது. மதுரை நவீன தேகப்பயிற்சி கலைமன்றத்தைச் சேர்ந்த திரு கூத்துவன வாசன் 'திருவாளர் மதுரை' என்னும் பெருமையை அடைந்தார்.

லாத கடியாம். மருந்து வேண்டாமாம்' என்று எந்தக் கடிபட்ட மனிதன்தான் சும்மா இருப்பான்? மேலும் அவனைச் சேர்ந்தவர்களோ? ஒருகால் சந்தேகத்துக்குச் சிறிது விஷமிருந்து அது இந்த வைத்தியனுக்குத் தெரியாமல் போய் இருக்கலாம். அப்படியானால்...? என்று எண்ணத் தொடங்குவார்களல்லவா? ஆகவே பாம்புக் கடி என்றதும் மருந்தைக் கொடுத்தாக வேண்டியதுதான். ஒருகால் விஷமற்ற பாம்புக் கடியானாலும், பாம்பே இல்லாமல் தாம்பினால் ஏற்பட்ட பிரமை காரணமாக ஏற்பட்ட விஷக் குறிகளுள்ளவனானாலும் மருந்தைக் கொடுத்தால் [கொடுக்காவிட்டால் எப்படியோ அப்படியே] குணமாகி விடும். மருந்துக்கே அவசியம் இல்லாத இடத்தில் இந்த வைத்தியரின் மருந்துகள போடு போட்டதாக மருந்தையும் வைத்தியனையும் உலகம் போற்றும். 10 - 20 விஷமில்லாக் கடிகள் இப்படிக் குணமாகும் நிலையில் நிஜமாகவே ஏற்படும் விஷக்கடி மருந்து வேலை செய்யாத காரணத்தால் மரித்துப் போகுமானாலும்; வைத்தியரையோ, மருந்தையோ உலகம் குறை கூறாது. எத்தனை பேரை அவர் குணப்படுத்தி யிருக்கிறார். 'இவனுக்கு ஆயுள் இவ்வளவுதான்- அதற்கு வைத்தியர்தான் என்ன செய்வார்? மருந்தைக் குறைசொல்லி என்ன பலன்!' என்று உலகம் சொல்லும்.

இதெல்லாம் இருப்பினும், பாம்புக் கடிக்கு நம்பிக்கையான மருந்து என்பது ஒன்று இரண்டாவது நிச்சயமாகத் தெளிந்ததா யிருக்குமானால் அதைச் சொல்வதுதான் முறை.

பாம்பு கடித்ததும் அதன் விஷம் தேகத்தில் பரவுகிறது. இதை விஷவேகம் என்று சாஸ்திரம் சொல்கிறது. ரத்தத்தில் சேரும் விஷம் மாம்ஸம், மேதஸ் என்று ஒவ்வொரு தாதுவுக்கும் உள்ளே பரவிக் கடைசியில் இருதயத்திலும் வியாபித்து - ஓஜஸ்ஸை முறித்துப் பிராணனைப் பற்றும். இப்படிச் சரீரத்தில் விஷம் வியாபிப்பதை விஷ வேகங்கள் என்பர். விஷ வேகங்கள் 7. ஒவ்வொரு வேகத்திலும் என்னென்ன குறிகள் ஏற்படுமென்று விளக்கி அதற்குத் தக்க சிகிச்சைகளையும் சாஸ்திரம் தெரிவிக்கிறது.

'விஷமா? விஷம் இல்லையா?' என்று கூடப் பாராமல் பாம்புக் கடி என்றதும் மருந்தைக் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் உள்ளபோது, 'எந்த வேகத்தில் பாம்பு விஷம் இருக்கிறது? அதற்குச் சிகிச்சை என்ன?' என்பது போன்ற விசாரணைகளுக்கு இடம் ஏது?

ஸத்யக்கரணீயம்: பாம்பு கடித்தது- என்றதுமே செய்ய வேண்டிய முதலுதவி (First aid) என்று சில உண்டு. இவற்றை நமது சாஸ்திரத்தில் "ஸத்யக் கரணீயம்" (ஸத்ய: உடனே, கரணீயம்: செய்யத் தக்கது) என்பர்:

கடித்த இடத்துக்குச் சிறிது மேலே கயிற்றால் வரிந்து கட்டுவது.

கடிபட்ட இடத்தில் கத்தி கண்ணாடிச் சில்லிகளால் கீறி விட்டு ரத்தத்தை ஒழுகச் செய்வது.

கடித்த பாம்பை உடனே எடுத்துத் துண்டு துண்டாகக் கடித்துத் துப்புவது- இது கிடைக்காவிடில் அருகில் கிடக்கும் தாம்பு, கயிறு, குச்சி, கல், மண்ணாங்கட்டி எதையாவது எடுத்துத் தன்னைக் கடித்த பாம்பு என்ற எண்ணத்துடன் மேற் சொன்னவிதம் கடித்துத் துப்புவது. இப்படிப் பல உண்டு. இவ்வாறு சாஸ்திரம்.

இவற்றையெல்லாம் செய்தாலும் மனம் சமாதானமுறுமா? ஒருகால் சிறிது விஷம்.....என்று அல்லவா எண்ணச் செய்யும்?

ஆகவே, சிகிச்சை மருந்து என்பது மிகவும் அவசியமாகி விடுகிறது. அதுவும் நிச்சயமாகவும் விஷத்தைப் போக்கும் என்று தெளிந்ததாயிருத்தல் வேணும்.



தூண்டும் கைவிளக்கு

பி.வி.ஆர்.

மணி பத்து.

விமலாவுக்கு அலுப்புத் தட்டியது. தினம் தினம் கணவன் பத்து மணிக்கு மேலே வந்தால்?...அவளும் அவனும் ஒரே சமயத்தில்தான் காரியாலயத்தை விட்டுப் புறப்படுகிறார்கள். அவள் ஐந் தரைக்கே வீட்டை யடைந்து, பாலைக் காய்ச்சி, சமையலையும் முடித்து எட்டு மணிக்குத் தயாராகிறாள், சாப்பாட்டுக் கடையை மூட. ஆனால் அவன்?...சினிமா என்றும், சீட்டாட்டம் என்றும் நேரத்தையும் உடம்பையும் மனசையும் வீணாக்கிக் கொண்டு....

'சே! எத்தனையோ சொல்லியாகிவிட்டது. அவள் உள்ளத்தை அவன் ஏன் புரிந்து கொள்ளுவதில்லை? இல்லை, புரிந்தும்தான் அசட்டை செய்கிறானா?'

கதவைத் தட்டும் ஒலி திடீரென்று எழுந்தது.

விமலா எழுந்தாள்; மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள்.

அவன் உள்ளே வந்தான். அவளுடைய அசாதாரண அமைதியும், மௌனமும் அவனை ஒருகணம் தூக்கிவாரிப்போட்டாலும் இயற்கையான அலட்சியத்தில், "நீ இன்னும் சாப்பிடவில்லையா?" என்றான்.

அவள் பதிலளிக்காமலே தட்டுகளை எடுத்து வைக்கலானாள்.

இருவருமாகச் சாப்பிட்டார்கள்.

அவன் அறைக்கு அவள் வந்த போது, "கால் கடுக்கிறது, விமலா!" என்று சொல்லிக் கொண்டே படுக்கையில் மெதுவாக உட்கார்ந்தான்.

விமலா அவன் அருகில் அமர்ந்தாள்.

"கடுக்காமல் என்ன செய்யும், சும்மா ஊர் சுற்றிக்கொண்டிருந்தால்?" என்றாள். அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பு அவளது எரிச்சலை வளர்த்தது.

"ஏன் சிரிக்கிறீர்கள்? பத்து வருஷங்களாகக் குமாஸ்தாவாக இருந்தும் சிரிப்பு மாயவில்லையே? ஒன்றுக்கும் உதவாதவன் எல்லாம் விழுந்து விழுந்து படித்து ஆபீஸ் பரீட்சை எழுதி சூபரின்டென்டாகி விடுகிறான்!"

"அவனவன் பண்ணின அதிர்ஷ்டம். நம்ம ஆபீஸில் குமாஸ்தாவாக இருப்பதுதான் நல்லது. செய்ய வேண்டியதைச் செய்து போட்டு விட்டு...."

"போதும். ஓயாய்யாக ஐந்துமணிக்கே மேஜையின் மேலே எல்லாப் பைல்களையும் தாறுமாறாகப் போட்டு விட்டு, 'கிளப்' என்றும் சினிமா என்றும் ஓடலாம். நாற்பது வயதிலேயும் உங்களைப் பார்த்துக் 'குமாஸ்தா' என்றால் ரத்தம் கொதிக்காது?"

"விமலா! தூக்கம் வருகிறது!"

"இன்டர்மீடியட் பாஸ் செய்த சுப்புராமன் உங்களுக்கு அப்புறம் சேர்ந்தவன்...கேதாரம் பி. ஏ. வகுப்பில் மூன்று தடவைகள் 'கோட்' அடித்தவன். அவர்களெல்லாம் இப்போ எப்படியிருக்கிறார்கள்? அவர்களிடமெல்லாம் நீங்கள் வேலை செய்கிறதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடிவதில்லை."

"சரி, ராஜிநாமா செய்து வேறு ஆபீஸ் பார்க்கிறேன்!"

"அப்போதும் படிக்கிறேன் என்று நீங்கள் ஒரு வார்த்தை ஆதரவாகச் சொல்ல மாட்டீர்களா?"

"ஏது நேரம்?"

"காலையில் ஐந்து மணியிலிருந்து எட்டு மணி வரையில் படியுங்கள். சீட்டாட்டத்துக்கு ரஜா கொடுங்கள். ராத்திரி ஏழரையிலிருந்து ஒன்பது மணிவரை காரியாலயப் புத்தகங்களைப் படியுங்கள். உங்களுக்கு உடம்பிலே வலு இல்லையா, தலையிலே மூளையில்லையா? மனம் வைத்துப் படித்தால், உங்களுக்குத் தேர்வு இல்லாமல் யாருக்கு?"

"மனசுதானே இந்தப் பாழாய்ப் போகிற ஆபீஸ் புத்தகங்களைத் தொட விடமாட்டேன் என்கிறது!"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போ, 'விமலாவும் அவள் கணவனும் குமாஸ்தாக்கள்' என்று சொல்கிறார்கள். அது மாறி, விமலாவின் புருஷன் ஒரு பிரிவுக்குச் சூபரின்டென்டு என்று கூற வேண்டும்!" என்றாள் விமலா. அவன் வாயைத் திறக்கவில்லை.

அலாரம் அடித்தது.

"என்னைத் தொந்தரவு செய்யாதே!" மார்கழி மாதத்துக் குளிரில் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு ஈசுவரன் முணுமுணுத்தான்.

விமலா போர்வையை முரட்டுத்தனமாக இழுத்து உதறிப் போட்டாள்.

"உம், இந்தாருங்கள் காப்பி!"

அவளுடைய அதிகாரத்தை எதிர்த்து அவளைத் துண்டம் துண்டமாக வெட்டிப் போட, சோம்பேறி அரக்கன் விரும்



பின்னும், அவன் எப்படியோ எழுந்து முகத்தைக் கழுவி விட்டு வந்தான்.

அவளும் அவனுமாகப் பத்து நாட்கள் படித்தார்கள்.

"இன்னும் ஐந்து மாசம்தான் இருக்கிறது. நாம் இரண்டு பேரும் சேர்ந்து பரீட்சை எழுதலாம்!"

எந்த உற்சாகத்தில் விமலா சொன்னளோ, அதில் மண் விழுந்தது.

ஏதோ வெறியில் படித்த அவனுக்குக் காரியாலயப் புத்தகங்கள் புளித்தன. மீண்டும் பழைய சோம்பேறித்தனம் தலையெடுத்தது.

"சீ! வெறும் பணத்துக்கும் அந்தஸ்துக்கும் நான் பேராசைப்பட முடியாது" என்றான் அவன்.

"நாளைக்கு நமக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து, செலவும் அதிகமாகப் போகும்போது, கடன் இல்லாமல் மானமாக வாழ எது அவசியம்? பணமா, இல்லை உங்கள் 'கிளப்' வாழ்க்கையா? சினிமாவா, சீட்டாட்டமா? இல்லை, அதிகச் சம்பளமா?"

அவன் மசியவில்லை.

விமலாவுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. காரியாலயத்தில் தான் கணவனுடன் சேர்ந்து படிப்பதைச் சிநேகிதிகளிடம் பிரகடனப்படுத்திப் பெருமைப்பட்டுக் கொண்டதை நினைத்தபோது ஆத்திரம் இன்னும் அதிகமாகி விட்டது.

'தன் கணவனை எப்படி மசிய வைப்பது?' என்று என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தாகி விட்டது. பயனில்லை. ராஜிநாமா செய்து விடப் போவதாகக்கூடப் பயமுறுத்தினுள். அந்தச் சமயத்தில் ஏதோ முகம் கவிழ்ந்ததே தவிர அவளுடைய அந்தரங்க ஆசையை அவன் உணர்ந்து கொள்ளவில்லை.

பரீட்சை ஒரு விசேஷப் பரீட்சை. குமாஸ்தா பதவியில் இருப்பவர்கள்தேறினுல், சூபரின்டெண்டு பதவி தானுகத் தேடி ஓடி வரும். யாராலும் நிறுத்த முடியாது. தேருவிட்டாலோ, யாருடைய சிபாரிசும் செல்லாது. நல்ல உழைப்பும் கவனமும் இருந்தால் தேறுவது சுலபம். ஆனுல் அந்த இரண்டும்தான் ஈசுவரவிடம் பெயருக்குக்கூட இல்லை.

விமலாவுக்கு எண்ணி எண்ணி அலுப்புத்தான் கண்டது. கலியாணமான புதிதில் இருவரும் எத்தனையோ இன்பமாக வாழ்க்கையை நடத்தியிருக்கிருர்கள். உண்மையில் அவள் குமாஸ்தாவாகக் காரியாலயத்தில் காலடி வைத்தபோது, ஈசுவரன் தான் வேலையைக் கற்றுக் கொடுத்திருக்கிறுன். அவளுடைய சுறுசுறுப்பையும், புத்திக் கூர்மையையும் கண்டு வியந்திருக்கிறுன். அந்த வியப்பேதான் நாளடைவில் அன்பை ஊற்றெடுக்கச் செய்து, இருவரையும் வாழ்க்கையில் தம்பதியாக்கி யிருக்கிறது.

விவாகத்துக்கு முன்பெல்லாம் அடிக்கடி, "நீங்கள் ஏன் பரீட்சை எழுதவில்லை?" என்று கேட்பாள். அதற்கு அவன், "சம்பளம் அதிகம். அந்தஸ்தும் ஒரு படி அதிகம். ஆனுல் வாழ்க்கை எளிதில் புளித்து விடும்" என்பான்.

'எப்படி?' என்று கேட்டால், "வேலை பொறுப்பு வாய்ந்தது. பொறுப்பை ஏற்றுக் கொண்டால் மூளை குழம்பும். ஏற்றுக்கொள்ளா விட்டால் சிதற வைக்கும்!" என்று பதில் அளிப்பான்.

முதலில் கேலியில் நகைத்தாலும், அவன் சொல்லுவது முற்றிலும் சரியல்ல என்று பட்டது. சம்பளத்துக்கு ஏற்ற வேலை அதிகரிப்பும் பொறுப்பும் இல்லாமல் இருக்குமா?

விவாகமான புதிதில் காரியாலயத்தைப் பற்றிப் பேசாவிட்டாலும், இரண்டு வருஷங்களுக்குள் விமலாவுக்கு எல்லாம் புரிந்து விடவே, பேச ஆரம்

பித்தான், தூண்டினுள், நச்சரித்தாள். அவீன் சூபரின்டெண்டாக இருந்தால் தனக்குப் பெருமை என்றுள். ஆனுல் ஒன்றிலும் பயன் கிடைக்கவில்லை.

பழைய ஈசுவரன் பழைய ஈசுவரனுகவே இருந்தான்!



ஒரு நாள். அவன் இரவு பத்தரை மணிக்கு வந்தான்.

"அம்மாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது!" என்று விமலா ஆரம்பித்தாள்.

"எந்த அம்மா? என் அம்மாவா, உன் அம்மாவா?"

"எல்லாம் என் அம்மாதான்!"

"சரி, முக்கியமான விஷயம் ஏதாவது இருக்கிறதா? தூக்கம் வருகிறது..."

"இருக்கிறது! நான் போய் ஒரு மாதமாவது அவளுடன் சேர்ந்திருக்க வேண்டுமாம்!"

"சரி! போய் இரு!"

"நீங்கள்?"

"என்னைப் பற்றிக் கவலைப் படாதே! இப்போதுதான் சங்கீத சீஸன் முடிந்து, கிரிக்கெட் சீஸன் ஆரம்பித்திருக்கிறதே!"

விமலாவுக்கு ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக் கொண்டு வந்தன.

"ஏப்ரல் கடைசியில் பரீட்சை...' அது தெரியுமா உங்களுக்கு?"

"அது கெட்டது, போ!"

'ஒரு மாதம்' என்று போன விமலா நாற்பத்தைந்து நாட்களுக்குப் பிறகுதான் மதுரையிலிருந்து திரும்பினுள். சொல்லாமல் காலையில் ஏழரை மணிக்கு வந்து இறங்கிக் கதவைத் தட்டியபோது, ஈசுவரன் படுக்கையினின்றும் எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

"என்ன, விமலா! நீ கடிதமே போடவில்லையே?"

"நேரம் இல்லை!" என்று அவள் சிரித்தாள்.

அன்று இரவு அவன் வந்தபோது அவள் படித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன ஆபீஸ் புத்தகங்களைக் கட்டிக் கொண்டு அழுகிருய்?"

"ஆமாம்! அதுதான் என்னை நாளைக்குச் சிரிக்க வைக்கும்..."

மறு நாள்.

காலை ஐந்து மணிக்கு அலாரம் அடித்தது. விமலா எழுந்து விளக்கைப் போட்டுக்கொண்டு படிக்க ஆரம்பித்தாள். "விமலா! என்ன செய்கிருய், விளக்கைப் போட்டுக் கொண்டு?" -- ஈசுவரனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"படிக்கிறேன்!"

"காலங் கார்த்தாலேயா?"

"ஆமாம்! பரீட்சைக்கு இரண்டரை மாதம்தானே இருக்கிறது?"

"நீ எழுதப் போகிருயா?"

"சந்தேகம் என்ன...! நான் படிக்கும்...தொந்தரவு செய்யாதீர்கள்!"

இரண்டு நாட்கள் சென்றன. இரவிலும் அதிகாலையிலும் விமலா விழுந்து விழுந்து படித்தாள்.

ஈசுவரனின் உள்ளத்தில் பிரளயம் பிறந்தது.

பத்து வருஷங்களுக்கு முன்னுல் குமாஸ்தாவாக இருந்த அவன் அப்படியே இருக்க, நான்கு வருஷங்களுக்கு முன்னுல் சேர்ந்த அவன் மனைவி சூபரின்டெண்டாக வருவதா?

பிரளயத்தில் பிரளயம் பிறந்தது. அவன் மனம் எதிலும் ஈடுபடவில்லை.

"உண்மையாகவே நீ பரீட்சை எழுதப் போகிருயா?"

"பின் எதற்கு ரஜா எடுத்து மதுரைக்குப் போனேன் என்று நினைக்கிறீர்கள்..?"

"அப்போ, நீ என்னை விட...,"

"ஆமாம், உயர்ந்த பதவிக்கு வருவேன்...வந்தால் என்ன? உங்கள் அன்பும் என் அன்பும் மாறுமா?"

"அதற்கில்லை...கேட்டேன்! நன்ருகப் படி..." என்ருன் ஈசுவரன்.

"படிக்கிறேன். படித்தால்தானே தேர்வு கிட்டும்! யாராவது ஒருவர் சூபரெண்டெண்ட் ஆகவேண்டாமா?"

"ஆமாம், நீ என்றைக்குப் 'பாஸ்' செய்கிறாயோ, அன்றைக்கு நான் வேலையை ராஜினாமாச் செய்கிறேன்!"

அவன் ஏதோ அந்த வேளைக்கு ஆண்மையின் கர்வத்தில் வார்த்தைகளை உதிர்த்தானே தவிர, மனமெல்லாம் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

மறு நாள்.

"விமலா! நான் ஒன்றரை மாதம் 'லீவ்' எடுத்து விட்டேன்"

"ஏன்?"

"அம்மாவைப் பார்க்கப் போகிறேன்..."

"சேலத்துக்கா?"

"ஆமாமாம்!"

"ஏன்?"

"நீ இப்படிப் படித்துக் கொண்டிருப்பதை நான் பார்த்துச் சகிக்க வேணுமா?"

"நான் எப்படித் தனியாக இருப்பேன்?" என்றாள் விமலா.

"அதுதான் உங்களுக்கென்று ஹாஸ்டல் இருக்கே. அதில் இரண்டு மாதங்கள் தங்கியிரு..."



அவள் உடனேயே 'சரி' என்றாள்.

'ஒன்றரை மாதங்கள்' என்று போனவன் ஐம்பது நாட்களுக்குப் பிறகுதான் திரும்பினான். இனம் அறியாத வைராக்கியமும் திடச் சித்தமும் அவனை வேறு ஆளாக மாற்றியிருந்தன. காரியாலயத்தில் யாரிடமும் அதிகம் பேசவும் இல்லை; வெளியில் சுற்றவும் இல்லை.

அவனும் அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்து படிப்பதைக் கண்ட விமலா, "ஏன் பரீட்சை எழுதப் போகிறீர்களா?" என்று கேட்டாள்.

"எல்லாம் போகப் போகத் தெரியும்!" என்று பதிலளித்தான்.

"ஏன் இந்தக் கோபமும் வெறுப்பும்?"

"உன் மேல் என்ன கோபம், வெறுப்பு...! படித்த பெண்கள் புருஷனை மதிக்க மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரிந்து விட்டது!"

"நான் மதிக்கவில்லையா?"

"மதிக்கிறாயோ இல்லையோ, உன் மனச்சாட்சியைக் கேள்!"

"நீங்கள் பரீட்சை எழுதாதபோது, நான் எழுத, அது அவமதிப்பு என்று நீங்கள் கருதினால்...?"

"சரி, சரி! போதும்!" அவள் வாயை அடைத்தான் அவன்.

பரீட்சை நாள் வேகமாக நெருங்கிக் கொண்டே வந்தது. இருவரும் இந்த உலகிலேயே இல்லை.

இருவரும் பரீட்சைக்குப் படித்தார்களே தவிர அதைப்பற்றி அளவளாவவேயில்லை. தனக்கு ஏதாவது புரியாது இருக்கிறதோ, அது அவளுக்குத் தெரிந்து விடுமோ என்று ஈசுவரன் மனத்துள் பயந்து கொண்டிருந்தான். அவளும் அவனை அணுகவில்லை.

பரீட்சை நாளும் பிறந்தது.

அவன் ஒன்பது மணிக்கே சைக்கிளில் புறப்பட்டுப் போனான்.

மூன்று நாட்கள். மூன்று பரீட்சைகள். மூன்று நாட்களும், "நீ எப்படி எழுதினாய். உன்னை நான் பார்க்கவில்லையே?" என்று ஒரு கேள்வியும் கேட்கவில்லை. ஆனால் அவன் தன்னுள் மட்டும் அந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டான்.

நான்காம் நாள் சரியாக நாலு மணிக்கு அலாரம் அடித்தது.

அவன் கண் விழித்தான். சிரிப்புக் குலுங்க அவன் அருகில் விமலா உட்கார்ந்திருந்தாள்.

"கேள்வித்தாள்களை நான் படிக்கணும், எங்கே?"

"ஏன்? நீதான் பரீட்சை எழுதியிருப்பாயே?"

"என்னைப் பரீட்சை ஹாலில் நீங்கள் பார்த்தீர்களா?"

"இல்லை..."

"ஏன்?"

"எதற்குப் பார்க்கணும்?"

"தேடினாலும் நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது!"

"ஏன்?"

"நான் எழுதவில்லை."


அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"ஏன்?"

"எனக்கு சூபரிண்டெண்டு வேலை ஆகவா நான் படித்தேன்!"

அவன் அசந்து போய்ப் படுக்கையில் விழுந்து விட்டான்!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras 10
Managing Editor: T. Sadasivam


இப்பொழுது எலுமிச்சை ரசத்துடன்
டீயைக் குடித்துப் பாருங்கள்
LEMON
எக்காலத்திலும் இது
வசீகரிப்பது! ஒரு
கோப்பை மிகச் சூடான
டீயில் சிலதுளி எலுமிச்சம்பழ
ரசத்தை விட்டு. ருசிக்கேற்ற
வாறு சர்க்கரையைச் சேர்த்து
(பால் கூடாது) கலக்கி டீயின்
தன்மையுடன் எலுமிச்சம்பழப்
புஷ்டியையும் பருகுங்கள்.
TEA BOARD INDIA
நான் உங்கள் நண்பன்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon